# மகாத்மாவின் புகழ்மாலை

* "ஜெயப்பிரகாசர் ஒரு அசாதாரண மான ஊழியர். சோஷலிஸத் தத்துவத் துக்கே ஒரு ஆதார புருஷர். தீமைகளை யெல்லாம் எதிர்க்கவே அவர் பிறந்துள் ளார். தாய் நாட்டின் விடுதலைக்காகத் தனது என்ற எல்லாவற்றையுமே அவர் தியாகம் செய்துவிட்டார். துன்பங்களைத் தாங்கும் அவருடைய சிந்தையின் வீரத் துக்கு நிகரில்லை."

— **காந்திஜீ**

* 1940 ல், 'ஹரிஜன்' இதழில் ஜெயப்பிரகாசர் கைது செய்யப்பட்டபோது எழுதப்பட்டது.

புரட்சித் தலைவர்

# ஜெயப்பிரகாஷ் நாராயண்

A. 3293.

ஆசிரியர் :

கொடுமுடி ராஜகோபாலன்

கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம் புதுக்கோட்டை ஸ்டேட்.

முதற் பதிப்பு: ஏப்ரல் 47

உரிமை பதிவு

No., 18. (வரலாறு)

விலை ரூபாய் மூன்று
(தபாற் செலவு தனி)

S. I. Press, Karaikudi. R/10. 10-4-47 2200.
கார்த்திகேயினி, இராமச்சந்திரபுரம்

# முன்னுரை

இந்திய தேசிய வாழ்வில் ஜெயப்பிரகாஷ் நாராயண் எந்த ஸ்தானத்தை வகிக்கிறார்? தேசியத்தையும், சர்வ தேசியத்தையும் அவர் எப்படி இணைத்துச் சேவை செய்கிறார்? இன்றைய தேசியத் தலைமைக்கும் அவருக்கும் உள்ள ஒற்றுமைகள் வேற்றுமைகள் எத்தகையன? அவருடைய பிரத்தியட்ச நுண்ணறிவு, கொள்கையுறுதி, நிர்மாண சக்தி இவை தேசீய ஐக்கியத்தையும், ஜன விழிப்பையும் எப்படி உறுதிப்படுத்துகின்றன? என்ற உண்மைகளை இந்த நூல் மூலம் நான் விளக்க முயன்றிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் ஜெயப்பிரகாஷைப் பற்றி எழுதப் பட்டிருக்கும் இந்த முதல் தமிழ் நூல் அவரைப் பற்றிப் பல விரிவான நூல்கள் நம் தாய் மொழியில் வெளி வர ஆர்வத்துடன் வழி காட்ட வேண்டுமென்பது என்னுடைய இதய பூர்வமான பிரார்த்தனை.

இந்தச் சரித்திர நாயகரின் அரசியல் வாழ்வை ஒட்டிய சம்பவங்களுக்கும், கருத்துக்களுக்குமே இந்நூலில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆழ்ந்த உணர்ச்சியின் காரணமாக சில இடங்களில் நடையிலும், கருத்துக்களிலும், கடுமை தொனிப்பதை நானே உணர்கிறேன். கருத்துத் தெளிவுக்காகவே அம்மாதிரியான முறையைக் கையாண்டிருக்கிறேன். எவரிடத்திலும் எனக்குக் குரோதம் கிடையாது.

இந்நூலை நானே எழுதி- நானே வெளியிட வேண்டுமென்று என்னை ஆளாக்கிய எங்கள் ஊர் நண்பர்கள், சிறப்பாக கருக்கம்பாளயம் ஸ்ரீ, பொங்கியண்ண கவுண்டர், ஸ்ரீ. ர. ராஜமாணிக்கம், ஸ்ரீ பொன்னய்யா பாரதி என்னைத் தூண்டினார்கள். சிறிது பண உதவியும் செய்தார்கள். ஆனால் என்னால் பிரசுரிக்க முடியாது போய் விட்டது. "எளியவரைத்தான் சட்டம் தண்டிக்கிறது" என்றார் பேராசிரியர் பெர்னார்டு ஷா. அதுபோல, பத்திரிகைக் கோட்டா எனக்கு மறுக்கப் பட்டது. புத்தகத்துக்கென போட்டோக்களுக்காகவும், விசேஷ செய்திகளுக்காகவும் நான், என் நண்பர்கள் கொடுத்த சிறிய தொகையையும் செலவழித்து விட்டேன். இவைதான் நான் பிரசுரிக்க முடியாததின் காரணங்கள். அந்தச் சீரிய நண்பர்கள் என்னை மன்னிப்பார்கள் என்ற நம்பிக்கையில், அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலை கார்த்திகேயினி பிரசுராலயத்தார் வெளியிடுவதற்குக் காரணமாயிருந்த என் உயரிய நண்பர் ஸ்ரீ V. R. M. செட்டியார் அவர்களுக்கும், ஜெயப்பிரகாஷ் நாராயணரைப் பற்றி முதல் தமிழ் நூலை வெளியிட்டுப் பெருமையடைந்த கார்த்திகேயினி பிரசுராலயத்தாருக்கும் என் வணக்கம்.

கடைசியாக இந்நூலை எழுதுவதற்கு வேண்டிய செய்திகளை அனுப்பி உதவி செய்த ஜெயப்பிரகாஷ் நாராயண்; யுஸுப் மேஹரலி, குஸும் நாயர், அவதனந்தன் (காரியதரிசி, தமிழ் நாடு ஹிந்தி பிரசார சபை) முதலியோர்க்கு என் நன்றி உரித்தாகுக.

தமிழ் நூல் நிலயம்
கொடுமுடி
28—2—47

கொடுமுடி ராஜகோபாலன்

A.3293.

இந் நூலை எழுதுவதற்குத் துணையா யிருந்த ஆங்கில நூல்களும், சஞ்சிகைகளும்:—


1. Red Fugitive Jai Prakash Narain—
   H. L. Seth Lahore.
2. Karl Marx—I Berlin.
3. In Defence of Democracy—J. S. Faulton
   and C. R. Morris.
4. Towards Struggle—Jai Prakash Narain.
5. Leaders of India ( I Part )—Yusuf Meherali.
6. 'Harijan' Issues.
7. 'Janatha' Issues.

வாழ வேண்டும்;

வாழ்ந்திருந்து பாடவேண்டும்

**சமர்ப்பணம்**

எல்லா அடிமைத் தளைகளையும் எதிர்த்துப் போராடும் எல்லா வீரர்களுக்கும் இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

தலைவர்களைக் காட்டிலும்

சுதந்திரப் பிரச்னை பெரியது

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்திய லெனின் | 1 |
| 2. | கராச்சி காங்கிரஸும் ஜெயப்பிரகாஷும் | 25 |
| 3. | பிற்போக்கை எதிர்க்கும் வேலையில் | 31 |
| 4. | இந்திய சோஷலிஸ்டுகளின் தலைவர் | 30 |
| 5. | திரிபுரி காங்கிரஸுக்குப் பிறகு | 46 |
| 6. | ஆகஸ்டு புரட்சியின்போது | 52 |
| 7. | ஏகாதிபத்யம் - பாஸிஸத்தின் பரம விரோதி | 91 |
| 8. | சில குறிப்புகள் | 102 |
| 9. | நம்முடைய இந்தியா | 107 |
| 10. | இனி என்ன ? | 119 |
| 11. | பிரிந்து போகத்தான் வேண்டுமா ? | 140 |

# இந்திய லெனின்

இந்திய இளைஞர்களையும், பாட்டாளி மக்களையும் தன்னுடைய தெளிவான அறிவாலும், வீரத் தியாகத்தாலும் கவர்ந்திருக்கும் **புரட்சி வீரர் ஜெயப்பிரகாஷ் நாராயண்,** இந்திய தேசீய முற்போக்கு சக்திகளின் தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

எந்த விலை கொடுத்தும் சமரசம் வேண்டுமென்ற மனோபாவமும், தோல்வியுணர்ச்சியும், தேசீய அணிவகுப்பில் பதவிச் சண்டைகளும், தேசீயப் போர்வையில் சந்தர்ப்ப வாதிகள் அதிகாரம் பெற்றிருப்பதும், பொருளாதார சீர்கேடும், இதைப் பயன்படுத்திக்கொண்டு அராஜகத்தைத் தூண்டிவிடும் குழப்பக்காரர்களின் தொந்திரவும், வகுப்பு வேற்றுமைகளும் நமது தேசீய லட்சியத்தைத் தாமதப்படுத்தக் கூடிய அளவுக்கு இந்நாட்டின் இன்றைய அரசியல் நிலைமை இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டே யாகவேண்டும். இந்நேரத்தில், நம்மைத் தீவிரமான பாதையில் நடத்திச் செல்லக் கூடிய ஆழமான அனுபவம் நிறைந்த தலைவர் ஜெயப்பிரகாஷே என்றாலும் அது மிகை

யாகாது. சுதந்திரம் பாட்டாளி மக்களுக்குத் தான் என்பதில் ஜெயப்பிரகாஷ் ஆழ்ந்த கருத்துடையவர். இவர் ஒரு உறுதியான தேசிய மார்க்ஸீய வாதி; கார்ல் மார்க்ஸின் பொதுவுடைமைக் கொள்கையை தேசீய ரீதியில் அனுஷ்டானத்தில் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கமுள்ளவர். ஒரு கர்ம வீரனின் சீரிய உணர்ச்சிகளையெல்லாம் நாம் இவரிடத்தில் காண்கிறோம்.

இந்த தேசீயப் புரட்சிவீரனின் வாழ்க்கை விவரத்தையும், இவரை இந்த உன்னத நிலைக்குக் கொண்டுவரக் காரணமாயிருந்த தேசீய, சர்வ தேசீயப் போக்குகளையும்(Trends) ஒவ்வொரு இளைஞனும் தெரிந்துகொள்ள வேண்டுவது மிக மிக அவசியமாகும்.

"நம்முடைய அரசியல் வாழ்வில் நாம், உண்மையை விட, கோஷங்களையே பெரிதாய் மதிக்கத் தொடங்கியிருக்கிறோம். கோஷம் என்பது ஒரு சில்லரை நாணயத்தைப் போன்றதாகும். ஒரு கருத்தை மிக ஏராளமான ஜனங்களிடையே பரப்புவதற்காகவே கோஷங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றன. மிக ஏராளமான ஜனங்களிடம் பரவவேண்டும் என்பதற்காக கோஷங்களை மிகவும் எளியவைகளாகத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. அப்படி அவை எளியவையாயிருப்பதற்காகப் பெரும்

பாலும் அந்த கோஷங்களிலே போலி வார்த்தைகளைச் சேர்த்துவிடுகிறோம்!" என்று ஸ்ரீ.K. M. முன்ஷி தன்னுடைய **'அகண்ட் ஹிந்துஸ்தான்'** என்ற ஆங்கிலப் புத்தகத்தில் ஒரு அத்தியாயத்தில் எழுதியிருக்கிறார்.

இது முற்றிலும் உண்மையே. இம்மாதிரியான போலி கோஷங்களால் ஜனங்கள் மயங்கி ஏமாந்து விடுவதை நாம் பார்த்துக்கொண்டுதானிருக்கிறோம். இதன் விளைவாகவே, அரசியல் வாழ்வில் நய வஞ்சகர்களும், பேராசைக்காரர்களும், சர்வாதிகார ரத்த வெறியர்களும், வகுப்புவாதிகளும் ஆதிக்கம் கொள்ள இடம் ஏற்படுகிறது.

இப்படிப்பட்ட கோஷங்களின் விஷமமான உணர்ச்சிகளின் - இவைகளைக்கொண்டு மக்களை மயக்கி, ஆதிக்கம் கொள்ள நினைப்பவர்களின் பரம வைரியே ஜெயப்பிரகாஷ் நாராயண்.

தனது தாய்நாட்டிடத்தும், தான் ஏற்றுக்கொண்டிருக்கும் அரசியல், பொருளாதார, சமூக சித்தாந்தங்களிடத்தும் ஜெயப்பிரகாஷ் அளவு கடந்த பற்றுதலைக் கொண்டிருக்கிறார்.

தலைவராக வரவேண்டுமென்ற எண்ணம் சிலரை ஆட்டிவைப்பதை நாம் இன்று காண்

கிறேம். இந்தத் தீய எண்ணத்தை உருவாக்கி அச்சிலர் எவ்வளவு சூழ்ச்சி முறைகளைக் கையாளுகின்றனர் என்பதையும் நாம் பார்க்கிறேம். இதற்கு முற்றிலும் ஜெயப்பிரகாஷ் மாறுபட்டவராகத் திகழ்கிறார். மக்களிடையே இடையருது ஆடம்பரமின்றி சேவை செய்வது தான் இவருடைய ஜீவ லட்சியம். எளிய வாழ்வின் நிறைவுடன் இவர் சோபிக்கிறார்.

இருபத்திரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஜெயப்பிரகாஷ் அமெரிக்காவுக்குச் சென்றார். அதுவும், ரகசியமான ஒரு சந்தர்ப்பத்தால் ஏற்பட்ட ஒரு பிரயாணந்தான்!

அமெரிக்காவில் இவருடைய வாழ்க்கை எல்லையில்லாத கடுமைக்கு உள்ளாயிற்று. படிப்புக்காகச் செலுத்தவேண்டிய கட்டணத் துக்காக இவர் பகல் நேரங்களில் பழத் தோட்டங்களிலும், பாக்டரிகளிலும், சிற் றுண்டிச் சாலைகளிலும் வேலை செய்வார். பழங்கள் கொய்வது, சிற்றுண்டி பரிமாறுவது, இரும்பைக் காய்ச்சி அடிப்பது - இவ் வேலை களில் தேர்ச்சி பெற்றுக்கொண்டே பல சர்வ கலாசாலைகளில், கணிதம், பௌதிகம், சரித் திரம், பொருளாதாரம், விஞ்ஞானம் முதலிய அறிவு வழிகளிலும் இவர் தேர்ச்சிபெற்றார்.

அமெரிக்காவில் உள்ள **ஒஹியோ** சர்வ கலாசாலையில் இவர் எம். ஏ. பட்டமும் பெற்றார்.

அறிவும் உழைப்பும் கலந்த ஒரு லட்சிய ஊழிய னகை இந்தியாவுக்கென, இவரை, அமெரிக்கப் பழத் தோட்டங்களும் சர்வ கலாசாலைகளும் பண்படுத்தின போலும்!

அமெரிக்காவில்தான் இவர் **கார்ல் மார்க்** ஸின் தத்துவத்தைப் படித்துப் பின்பற்ற வேண்டுமென்ற அவாக்கொண்டார். மனித சமுதாயத்தில் நிலவும் நோய்களுக்கெல்லாம் மார்க்ஸீயமே தலைசிறந்த ஒரு நிவாரணி என்பது இவருடைய பதிந்த கருத்தாகும். இந்தக் கருத்துடனும், உழைப்பால் உருக் கேறிய உடல் உறுதியுடனும், வயிரம் பாய்ந்த நெஞ்சுறுதியுடனும், இந்தியப் பாட்டாளிமக் களை ஸ்தாபன ரீதியில் கட்டுப்பாடாகத் திரட்டி தேசீய-மார்க்ஸீயலட்சியப் போக்கில் வேலை செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியுடனும், ஆர்வக் கனல் கண்களில் ஒளி வீசும் நிலையில் தான் (1929 நவம்பரில்) இவர் அமெரிக்காவி லிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்.

வெளி நாடுகளுக்குச் சென்று பட்டம் பெற்றுத் திரும்பிய பல இளைஞர்களை நாம் பார்க்கிறோம். புதிய புரட்சிகரமான எண் ணங்கள் ததும்பும் நிலையில் இவர்கள் ஆரம் பத்தில் ஆர்வத்துடனிருக்கிறார்கள். ஆனால், இவர்களின் வேகம் சீக்கிரத்திலேயே ஸ்தம் பித்துவிடுகிறது. தங்கள் நாட்டின் விடுதலை

போன்ற உயரிய லட்சியங்களை மறந்து, சுய நலத்துக்காகச் சம்பாதிக்கும் பாதையில், மெய் மறந்து இவர்கள் போய்விடுகிறார்கள். இக்கதி **பண்டித நேரு, ஸ்ரீ சுபாஷ் போஸ்** போன்றவர்களுக்கு ஏற்படாதது போல, ஜெயப்பிரகாஷுக்கும் ஏற்பட்டுவிடவில்லை.

இந்தியாவுக்கு வந்தவுடன், இவருக்கு பண்டித நேரு ஒரு பொறுப்பான வேலையைக் கொடுத்துவிட்டார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தொழிலாளர் இலாகா சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பே அந்தப் பொறுப்பாகும். ஆனால், ஜெயப்பிரகாஷுக்கு, அங்கே தொழிலாளர் பிரச்னைகளைப்பற்றிய புள்ளி விவரங்களைத் தயார் செய்துகொண்டிருப்பதிலும், ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிக்கொண்டிருப்பதிலும் திருப்தி ஏற்பட்டுவிடவில்லை.

உலக சரித்திரம் - இந்திய சரித்திரம் இவைகளில் 1931-ம் வருஷம் மிகவும் முக்கியமானது. இந்த நெருக்கடியான காலத்தில்தான், உலகத்தில் எல்லாத்துறைகளிலும் மோதலையும், குழறலையும் நாம் கண்டோம். இந்தியாவின் பிரபலமான பொருளாதார நிபுணர், பேராசிரியர் **K. T. ஷா** "உலகப் பொருளாதார நெருக்கடி" (World Depression) என்ற தனது ஆங்கில புத்தகத்தில் இந்த நிலைமையைத் தெளி

வாக விவரித்திருக்கிறார். உலக முதலாளித்துவ சமூகத்தில் ஏற்பட்ட முதல்தரமான நெருக்கடியால் ஒவ்வொரு நாட்டிலும் அரசியல்-பொருளாதார நிலைமையில் புரட்சிகரமான மாறுதல்கள் இக் காலத்தில் தான் ஏற்பட்டன.

இந்த நெருக்கடி முதல் உலக (ஏகாதிபத்திய) யுத்தத்தின் விளைவுதான். இந்த நெருக்கடி **ஸ்பெயினிலும், மெக்ஸிகோவிலும்** பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அந்த இரண்டு நாடுகளிலும் முலாளித்துவ ஆட்சிகள் கவிழ்ந்தன; முற்போக்கான சோஷலிஸ்டுகள் அரசாங்கத்தைக் கைப்பற்றினர்கள். பிரான்ஸிலும் **புளூம்** தலைமையில் இடதுசாரிகள் அரசியல் அதிகாரத்தைப் பெற்றதும் இக்காலத்தில் தான். ஆனல் இந்த ஆட்சி நீடிக்கவில்லை. கொள்கையுறுதியில்லாத புளூம் சர்க்காரை **டிலாடியர்** போன்ற பிற்போக்காளர்கள் கவிழ்த்து விட்டார்கள். **ஜெர்மனியில், நாஜிகள், ஹிட்லர்** தலைமையில் அதிகாரத்துக்கு வந்ததும் இக்காலத்தில்தான். ஜெர்மனியில் முற்போக்கு சக்திகளான கம்யூனிஸ்டுகள் - சோஷலிஸ்டுகள் - இவர்களிடையே நிலவிய பிளவையே ஹிட்லர், தான் பதவிக்கு வருவதற்குப் பயன்படுத்திக் கொண்டான். **இங்கிலாந்திலும் தொழில் கட்சி** சர்க்காரைக் கவிழ்த்து, பிற்போக்குக் கும்பலான **கன்ஸர்வேடிவ்கள்** இந்

தக் காலத்தில்தான் அதிகாரத்துக்கு வந்தார்கள். மீண்டும், உலகப் பொருளாதார நெருக்கடியிலிருந்து முதலாளித்துவமே தப்பிக்கொண்டு முன்னேற ஆரம்பித்து விட்டது. ஐக்கிய முன்னணியின் மூலம் பலம்பெற்று, மக்களின் உண்மையான ஆட்சியை நிலைக்க வைக்கக் கிடைத்ததொரு அரிய சந்தர்ப்பத்தை உலக முற்போக்கு சக்திகள் இழந்து விட்டதும் இந்தக் காலத்தில் தான். கம்யூனிஸ்டுகளின் கட்சி வெறியே, முதல் யுத்தமுடிவில் முதலாளித்துவம் **பாஸிஸ** ரூபத்தில் கிளம்பியதற்குக் காரணமாயிருந்தது. ஸ்பெயினில் **பிராங்கோவின்** தலைமையில் பாஸிஸ்டு ஆட்சியை நிலை நாட்டியும், ஹிட்லரை வளர்த்தும், உலக முற்போக்கு சக்திகளுக்கு எதிரான (இந்த சக்திகளுக்கு அப்போது தலைமை வகித்த **ருஷ்யாவுக்கு** எதிரான) அணியைப் பலப்படுத்துவதில் **பிரிட்டிஷ் - அமெரிக்க** முதலாளித்துவக் கூட்டுறவு முனைந்திருந்தது. 'பொதுவுடமை அபாய'த்துக்கு எதிரான ஒரு அணியை, ஹிட்லர், **இதாலி - ஜப்பான்** முதலிய நாடுகளின் ராணுவ வெறியர்களுடன் நிறுவிக் கொண்டான். ஹிட்லரின் வளர்ச்சி தங்களுக்குச் சாதகமானதே யென்று பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் நினைத்தது. உலக முதலாளித்துவத்துக்கே ஆதிக்கம் வகிக்க வேண்டுமென்பது பிரிட்டனின் லட்சியம். ஹிட்லரைப் பலப்படுத்

துவது மூலமே பொதுவுடமை அபாயத்தை முறி யடித்துத் தன்னையும் பலப்படுத்திக் கொள்ள முடியும் என்பது அதனுடைய நோக்கம். அதனால்தான், பல நாடுகளின் சுதந்திரத்தை ஆக்கிரமித்த ஜெர்மனி, இதாலி, ஜப்பான் - முதலிய நாடுகளின் அக்கிரமத்தை இவர்கள் தடுக்கவேயில்லை. ஜனநாயகம் பேசிக் கொண்டே, இந்தக் கூட்டம், இந்த நாடுகளின் (ஜெர்மனி, இதாலி, ஜப்பான்) ஆக்கிரமிப்பு களுக்கு மறைவாக ஆதரவு தந்தது.

"ஜெர்மன் மக்களுக்கு வாழும் இடம் வேண்டும்; ஜெர்மன் மக்களே ஆளப்பிறந்த ஆரியமக்கள்" என்ற கோஷத்துடன் ஜெர்மன் முதலாளித்துவம், ஹிட்லர் மூலம் உலகஆதிக் கத்தைப் பிடித்துக்கொள்ள முன்னேறிக் கொண்டிருந்தது. ஜெர்மன் மக்களிடையே தேசீய இனவெறியைக் கிளப்பிவிட்டால் அல்லாது தாங்கள் ராணுவ பலம்கொண்ட சர்வாதிகார ஆட்சியை உலகில் நிலைநாட்ட முடி யாது என்பதை ஹிட்லரும், அவனை வளர்த்த ஜெர்மன் முதலாளிகளும் நன்கு உணர்ந் திருந்தனர்.

தனக்குக் கிழக்கில், பொதுவுடமைக் கொடியுடன் ருஷ்யா முன்னேறுவது ஜெர்ம னிக்குப் பிடிக்கவில்லை. அதை அழித்துவிட் டால்தான் தன்னுடைய கனவு நனவாகும்

என்று ஹிட்லர் நினைத்தான். "கிறிஸ்துவ மதத்துக்கு ஆபத்து வந்துவிட்டது; ருஷ்யாவை எதிர்க்க வேண்டும்" என்ற கோஷத்தைப் போட்டுக்கொண்டே, மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டுவர ஆரம்பித்துவிட்டான் ஹிட்லர். 'ருஷ்யாவையும் ஒழிக்கவேண்டும்; உலகில் சாம்ராஜ்யமும் செலுத்த வேண்டும்' என்பதுதான் ஹிட்லரின் பேரவா.

'பொது அபாயமான' ருஷ்யாவின் வளர்ச்சியை ஒடுக்க நினைத்த பிரிட்டன், அமெரிக்கா முதலிய முதலாளித்துவ நாடுகளும் ஹிட்லரின் கைகளைப் பலப் படுத்த ஆரம்பித்தன.

ஆனல், முடிவில் ஹிட்லரின் எண்ணமும் மண்ணுயிற்று; பிரிட்டனின் ஆசையும் குலைந்து விட்டது; யுத்தத்தின் போக்கும், உலக மக்களின் விழிப்பும், ஹிட்லரையும் வீழ்த்தின; பிரிட்டனையும் மூன்ருந்தர வல்லரசாக்கிவிட்டன.

ஆயின், உலகில் முதலாளித்துவ உணர்ச்சியும், ஆதிக்கப்போட்டியும் அடியோடு நின்று விடவில்லை. வேறு உருவங்களில் அவை ஆதிக்கம் பெறப் போட்டியிடுவதை, இன்று, நாம் காண்கின்ருேம்.

தன்னுடைய இழந்த செல்வாக்கை மீண்டும் பெற பிரிட்டன் முழு மூச்சுடன்

அமெரிக்கா - ருஷ்யா - இந்த இரண்டு நாடுகளுடன் போட்டி போட ஆரம்பித்து விட்டது.

அமெரிக்கா தனது பொருளாதார ஏகாதிபத்தியத்தை விஸ்தரிப்பதையும், ருஷ்யா, தனது 'மார்க்ஸ்' வழியை விட்டு 'பொதுவுடமையின் தற்காப்புக்காக' என்ற கோஷத்துடன் புதிய முறையில் தனது ஆதிக்கத்தை விஸ்தரிக்கப் போட்டியிடுவதையும், இவ்விரண்டு நாடுகளுக்கிடையே தன்னுடைய கொடியை உயர்த்த பிரிட்டன் பாடுபட்டுக் கொண்டிருப்பதையுமே நாம் இன்று பார்க்கிறோம்.

காலனி நாடுகளின் விடுதலைக்கு அமெரிக்கா பரிவதையும், பிரிட்டன் தன்னுடைய காலனி நாடுகளிலும், பிற அடிமை நாடுகளிலும் பிரிவினைக் கொள்கையைத் தீவிரமாக அனுஷ்டிப்பதையும், ருஷ்யா, தன்னுடைய அந்நிய நாட்டுக் கொள்கையை அப்படியே பின்பற்றும் பிறநாடுகளில் உள்ள தன்னுடைய 'ஏஜெண்டு'களான கம்யூனிஸ்டுகளைக் கொண்டு குழப்பங்களை விளைவிப்பதையும் நாம் பார்க்கும்போது, உலகில், ஏகாதிபத்திய ஆசை பலப்பட்டு, கோரமான யுத்தம் மீண்டும் மூளும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நிச்சயமாக உணரவேண்டியிருக்கிறது.

ஹிட்லரை ஒழிக்க வல்ல பலம் தனக்கிருந்தும், அவனை ஒழித்து, அவனுக்குப் பலம்

கொடுத்து வந்த பிரிட்டனையும் ஒழித்துவிடும் காரியத்தை ருஷ்யா சென்ற காலத்தில் செய்யத் தவறியது. அதன் விளைவாகவே, ஹிட்லரின் நாஜிஸம், முஸோலினியின் பாஸிஸம் ஒழிந்த பின்னரும், புதிய ரூபத்தில் அதே அபாயங்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. தன்னுடைய தேசீய நலன்களுக்காக ஸ்டாலின் தலைமையில், ருஷ்யா சென்ற யுத்தத்தில் முற்றிலும் சுயநல முள்ள ஒரு கொள்கையைப் பின்பற்றி யதுதான் இதற்குக் காரணம்.

போட்டியிடும் இரு முதலாளித்துவ நாடுகள் யுத்தத்தில் மாட்டிக்கொள்ளும் போது, அந்த சமயத்தையும், அந்த நாடுகளின் பொருளா தார நெருக்கடியையும் பயன்படுத்திக்கொண்டு உலக முழுவதிலும் உள்ள அடிமை நாட்டு மக்களையும், பாட்டாளி மக்களையும் (சுதந்திரத் துக்காகவும், சோஷலிஸத்தை ஏற்படுத்துவதற் காகவும்) திரட்டிப் புரட்சி செய்யக்கூடிய காரி யங்களை ஸ்டாலின் தலைமையில் ருஷ்யா செய் யத் தவறிவிட்டது.

இதை உணர்ந்தோ அல்லது உணரா மலோ, எல்லா நாடுகளிலும் உள்ள கம்யூனிஸ்டு கள், தங்கள் தங்கள் நாடுகளில், தேசீய விடுதலை இயக்கங்களுக்கும், ஐக்கியத்துக்கும் விரோத மாகக் குழப்பம் செய்தார்கள்; இன்றும் செய்கிறார்கள்.

கண் மூடித்தனமாக பிறநாட்டின் கொள்கையுடன் நம்மை இணைத்துக்கொண்டால், நாம் மாறி மாறி அடிமைகளாகவே இருக்க நேரிடும். அதேபோல, பிற நாடுகளில் நடக்கும் சம்பவங்களின் வளர்ச்சியைக் கவனிக்காமல் நமது கண்களை மூடிக்கொண்டாலும், நாம் வலிமையற்ற, அடிமைகளாகவே இருக்க நேரிடும்.

உறுதியான தேசீய அடிப்படையில், உலகத்திலுள்ள முற்போக்குணர்ச்சிபெற்ற சோஷலிஸ்டுகளுடன் நாமும் ஒன்றுபட்டாக வேண்டும். இந்த நிலைமையை ஏற்படுத்திவிட்டால், உலகில் உள்ள எல்லாப் பழைய அல்லது புதிய ஆதிக்க வெறியர்களையும், மதவெறியர்களையும், சுரண்டல் முறைகளையும் எதிர்த்து ஒழிக்கவல்ல ஜனசக்தியை நாம் பெற்றுவிட முடியும்.

இதே திருஷ்டியுடனேயே - கொள்கையுடனேயே ஜெயப்பிரகாஷ் இந்திய அரசியலில் இடைவிடாது சேவை செய்கிறார். இந்திய கம்யூனிஸ்டுகளைப்போல, இவர், காங்கிரஸுக்குப் போட்டியாக வேலை செய்ய, ஆரம்பத்திலிருந்தே, விரும்பவில்லை. தொழிலாளர்கள் - விவசாயிகளை வர்க்க ரீதியில் திரட்டி காங்கிரஸுக்குப் பலம்கொடுப்பதோடு, சந்தர்ப்பம் வரும்பொழுது காங்கிரஸின் தலைமையைக் கூட மாற்றிவிட வேண்டும் என்ற கொள்

கையை ஜெயப்பிரகாஷ் பின்பற்றி வேலை செய்கிறார்.

**'சோஷலிஸம் ஏன்?'** என்ற தனது ஆங்கிலப் புத்தகத்தில் இக் கருத்தை ஜெயப்பிரகாஷ் தெளிவாகப் பின் வருமாறு விளக்கியிருக்கிறார்:-

"காங்கிரஸ் என்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனத்திலிருந்து நாம் விலகி வெளியே நிற்பது கூடாது. அதனுள்ளே இருந்து கொண்டே அதன் கொள்கை - தலைமையைத் தீவிரப்படுத்த வேண்டும். அது எடுக்கும் எந்த நேரடியான நடவடிக்கையையும் தீவிரப்படுத்த, அதனுடன் ஒத்துழைக்க வேண்டும். அதிலுள்ள பிற்போக்குக் கும்பலின் பலத்தை அடியோடு ஒழித்து, காங்கிரஸை, இந்தியப் பாட்டாளி மக்களின் பலம் பொருந்திய அரசியல் ஸ்தாபனமாக்க வேண்டும். அப்போதுதான் நாம் எல்லாவித அடிமைத் தளைகளையும் உடைத்தெறிய வல்ல சக்தியைப் பெறமுடியும். ராஜீய விடுதலைக்கு நாம் எல்லோருடைய ஒத்துழைப்பையும் நாடலாம். அதற்காக, பெரும்பான்மையோரின் நலன்களையும், வசதிகளையும் சிறுபான்மையோரான முதலாளிகள் சுரண்டுவதையோ, அல்லது அவர்களின் ஆதிக்கம் ஏற்படுவதையோ, நாம் ஒருக்காலும் அனுமதிக்க முடியாது. ஜனநாயக சோஷலிஸ அரசியலை அமைப்பதுதான் நமது லட்சியம். இதற்

காக, சர்வதேசியக் கண்ணோட்டம் என்பதின் பெயரால் கண்மூடித்தனமாக நமது தேசிய விதியைப் பிறநாடுகளின் அந்நியநாட்டுக் கொள்கையுடன் இணைத்துவிடுவது கூடாது. இந்தப் போக்கு அபாயத்தில்தான் கொண்டு போய்விடும்."

"ருஷ்யாவின் சாதனைகளை நான் பாராட்டத் தயார். அதன் மகத்தான சாதனைகள் உலக மக்களுக்கு விழிப்பையும், உணர்ச்சியையும், தன்னம்பிக்கையையும் ஊட்டி விட்டன. அதற்காக, நமது தேசிய வளர்ச்சிக்கு முரண்பாடாக நிற்கும் எந்த சர்வதேசியக் கொள்கையையும், (அது ருஷ்யச் சரக்கானாலும் சரி) நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ருஷ்யா போன்ற நாடுகளுடன் சம அந்தஸ்து அடிப்படையில் எவ்வித உடன்பாட்டையும் செய்துகொள்ளலாம். ஆனால், அந்த நாட்டின் அரசியலில் ஆதிக்கம் வகிக்கும் ஒரு கட்சி அல்லது கொள்கை ஆட்சிக்கு உலகத்திலுள்ள எல்லா முற்போக்கு சக்திகளும், தங்கள் தங்கள் நாடுகளின் தேசிய உணர்ச்சி, சூழ்நிலை, சந்தர்ப்பங்கள், அவசியங்கள் - இவைகளை மீறி அல்லது ஒதுக்கிக் கட்டுப்படுவது என்பது கூடாது. அது தற்கொலைக் கொப்பாகும். இந்தக்கொள்கையால் உலகில் புதிய அபாயமே ஏற்படும். இந்த அபாயத்தைச் சமாளிக்க நாம் ஒவ்வொரு

வரும் காங்கிரஸின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையைத் தீவிரப்படுத்த வேண்டும். அதிகார மாற்றம் ஏற்படும் தருவாயில், அவ்வதிகாரத்தைப் பாட்டாளி மக்கள் கையில் மாற்றவும் சித்தமா யிருக்க வேண்டும்.''

காந்தீயத் தலைமையைப்பற்றித் தன்னுடைய கருத்தை அதே புத்தகத்தில் பின் வருமாறு விளக்கி யிருக்கிறார்:-

"காந்தீயம் மதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியல் தத்துவம். காந்திஜீ போதிக்கும் ஆத்மீக - தார்மீக நீதிகளெல்லாம் இந்திய முதலாளித்துவத்திற்குப் பெரிதும் உதவியாயிருக்கின்றன. காந்தீயம் என்ற போர்வைக்குள் இந்திய முதலாளித்துவம் பத்திரமாக வளர முடிகிறது. காந்திஜீயின் அஹிம்சையை, தொழிலாளி வர்க்க உணர்ச்சியை - ஒழிப்பதற்காகவும், அரசியலில் ஆதிக்கம் பெறுவதற்காகவும் இந்திய முதலாளித்துவம் பயன்படுத்தி கொள்ளுகிறது.''

இந்த உணர்ச்சிக்காக ஜெயப்பிரகாஷ் தேசீய அணியில் பிளவு ஏற்படுத்தியதேயில்லை. ஏற்படுத்தவே மாட்டார். **[ஆனால், இன்று நிலைமை மாறி விட்டது. தேசியத் தலைமை, காங்கிரஸுக்குள்ளிருக்கும் சோஷலிஸ்டுகளைக் கண்டு மிரளுகிறார்கள். அவர்களைக் காங்கிரஸிலிருந்து வெளியேற்றிவிட**

**முயற்சி 'கட்டுப்பாடு' என்ற பெயரால் நடக்க ஆரம்பித்துவிட்டது. இந் நிலையில் சோஷலிஸ்டுகள் இனிமேல் ஒரு தனியான அரசியல் கட்சியாகவே இருக்க முடியும். அதற்காக, அவர்கள் காங்கிரஸிலிருந்து பிரிந்து போகும் கட்டத்தில் இருக்கிறார்கள். இந்திய சோஷலிஸ்டுகளின் ஒப்பற்ற தலைவர் ஜெயப்பிரகாஷின் இது சம்பந்தமான அபிப்பிராயத்தைக் கடைசி அத்தியாயத்தில் வாசகர்கள் விரிவாகப் படிப்பார்கள்.]**
மாறுபட்ட கருத்து-கொள்கையை ஒட்டியே தனது கொள்கையை உருவாக்கி, பலப்படுத்த வேண்டுமென்பதுதான் ஜெயப்பிரகாஷின் நோக்கம்.

இந்தியாவுக்கு விடுதலை வேண்டும் என்ற தேசீய உணர்ச்சி மட்டுமே தீவிரமாக இருந்த காலத்தில்தான் ஜெயப்பிரகாஷ் அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பி வந்தார். விடுதலையின் உண்மையான அர்த்தம் என்ன? என்ற கேள்வியைக் கேட்டு வலியுறுத்தும் ஸ்தாபன பலமோ அல்லது வர்க்க உணர்ச்சியோ பாட்டாளி மக்களிடையேயில்லாத குறையை, அப்பொழுது, ஜெயப்பிரகாஷ் கண்டார். 'காந்தி'க் குல்லாய் அணிந்த முதலாளிகள், தேசீய ஸ்தாபனத்தில் பலம் பெற்றிருக்கவும், எங்கு செல்கிறோம்? எதற்காகச் செல்கிறோம்? என்ற உணர்ச்சியே யில்லாது, இவர்களின் தலைமையில் பெரும்பான்மையான பொதுமக்கள் திரண்டு இருப்பதையுங் கண்டு இவர் மனம் புழுங்கினார்.

1931-ல் **காந்தி - இர்வின்** ஒப்பந்தம் ஏற்பட்-டது. தேசீயத்தின் மகத்தான வெற்றியென இது வர்ணிக்கப்பட்டது! காந்திஜீ தலைமையில், இந்திய தேசீயம் சமரசத்தையே நாடும். பிரிட்டனுக்கும் - இந்தியாவுக்கு மிடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்துதல்: பணக்காரர்களுக்கும்- ஏழைகளுக்கு மிடையே நல்லுறவை உண்டாக்குதல்: என்ற கோஷங்கள் சுரண்டுகிறவர்களுக்கே பலத்தைக் கொடுக்கும். காந்திஜீயின் **'தர்மகர்த்தா'** (Trusteeship) திட்டம் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சியைத் தேக்குவதற்குத்தான் உதவி செய்யும். இதன் பலனை, முதலாளிகள் தான் அடைவார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ! சுரண்டுகிறவர்கள், பெரும்பான்மையோரான சுரண்டப்படுகிற பாட்டாளி வர்க்கத்திற்கு, தர்மகர்த்தாக்களாக இருந்தால் என்ன நேரும்? என்பதை உணராமல் இருப்பதற்கில்லை. வங்கப் பஞ்சத்தின் சோகச் சரித்திரத்தை நாம் இதற்குள் மறந்து விடவில்லை. மனிதனின் சிருஷ்டியான அப்பஞ்சத்திற்கு அந்நிய அதிகாரவர்க்கம் மட்டும் காரணமில்லை. கல்கத்தா நகரவீதிகளில் பட்டினியால் சொந்த சகோதரர்கள் பிணங்களாகக் குவிந்து கொண்டிருக்கும் பொழுதுகூட ஈவு இரக்கமின்றிக் கொள்ளை லாபமடித்த இந்திய முதலாளிகளும் தான் காரணம். வெளிப்படையாகச் சொல்லப்போனால் 'காந்தி'க் குல்லாயணிந்த

'தேசீய' முதலாளிகளும் இந்தப்பஞ்சப் படு கொலைக்குக் காரணமாயிருந்தார்கள். இன்றும் கூட - உணவுப்பஞ்சம் நாடுமுழுவதையும் பய முறுத்திக் கொண்டிருக்கும் இந்நாளில் கூட - இந்த 'தேசீய முதலாளிகள்' காங்கிரஸின் பெயரால் மந்திரிசபைகளில் இடம் அல்லது ஆதிக்கம்பெற்றும், காங்கிரஸ் கமிட்டிகளைக் கைப்பற்றியும், உழைப்பாளி வர்க்கத்திற்கு விரோதமாகக் கொள்ளைலாபம் அடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இவர்களுக்கு மனமாற்றம் ஏற்பட வேண்டும்; இவர்கள் ஏழைகளுக்கு தர்மகர்த்தாக்களாக இருக்கவேண்டும் என்ற காந்திஜீயின் ஆசை இதயபூர்வமானது. நாம், காந்திஜீயின் இந்த ஆசையைச் சந்தேகிக்கவில்லை. ஆனால், இந்த ஆசை இன்றைய நிலையில் நிறைவேறாது என் பதையும் நாம் வலியுறுத்த வேண்டும்.

இந்திய மக்களின் போராட்ட உணர்ச்சி அகில இந்தியரீதியில் புரட்சிகரமாகப் பரவா மல் இருப்பதற்காகச் செய்யப்பட்ட ஒரு ராஜீய சூழ்ச்சிக்கே காந்தி - இர்வின் ஒப்பந்தத்தை ஜெயப்பிரகாஷ் ஒப்பிடுகிறார். இந்த காந்தீயத் தலைமையை மாற்றிவிட வேண்டும்; அதற்குத் தொழிலாளி - விவசாயிகளின் வர்க்க பலத் தைத் திரட்டவேண்டும் என்ற அவசியத்தை ஜெயப்பிரகாஷும், அவரது கருத்தைப்

பின்பற்றும் பல இளைஞர்களும் உணர்ந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

சோஷலிஸப் பாதையில் செல்லவேண்டுமென்ற ஆர்வம் இந்திய மக்களிடையேயும் - இளைஞர்களிடையேயும் ஏற்பட்டதற்குக் காரணம் தீவிர முதலாளித்துவ - ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சிதான்.

"இந்தியாவில் சோஷலிஸத்திற்கு இடமில்லை. சோஷலிஸ்டுகள் தேசீயத்திற்குப் பலவீனத்தையே தேடுவார்கள்" என்று சோஷலிஸத்தின் விரோதிகள் அன்றும் பிரசாரம் செய்தார்கள்; இன்றும் செய்கிறார்கள்!

1942-ல் இந்தியாவில் வீறிட்டெழுந்த மக்களின் புரட்சியில் இந்திய சோஷலிஸ்டுகள் எடுத்துக் கொண்ட பங்கே, 'சோஷலிஸ்டுகள் தேசீயத்திற்குப் பலவீனத்தையே தேடுவார்கள்' என்ற சோஷலிஸ்டுகளின் விரோதிகளின் பிரசாரத்தின் விஷமத்தன்மையையும், பொய்யையும் அம்பலப் படுத்திவிட்டது. தேசிய - சர்வதேசியநிலை - இவைகளையொட்டியே, 1942-ஆகஸ்டுப் புரட்சியை சோஷலிஸ்டுகள் பலப்படுத்தினர்கள். "இதில் வெட்கப்படுவதற்கும், தலைகுனிவதற்கும் ஒன்றுமில்லை" என்கிறார் ஜெயப்பிரகாஷ்.

1931-ல் உலகத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது இந்தியாவின் ராஜீயப் பொருளாதார அமைப்பில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தவில்லையேயாயினும், இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் சிந்தனையில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. 'சுதந்திர நாடுகளிலும் (ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற) வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவது ஏன்? அங்கெல்லாம் பட்டினி கிடப்பவர்களின் அணிவகுப்புகளும், ஆர்ப்பாட்டங்களும் ஏன் நடக்கின்றன? அவர்களை அவர்களுடைய அரசாங்கங்களே ஏன் சுட்டு வீழ்த்துகின்றன?......................சுதந்திரம் என்னும் பதத்துக்கு தேசீயத்தலைமை சொல்லும் வியாக்யானம் சரியில்லை போலும்! பட்டினி போடுகிறவர்கள், வேலை கொடுக்காதவர்கள், சுட்டுத்தள்ளுகிறவர்கள், சுரண்டுகிறவர்கள் இல்லாத பொருளாதார சுதந்திரமே உண்மையான சுதந்திரம்............உழைப்பவர்கள்-பணக்காரர்களாக இருக்கும் உழைக்காதவர்கள் (இவர்கள் தான் தர்மகர்த்தாக்களாக இருக்க வேண்டுமாம்!) என்ற இரு பிரிவுகள் சமுதாயத்தில் இருப்பதை நாம் ஏன் ஒப்புக்கொள்ளவேண்டும்? இந்த நிலை ஒழிந்து, வர்க்க பேதமில்லாத ஒரு சமூக அமைப்பு ஏற்பட்டால் தானே உண்மையான சுதந்திரம் நிலவமுடியும்! அந்தச் சுதந்திரச் சமுதாயத்தில் தான் சுபிட்

சமும், சாந்தியும் ஏற்படமுடியும்' என்றெல்லாம் இந்தியப் பொதுமக்கள் சிந்திக்கத் தொடங்கினர். இந்திய சமுதாயத்தில் - அரசியல், பொருளாதார, சமூகச் சுதந்திரங்களின்றி பல்லாண்டுகள் வீழ்ந்து கிடந்த சமுதாயத்தில் ஏற்பட்ட இந்த மறு மலர்ச்சியை உருவகப் படுத்தி, தேசியக் கொடியின் கீழ் திரட்ட வேண்டுமென்று ஜெயப்பிரகாஷ் நினைத்த போதுதான், (1932ல்) சட்டமறுப்பியக்கம் ஆரம்பித்தது. இக்காலத்தில், காங்கிரஸ் மகாசபையின் தற்காலிகக் காரியதரிசியாக ஜெயப்பிரகாஷ் நியமிக்கப்பட்டார்.

1933ம் வருஷம் வரையில் ஜெயப்பிரகாஷ் சிறையில் இருந்தார். இவர் சிறையிலிருக்கும் போது தான், தேசிய அடிப்படையில் ஒரு சோஷலிஸ்டு கட்சியைப்பலமாக நிறுவவேண்டுமெனத்திட்டம் வகுத்தார். **அகில இந்திய காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியை** சிறைக்குள்ளேயே, இவர், பூர்வாங்கமாக ஸ்தாபித்தும் விட்டார்.

1928-லேயே இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. அன்று முதற்கொண்டே, இந்திய கம்யூனிஸ்டுகள் பொதுவுடமைத் தத்துவத்தைப் பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்தப்பிரசாரம், உண்மையிலேயே, இந்தியப் பொதுமக்களைக் கவர்ந்துவிட்டதாகச் சொல்வதற்கில்லை.

அடிக்கடி தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்வதாலும், நெருக்கடியான காலங்களில் தேசீயத்துக்கு எதிராக நிற்பதாலும், கேவலமான சூழ்ச்சி முறைகளில் இறங்குவதாலும், நிர்மாண உணர்ச்சியின்றிக் குழப்பம் விளைவிப்பதையே முறையாகக் கொண்டிருப்பதாலும், எல்லாவற்றிற்கும் மேலாக, பிறநாட்டின் கொள்கை யந்திரத்துடன் சேர்ந்து, தாய் நாட்டின் தேசீய லட்சியத்துக்கு மாருகச் சுழன்று கொண்டிருப்பதாலுமே, இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு அன்றும் செல்வாக்கு இல்லாமலிருந்தது; இன்றுமில்லை.

ஆனால், ஜெயப்பிரகாஷின் தெளிவான - தேசீய அடிப்படையில் உருவகமான சோஷலிஸச்செய்தி, அன்றே (1933ல் அவர் **நாஸிக்** சிறையிலிருந்து வெளியே வந்தவுடன்) இந்தியப் பொதுமக்களைக் கவர்ச்சி செய்தது. இன்று, இவருடைய செய்தியை இந்திய மக்கள் அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டார்கள். இந்திய இளைஞர்களும் ஜெயப்பிரகாஷை உற்சாகத்துடன் - நம்பிக்கையுடன் பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள்.

ஜெயப்பிரகாஷே நமது தாய்நாட்டின் '**லெனின்**' என்று நாம் நிமிர்ந்து நின்று கூற முடியும். விசாலமான திருஷ்டியுடன் கூடிய செயல்திறன் ஜெயப்பிரகாஷிடத்தில் பிரகா

சிப்பதே இதற்குக் காரணம். தான் கண்ட கனவை, ருஷ்ய லெனின் தன்னுடைய வாழ் நாளிலேயே நனவாக்கினர்.

இந்நாட்டில் 'லெனின்' திருஷ்டியில் செயலாற்றி வரும் புரட்சித்தலைவர் ஜெயப்பிர காஷும் ஒரு சோஷலிஸ நவ சமூகத்தை நிர்மாணிப்பதில் வெற்றி காணவே போகிருர். அதற்கனுகூலமான வசதிகளும், மக்கள் பலமும், சாதகமான உலகச் சூழ்நிலையும் இந்தியாவின் வருங்காலத் தலைவரான ஜெயப் பிரகாஷுக்கு இருக்கின்றன.

## கராச்சிக் காங்கிரஸும் ஜெயப்பிரகாஷும்

"**இந்தியாவின் தலைவர்கள்**" என்ற தனது ஆங்கிலப் புத்தகத்தில், ஜெயப்பிரகாஷைப்பற்றி **யூஸுப் மேஹரலி** பின் வருமாறு குறிப்பிடுகிறார்:-

"வாழ்வின் ஆழத்தை ஜெயப்பிரகாஷ் நன்றாக உணர்ந்திருக்கிறார்."

இது முற்றிலும் சரியான அபிப்பிராயமாகும்.

மக்களுக்கு எது நன்மை பயக்குமோ அதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டே ஜெயப்பிரகாஷ் இந்திய அரசியலில் ஈடுபட்டார். சரியான காலத்தில், நேர்மையான உணர்ச்சியுடன், தெளிவான அரசியல் பாதையில், உறுதியுடன் இறங்கிய இவருக்கு, வாழ்வின் ஆழம் நன்றாகத் தெரிந்துதானிருக்க வேண்டும்!

பீஹார் மாகாணத்தில் **சப்ரா** (**சாரன்** என்றும் அழைக்கப்படும்) ஜில்லாவில் **ஸிதாப்தியர்** என்ற கிராமத்தில் இவர், 1902-ம்

ஆண்டு, அக்டோபர் மாதம், 11ம் தேதியில் பிறந்தார்.

இந்த ஜில்லா வழியாகப் பாய்ந்தோடும் கடல் போன்ற கங்கை நதியில் பல தீவுக் கூட்டங்கள் உள்ளன. அம்மாதிரியான ஒரு தீவில் தான் ஸிதாப்தியர் என்ற கிராமமிருக்கிறது.

ஒரு ஏழைக் குடியானவன் இல்லத்தில் தான் இவர் பிறந்தார்.

வறுமைக்கும், சுரண்டலுக்கும் இரையாகிக் கொண்டிருக்கும் விவசாயியின் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்ததால் தான், இவர், இன்று, சோஷலிஸ உணர்ச்சி ஊறிப்போன இந்தியப் பாட்டாளி மக்களின் தலைவராகத் திகழ்கிறார்.

இந்திய தேசீயத் தலைமை பாமர மக்களின் கஷ்ட நிவாரணத்துக்காகப் போடும் திட்டங்களும், நிறைவேற்றும் தீர்மானங்களும், தலைமையைப் பாதுகாத்துக் கொள்ளத்தான் என்றும், இத் திட்டங்களையும், தீர்மானங்களையும் சாதிக்கக் கூடிய அளவுக்கு இந்தத் தலைவர்கள் பாமர மக்களை அணுகுவதேயில்லை யென்றும், இவர் **கராச்சிக் காங்கிரஸுக்குப்** பிறகு உணர்ந்தார். கராச்சிக் காங்கிரஸ், ஜீவாதார உரிமைகளைப்பற்றி

(Fundamental Rights) நிறைவேற்றிய 'ஆடம்பர'மான தீர்மானத்தால் இந்தத் தேசீயத் தலைமையில் இவருக்கு அலுப்பும் அதிருப்தியும் ஏற்பட்டன. இதன் காரணமாக இவர் தேசீய ஸ்தாபனத்திலிருந்து விலகி நிற்க எள்ளளவும் நினைக்கவில்லை. இந்தத் தலைமை எவ்வளவு தூரம் போக முடியும் என்பதை இவர் நன்ருக அறிந்திருந்தார். பாமர மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் ஒரு கட்சியை (தேசீய ஸ்தாபனத்திற்குப் போட்டியாக இராமல்) திரட்டினுலொழிய, தேசீயத் தலைமையில் ஆதிக்கம் கொண்டுள்ள பிற்போக்கு சக்திகளை எதிர்க்க முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்தார்.

"பிரிட்டனிலுள்ள **தொழிற்கட்சி**, அங்கு, படித்தவர்களையும், பாட்டாளி மக்களையும் கவர்ச்சி செய்வதற்குக் கையாளும் முறைகளையே, இங்கே நமது தேசீயத் தலைவர்கள் பின்பற்றுகிருர்கள்" என்று ஜெயப்பிரகாஷ் கூறுகிருர். இந்த அபிப்பிராயம் சிலருக்குக் கோபத்தை மூட்டலாம். ஆனல், உண்மை உண்மையே!

"இந்திய மக்களின் வறுமைக்குக் காரணம் பிரிட்டிஷ் ஆட்சி மட்டுமல்ல. சமத்துவமில்லாத ஓர் பொருளாதார சமுதாய அமைப்பு நம் மீது பாரமாயிருப்பதும் ஒரு

காரணம். எனவே, பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்தவுடன், இந்தியப் பொருளாதார சமுதாயத்தையும் ஏற்றத் தாழ்வுகளில்லாமல் மாற்றி யமைக்க வேண்டும்." என்று கூட, 1929ல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறது.

"இதற்குப் பிறகும் நீங்கள் காங்கிரஸ் தலைமையுடன் ஏன் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருக்க வேண்டும்?" என்று சிலர் சோஷலிஸ்டுகளைக் கேட்கிறார்கள்.

"தீர்மானம் காகிதத்திலேயே இருக்கிறது. அதை நிறைவேற்றத்தான் தேசீயத் தலைமைக்கு உண்மையான ஆர்வம் இல்லையே" என்று இக் கேள்விக்கு ஜெயப்பிரகாஷ் ஆணித்தரமாகப் பதில் கூறுகிறார்.

பாட்டாளி மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்கவும், சோஷலிஸ்டுகளின் செல்வாக்கைக் குறைக்கவுமே இந்த சூழ்ச்சியைத் தேசீயத் தலைமை கையாளுகிறது.

இந்தச் சூழ்ச்சியை எதிர்த்தே யாகவேண்டுமென்ற எண்ணம் இந்திய இளைஞர்களிடையே தீவிரமாகப் பலப்பட்டது கராச்சிக் காங்கிரஸுக்குப் பின்பு தான். இந்த எண்ணத்திற்கே ஜெயப்பிரகாஷ், 1931லிருந்து தலைமை வகிக்க ஆரம்பித்திருக்கிறார்.

மிக ஜாக்கிரதையாக, இவர், இந்தப் பிரச்னையை அணுகுகிறார். பொதுஜனப் போராட்டத்தை ஆரம்பிப்பது போல் ஆரம்பித்து, ஏதோ காரணத்தைச் சொல்லி, அதை நிறுத்தி விட்டு, பேரம் பேசும் காந்தீயத் தலைமை, இந்தத் தலைமையைப் பயன்படுத்திக் கொண்டு பத்திரமாக இருக்க - வாழ - சுரண்ட நினைக்கும் தேசீயப் போர்வை போர்த்திய இந்திய முதலாளி வர்க்கம், இவர்களுக்குப் பக்க வாட்டிலேயே இந்தியாவுக்கும், இந்தியப் பாட்டாளி வர்க்கத்திற்கும் நன்மை பயக்கும் ஒரு சோஷலிஸ திட்டத்துடன் வேலை செய்யும் பொறுப்பு ஜெயப்பிரகாஷுக்கு ஏற்பட்டிருக்கிறது. அன்று முதற் கொண்டு (கராச்சிக் காங்கிரஸுக்குப் பின்பிலிருந்து) இன்று வரை, இதே கொள்கையுடன், ஜாக்கிரதையாக, தேசீய ஐக்கியத்திற்குப் பங்கம் வராதபடி, ஜெயப்பிரகாஷ் வேலை செய்து வருகிறார். லட்சியத்தில் உறுதியும், நம்பிக்கையும் இவருக்கு அபரிமிதமாக இருப்பதால் தான், இவருடைய கருத்தை இந்திய இளைஞர்கள் பின்பற்ற ஆரம்பித்து விட்டனர்.

கராச்சிக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில், ஜீவாதார உரிமைகளைப் பற்றிய காங்கிரஸ் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தின் போது, தன்னுடைய அதிருப்தியை ஜெயப்பிரகாஷ் வெளியிட நினைத்தார். ஆனால், பண்டித

நேருவின் விட்டுக் கொடுக்கும் போக்கு, இவரைப்பேச முன்வராது நிறுத்தி விட்டது. சிறிதளவாவது மார்க்ஸீய திருஷ்டியுடன் பார்க்கும் பண்டித நேருவுக்கு விரோதமாகப் போக இவருக்கு மனமில்லை.

1933 ல் சிறையிலிருந்து இவர் வெளியே வந்தார். 1934 ல் தான் காங்கிரஸின் தலைமையில் உள்ள சிலரிடை சட்டசபை மோகம் ஏற்பட்டது. 'கிடைத்ததைப் பெற்றுக் கொண்டு முன்னேற வேண்டும்' என்ற தோல்வியுணர்ச்சியின் விளைவான இந்தப் போக்கிலிருந்து தேசீயத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் தான், தேசீயத்தின் தீவிரத் தன்மையைப் பாதுகாக்கவும், பாட்டாளி மக்களின் பொருளாதார விடுதலைக்குப் பாடுபடவுமே சோஷலிஸ்டு கட்சியை ஜெயப்பிரகாஷ் ஸ்தாபித்தார்.

ஒரு திடமான லட்சியம், ஒரு உறுதியான தலைமை, ஒரு பலம் கொண்ட கட்சி - இம்மூன்றையுமே ஜெயப்பிரகாஷ் தேசத்திற்காகக் கொடுத்தார் என்றாலும் அது முற்றிலும் பொருந்தும்.

# பிற்போக்கை எதிர்க்கும் வேலையில்

1934-ம் ஆண்டு ஆரம்பத்தில் **பாட்னுவில்** அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடியபோது அதே இடத்தில், காங்கிரஸ் தலைமையில் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்ட தீவிர இளைஞர்களின் கூட்டம் **ஆச்சார்ய நரேந்திரதேவ்** (இந்திய சோஷலிஸ்டுகளின் நன்மதிப்பைப்பெற்ற முதியவர்) தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் விளைவே அகில இந்திய காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியின் உதயம். கட்சியின் நிர்மாண காரியதரிசியாக ஜெயப்பிரகாஷ் நியமிக்கப்பட்டார். இந்தக் கட்சியின் உதயம், தேசீயத் தலைமையிலுள்ள பிற்போக்காளருக்கு அதிர்ச்சியை உண்டு பண்ணிவிட்டது என்பது உடனேயே தெளிவாயிற்று. தங்களுடைய பகட்டான போர்வையைக் கழற்றியாக வேண்டும் என்றே ஜெயப்பிரகாஷ் தங்களுக்குச் சவால் விடுவதாக இவர்கள் எண்ணினர்கள். ஜெயப்பிரகாஷின் இந்தப்புதிய முயற்சியை தகர்த்தெறிய இவர்கள் தங்கள் கையில் உள்ள எல்லாச் சாதனங்களையும் உபயோகப்படுத்த ஆரம்பித்தார்கள். ஜெயப்பிரகாஷைப்பற்றி

இந்தத் தலைவர்களும், இவர்களுடைய 'தேசிய' பத்திரிகையாளர்களும் தாக்க ஆரம்பித்தனர்.

தங்களுக்குச் சவுகரியமானதொரு சாதனமாக அஹிம்சையை உபயோகப் படுத்திக் கொள்ளுகிறவர்களையும், அஹிம்சையைப்பற்றி தங்களின் வசதியான வேளைகளில் பிரமாதமாகப் பேசுகிறவர்களையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இயேசு கிறிஸ்துவும், புத்தரும் போதித்த அஹிம்சையையும், மகாத்மா காந்தி இன்று போதிக்கும் அஹிம்சையையும் நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஆத்மீகவாதிகள் இதை வேதாந்தத்தின் '**சாரம்**' என்று கூறிவிடுவார்கள். விஞ்ஞான உலகாயவாதிகள் இதைப் பிற்போக்கு சக்திகளின் '**கூச்சல்**' என்று கேலி செய்வார்கள்.

ஆனல், அஹிம்சையில் இதயபூர்வமான நம்பிக்கையில்லாத அல்லது ஹிம்சையையே மூல பலமாகக்கொண்ட ஏகாதிபத்திய வாதிகளும், முதலாளிகளும் அஹிம்சையைப்பற்றி வாளளாவப் பேசும்போதுதான் நமக்கு உள்ளக்கொதிப்பு ஏற்படுகிறது.

காங்கிரஸ் சோஷலிஸ்டுகளைப் பொதுமக்களிடமிருந்து பிரித்துவிட, தேசியத் தலைமை

யிலுள்ள பிற்போக்காளர்கள் எல்லாவிதமான சூழ்ச்சிகளிலும் இறங்கினார்கள்.

காங்கிரஸ் சோஷலிஸ்டுகளைப் பலாத்கார வாதிகள் என்றும், பயங்கரவாதிகள் என்றும், அராஜகத்தைக் கிளப்பி விடுகிறவர்கள் என்றெல்லாம் இவர்கள் பிரசாரம் செய்து பார்த்தனர்.

'வர்க்கப் போராட்டத்தைத் தூண்டிவிட்டு ஒரு பலாத்காரப் புரட்சிமூலம் தனியுடமையைப் பறிப்பதுதான் சோஷலிஸ்டுகளின் லட்சியம்' என்ற இவர்களின் பிரசாரத்தைக் கண்டு ஜெயப்பிரகாஷும், அவரது சகாக்களும் கலவரப்படவில்லை. "**அரசியல் விடுதலையை முதலில் பெற்றாலொழிய, பொருளாதார விடுதலை சாத்தியமில்லை**" என்று திடமாகக்கருதும் ஜெயப்பிரகாஷ் காங்கிரஸ் தலைமையுடன் பகிரங்கமாகக் கலகம் செய்ய விரும்பவில்லை. தேசீய விடுதலைக்காக, காங்கிரஸ் தலைமையுடன் ஒத்துழைப்பதுதான் ஜெயப்பிரகாஷின் கொள்கையாகும். அஹிம்சையை, இவர், வெறும் கொள்கையாகவே மேற்கொண்டிருக்கிறார்.

வர்க்கப் போராட்டத்தைப் பற்றி, அகில இந்திய சோஷலிஸ்டு கட்சி, பம்பாயில், 1935-ல் கூடியபோது, நிறைவேற்றிய தீர்மானத்தில் பின்வருமாறு தெளிவாக்கப் பட்டிருக்கிறது:-

"முதலாளித்துவ சமுதாயம் பெரும்பாலான பாட்டாளி மக்கள்மீது ஆதிக்கம் செலுத்துகிறது; அவர்களைச் சுரண்டி வருகிறது. இச்சுரண்டல்மீது, கோபமும் ஆத்திரமும் இயற்கையாகவே பாட்டாளி வர்க்கத்தினிடை தோன்றி வளர்ந்து வருகிறது. முதலாளித்துவத்தை ஒழிக்க வேண்டுமென்று தொழிலாளர்களிடையே தானகவே ஜனித்த ஒரு தீவிர உணர்ச்சியின் எல்லைக்கோடுதான் வர்க்கப் போராட்டம்"

வர்க்க பேதமில்லாத ஒரு சமுதாயத்தை நிர்மாணிக்க வேண்டுமென்ற உணர்ச்சியுடன் பாட்டாளிவர்க்கம் எழும் போதுதான், ஆதிக்க வகுப்பாரிடையே கலக்கம் ஏற்படுகிறது. அப்போதுதான், இவர்கள் 'ஐயோ! பலாத்காரம்! வர்க்கப் புரட்சி! இவையெல்லாம் சமுதாயத்தில் அராஜகத்தையும், குழப்பத்தையும் கொண்டுவந்து விட்டு விடும்' என்று கூச்சலைக் கிளப்புகிறார்கள். அதிகாரத்தை விட்டுக் கொடுக்காது பிடிவாதமாக இருப்பவர்களின் கூச்சல் இப்படித்தானே இருக்கும்!

சோஷலிஸ்டுகளை பலாத்கார வாதிகள் என்று கூறி வந்ததால் பயனில்லையென்று கண்ட இந்தக் கூட்டம் சோஷலிஸ்டுகளைத் தாக்க கீழ்க்கண்ட வாதத்தைப் பிரயோகிக்க ஆரம்பித்தது.

"இந்திய நாகரீகம், ஐதீகம் - இவைகளை யொட்டிப் பார்த்தால், நமது நாட்டுக்கு மேல் நாட்டு சோஷலிஸம் பொருந்தாது. நமது நாட்டிற்கு ஏற்றது இந்திய சோஷலிஸம்தான்; அதாவது காந்தீயம்தான்."

இந்தக் கூற்றையும் ஜெயப்பிரகாஷ் வெகுதிறமையாகப் பின்வருமாறு அம்பலப் படுத்துகிறார்:-

"முதலாளித்துவமும், சுரண்டும் ஆசையும் இந்தியாவிலும் பண்டைக் காலத்திலிருந்தே இருந்து வருகிறது. எல்லோரும் சமசந்தர்ப்பம் பெற்று எல்லா வசதிகளையும் அடையவே கூடாது என்று இந்திய நாகரீகமும், ஐதீகமும் எங்காவது கூறியிருக்கின்றனவா?"

தங்களுக்குப் பிடிக்காத அல்லது ஆபத்தான ஒரு கொள்கையை 'முடியாதது' என்று கூறி, பொதுமக்களைக் குழப்பிவிட நினைக்கும் இந்தக் கூட்டம், இந்தியாவில் மட்டுமல்ல, எல்லா நாடுகளிலுமே இருக்கின்றது!

ஆரம்ப காலத்தில், காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியும், அதன் ஒப்பற்ற தலைவரான ஜெயப்பிரகாஷும், தேச மக்களிடையே, சோஷலிஸம் என்றால் என்ன? என்பதைப் பற்றியும், காந்தீயத்திற்கும் சோஷலிஸத்திற்கும் உள்ள அடிப்படையான வித்தியாசங்

களைப்பற்றியும் விளக்கிப் பிரசாரம் செய்ய வேண்டியிருந்தது.

இதை ஆரம்பத்திலேயே செய்ததால்தான், இன்று, இந்திய தேசீய வாழ்வில் சோஷலிஸ்டுகள் உன்னதமான பலத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

1935 ம் வருஷம் காங்கிரஸ் மகாசபையின் அக்கிராசனராக பண்டித நேரு தேர்ந்தெடுக்கப்பட்டது, இந்திய சோஷலிஸ்டுகளுக்கு உற்சாகத்தை அளித்தது. அவ்வருஷம் லக்னோவில் காங்கிரஸ் மகாசபை கூடியது. அம் மகாசபைக் கூட்டத்தில், முற்போக்கான பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதற்கு ஜெயப்பிரகாஷே பெரிதும் காரணமாயிருந்தார்.

அதி தீவிர சோஷலிஸ்டு என்று பண்டித நேருவை அழைப்பதற்கில்லை: காந்தீயத்தை அப்படியே பின்பற்றுகிறவர் என்றும் அவரைச் சொல்ல முடியாது: சந்தர்ப்பவாதியென்றோ அல்லது அரசியல் தலைமைக்கு ஆசைப்படுபவரென்றோ அவரை அழைப்பது பொருந்தாது. ஆனால், முற்போக்கு உணர்ச்சியுள்ள ஒரு ஜனநாயக வாதியென, அவரை, உலகமே நிச்சயமாக ஒப்புக் கொள்ளுகிறது. பாஸிஸம், ஏகாதிபத்தியம், யுத்தம்போன்ற

தீமைகளைக் காங்கிரஸ் மேடையிலிருந்து பகிரங்கமாக எதிர்த்து, இந்திய மக்களை உலகமுற்போக்கு சக்திகளின் அணிவகுப்புடன் இணைத்த பெருமை, இந்தியாவின் புகழ்வாய்ந்த தலைவர், பண்டித நேருவைத்தான் பெரிதும் சாரும். இதில் அபிப்பிராய பேதமே இருக்க முடியாது. இந்தக் காலத்தில், பண்டித நேருவுக்குப் பக்கபலமாக இருந்தவர் ஜெயப்பிரகாஷ்தான்.

அந்நிய நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் தனித்து நிற்க வேண்டுமெனக் கூறும் **அமெரிக்கன் ரிபப்ளிகன் கட்சியினர்** போன்ற ஒரு கோஷ்டி, இந்திய தேசீய காங்கிரஸிலும் இருக்கிறது. உலக முற்போக்குச் சக்திகளுடன் ஒன்று சேர்ந்து, இந்தியா ஒரு பலமுள்ள நாடாக இருக்க வேண்டுமென அபிப்பிராயம் கொண்டுள்ள பண்டித நேரு, இந்தக் கோஷ்டியினரை சோஷலிஸ்டுகளின் பலத்தைக் கொண்டே எதிர்க்க வேண்டியிருக்கிறது. பண்டித நேருவிற்கு விசாலமான முற்போக்கு உணர்ச்சியிருக்கும் வரை, ஜெயப்பிரகாஷ் பண்டித நேருவிற்குப் பக்கபலமாக இருந்து வருவார்.

1935 ம் வருஷம், பண்டித நேரு, ஜெயப்பிரகாஷை, காங்கிரஸ் காரியக் கமிட்டியில் சேர்த்துக் கொண்டார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இருந்து வருவதால், சோஷலிஸ்டுகட்சியின் வேலைகளைச் சுதந்திரமாகச் செய்ய முடியவில்லையென ஜெயப்பிரகாஷ் நினைத்தார். இந்திய தேசியத்தைச் சோஷலிஸ்டுப் பாதையில் திருப்பவேண்டுமானல், தான் காங்கிரஸ் காரியக்கமிட்டியிலிருந்து விலகி, சோஷலிஸ்டு கட்சியைப் பலப்படுத்துவது தான் சிறந்தது என்று நினைத்தார். அதன்படியே, இவர் காரியக் கமிட்டியிலிருந்தும் விலகினர். சோஷலிஸ்டுகளை ஒன்று திரட்டுவதற்காகப் பல மாகாணங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தார்.

# இந்திய சோஷலிஸ்டுகளின் தலைவர்

1935ம் ஆண்டில் தான் சோஷலிஸ்டுகள் இந்திய தேசிய வாழ்வில் அதிக பலம் பெற்றனர். 'சோஷலிஸம் வேண்டும்' என்ற உணர்ச்சி ஜீவனுள்ள ஒரு பிரச்னையாக-மக்களின் ஒரு கோரிக்கையாக முக்கியத்துவம் அடைந்ததற்கு முற்றிலும் பொறுப்பாயிருந்தவர் ஜெயப்பிரகாஷ்.

1935ம் ஆண்டில்தான் காங்கிரஸ் தலைமையில் சோர்வு தலை காட்டியது. காங்கிரஸ், போராட்டப் பாதையிலிருந்து சீர்திருத்தப் பாதைக்குத் திருப்பப்பட்டது. பிரிட்டிஷாரால் வழங்கப்பட்ட 1935-வது வருஷ இந்திய அரசியல் திட்டத்தை 'உடைக்கப் போகிறோம்' என்ற தேர்தல் பிரகடனத்துடன் மாகாண சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் ஈடுபட்டது. தேர்தல்கூட நடந்து முடியவில்லை. அதற்குள், பல தேசீயத் தலைவர்கள் 'பதவி ஏற்றுக்கொள்ள வேண்டுமென'ப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். சீர்திருத்த வாதமும், பிற்போக்கும் கலந்த ஒரு தலைமையில், தீவிரமான

எந்தப் போராட்டத்தையும் தேக்கும் உணர்ச்சியைத் தவிர வேறு எதையும் எதிர் பார்க்க முடியுமா?

'திருப்திப்படுத்துதல்,' 'பேரம் பேசுதல்' போன்ற குண விசேஷங்களுடைய தலைமை மக்களின் புரட்சி நடவடிக்கைகளை விரும்பாது. தாங்கள் கோரியது பேரத்தின் விளைவாகக் கிடைத்து விட்டவுடனேயே, அந்தப் 'பரிசை' பூர்ண சுதந்திரம் கிடைத்து விட்டதற் கொப்பாகவே இந்தத் தலைமை பொது ஜனங்களிடம் பறை சாற்றும். இதை இன்று கூட நாம் பார்க்கவில்லையா! பண்டித நேரு தலைமையில் ஏற்பட்டிருக்கும் இந்த இடைக்கால சர்க்காரைச் 'சுதந்திரமான சர்க்கார் வந்து விட்டது' என்று சொல்லுகிறவர்களை நாம் பார்க்கவில்லையா! இந்தக் காலங்களில் எல்லாம், பூர்ண விடுதலை பெற, பொதுஜனப் போராட்டத்தை நடத்தியாக வேண்டுமென்ற உணர்ச்சியைப் பலப்படுத்துகிறவர் ஜெயப்பிரகாஷ்.

ஆனல், காங்கிரஸின் சட்டசபைத் திட்டத்துக்கு, இவர் முட்டுக்கட்டை போடவேயில்லை. நிர்மாண ரீதியில், காங்கிரஸ் மந்திரி சபைகளின் வேலைகளில் குணதோஷம் கூறியதோடு, முடிந்த அளவுக்கு, தொழிலாளர்-விவசாயிகள் நலன்களுக்குத் தீங்கு வராமல், இவர், கண்

காணிக்கிறார். சட்ட சபைத் திட்டத்தால் பூரண மான அதிகாரத்தைப் பெற முடியாது என்ற எண்ணத்தை மக்கள் மனதில் பதிய வைக்கிறார். தேசியப் போர்வையில், காங்கிரஸ் தலைமையில் செல்வாக்குப் பெற்றிருக்கும் இந்திய முதலாளிகள், தங்களுடைய வர்க்க நலன்களைக் காப்பாற்றிக்கொள்ளக் காங்கிரஸ் மந்திரி சபைகளைப் பயன் படுத்திக் கொள்ளா திருக்கவும், காங்கிரஸ் தலைமைக்கும், இந்திய முதலாளிகளுக்கும் உள்ள உடன்பாடுகளை வெட்ட வெளிச்சமாக்கி, காங்கிரஸ் மந்திரி சபைகள், பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு விரோதமாகப் போகாதபடியும் ஜெயப்பிரகாஷ், முடிந்த மட்டில் வேலை செய்கிறார்.

பீஹார், ஐக்கிய மாகாணம் - இவைகளில் விவசாயிகளின் கடன் சுமை, நிலவரிப் பிரச்னைகளில் விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய பல சட்டங்களை, 1937ல் அதிகாரத்திலிருந்த காங்கிரஸ் மந்திரிசபைகள் செய்ததற்கு ஜெயப்பிரகாஷ் தூண்டுகோலாயிருந்தார். அதே உணர்ச்சி, இவரிடம் இன்றுகூட நிலவுகிறது.

"இந்த இடைக்கால சர்க்கார் மூலமும், பிரிட்டிஷாரின் சிருஷ்டியான அரசியல் நிர்ணய சபை மூலமும், நாம் பூர்ண சுதந்திரம் பெற்றுவிட முடியாது. காங்கிரஸின் இந்தப்

புதிய கொள்கையால் பலவீனம் ஏற்பட்டிருக்கிறது' என்பதை நாங்கள் (சோஷலிஸ்டுகள்) மறைக்க விரும்பவில்லை. இதற்கு நாங்கள் உடன்பாடாய் இருக்கமுடியாது. ஆயினும், பலவீனமான நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, பிற்போக்காளரும், தேசீயத்தின் விரோதிகளும் முன்னேற நாங்கள் இடம் கொடோம். தேசீய ஐக்கிய முன்னணியைப் பிளவுபடுத்தக்கூடாது என்ற எங்கள் கொள்கைப்படியும், காங்கிரஸ் வாதிகள் என்ற முறையிலும் நாங்கள் இந்த இடைக்கால சர்க்காருடன் ஒத்துழைப்போம், பலவீன உணர்ச்சியையும் மாற்ற பொதுஜன பலத்தைத் திரட்டுவோம்'' என்று சமீபத்தில் ஜெயப்பிரகாஷ் கூறியிருக்கிறார். கலகம் செய்பவர்களுக்கும், பிற்போக்காளர்களுக்கும் எதிரிடையாக எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு ஜெயப்பிரகாஷ் ஒரு உதாரணமாக விளங்குகிறார்.

**பெய்ஸிபூர்** காங்கிரஸ் கூடிய சமயம் (1936-ல்) அகில இந்திய சோஷலிஸ்டுகள் மகாநாடும் அதே யிடத்தில் நடைபெற்றது. தேசீயத் தலைமையில் ஆதிக்கம் பெற்றிருக்கும் பிற்போக்காளர்களின் பிடிப்பிலிருந்து காங்கிரஸையும், பொதுமக்களையும் விடுவிக்கவேண்டுமென்ற எண்ணத்தை வலியுறுத்தும் பல்

தீர்மானங்களை இந்த மகாநாடு நிறைவேற்றி யது. மேலும், காங்கிரஸ் மகாசபையின் அந்நிய நாட்டுக் கொள்கையைத் தீவிரப்படுத்தும் பல தீர்மானங்கள் பெய்ஸிபூர் காங்கிரஸில் நிறை வேற்றப்பட்டதற்கு சோஷலிஸ்டு கட்சியின் கணிசமான பலம்தான் காரணம். இதற்குப்பெரி தும் வேலை செய்தவர் ஜெயப்பிரகாஷ் தான்.

பெய்ஸிபூர் காங்கிரஸிற்குப்பிறகு, வளர்ந்து கொண்டிருந்த சோஷலிஸ்டு கட்சியை உடைத்துவிட வேண்டுமென்ற நோக்கத் துடன் கம்யூனிஸ்டுகள் வேலைசெய்ய ஆரம்பித் தனர். இந்தக் காலம், காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சிக்கும் ஜெயப்பிரகாஷுக்கும் ஒரு சோத னையான காலம். கம்யூனிஸ்டு கட்சிமீது தடை யிருந்ததால், கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டு அணி வகுப்பில், 'தேசீய ஐக்கிய முன்னணி' என்ற கோஷத்துடன் புகுந்து கொண்டார் கள். தீவிரவாதிகளிடையே ஐக்கியம் நிலவ வேண்டும் என்ற ஆர்வத்தில், கம்யூனிஸ்டு களின் உள்ளூர்ந்த நோக்கத்தை, இவரின் பரந்த எண்ணம் சந்தேகிக்கவில்லை. கம்யூ னிஸ்டுகள், இந்த ஜெயப்பிரகாஷுடைய உய ரிய எண்ணத்தைக் கபடமாகப் பயன் படுத்திக் கொண்டு, சோஷலிஸ்டு கட்சியில் புகுந்து கொண்டு, சோஷலிஸ்டு கட்சி தொழிலாள ரிடையேயும், இளைஞர்களிடையேயும் ஊட்டி

யிருந்த தீவிர உணர்ச்சியை, தங்களின் கட்சி வெறிக்கும், சுயநலத்திற்கும் சாதகமாகத் திரட்டிக் கொண்டார்கள். இதனால் சோஷலிஸ்டு கட்சியின் பலம் குறைய ஆரம்பித்து விட்டது.

1939ல் இரண்டாவது ஏகாதிபத்திய யுத்தம் ஆரம்பித்தபோது, சோஷலிஸ்டு கட்சியைக் காட்டிலும் கம்யூனிஸ்டு கட்சியே, அது தடை செய்யப்பட்டிருந்தும், பலம் பெற்றிருந்ததற்குக் காரணம் ஜெயப்பிரகாஷின் தவறு தான் என்று சொல்லாமலிருக்க முடியாது. இந்திய தேசீய நலன்களைக் காட்டிலும், ருஷ்யாவின் நலன்களைப் பெரிதாக மதிக்கும் கம்யூனிஸ்டுகளின் ராஜ தந்திரத்துடன் இவர் இணைந்து போக இடம் தந்தது இந்தத் தவறுகும்.

சோஷலிஸ்டு கட்சி பலவீனம் அடைந்ததற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. **ஸ்ரீ சம்பூரணனந்தர்** போன்ற பல சந்தர்ப்பவாதிகள் சோஷலிஸ்டு கட்சியில் ஆதிக்கம் பெற்றது தான் இந்தக் காரணமாகும்.

1935 - 39 வரை அகில இந்திய சோஷலிஸ்டு கட்சிக்கு ஏற்பட்ட தாக்குதல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால், இரண்டாவது ஏகாதிபத்திய யுத்தமும், அதன் விளைவாக

இந்தியாவில் ஏற்பட்ட உணர்ச்சியும், சோஷலிஸ்டு கட்சி மீண்டும் பலம் பெற சந்தர்ப்பத்தைக் கொடுத்தன. 1942ல், இந்தியாவில் எழுந்த மகத்தான புரட்சியில் சோஷலிஸ்டுகள் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டதாலும், இந்திய கம்யூனிஸ்டுகள் இந்திய தேசீயத்தின் எதிரிகளுடன் சேர்ந்து கொண்டதாலும், சோஷலிஸ்டு கட்சி பலம் பெற வேண்டிய ஒரு சிறந்த சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை ஜெயப்பிரகாஷும், அவரது சகாக்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

ஜெயப்பிரகாஷ் தலைமையில் சோஷலிஸ்டு கட்சி மீண்டும் வேலைசெய்ய ஆரம்பித்து விட்டது. பழைய தவறுகள் மீண்டும் தலையெடுக்க ஜெயப்பிரகாஷின் கடுமையான அனுபவம் இடம் கொடுக்காது என்று நாம் எதிர் பார்க்கிறோம்.

# திரிபுரி காங்கிரஸுக்குப் பிறகு

காங்கிரஸ் சரித்திரத்தில், சூரத் காங்கிரஸும், **திரிபுரி** காங்கிரஸும் மிகவும் முக்கியமானவை. மிதவாதிகளின் பிடிப்பிலிருந்து காங்கிரஸை விடுவித்து, அதைத் தீவிரப் பாதைக்குத் திருப்பிய பெருமை சூரத் காங்கிரஸைச் சாரும். ஆனல், திரிபுரியில் தீவிரவாதிகளுக்கு மகத்தான தோல்வி ஏற்பட்டது. காந்தீயத்தின் பெயரால் 'தேசீய' சர்வாதிகாரம் வெற்றி பெற்றது என்றுகூடச் சொல்லிவிடலாம்!

•

ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் மாசற்ற ஓர் தேசீய வீரர்; தியாகமூர்த்தி; துணிகரமானவர். 1937ல் காங்கிரஸின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும், இவருடைய தலைமை ஒரு தோல்வியே. இதற்குத் தெளிவான காரணங்களும் உண்டு.

•

எந்தத் தலைவரும், மக்களின் மனோபாவம், சரித்திரப் போக்குகள் இவைகளை யொட்டியே தனது கொள்கையைத் திடமாக வகுத்துக்கொள்ள வேண்டும்; ஜாக்கிரதையாக, வளைந்து கொடுத்தும் முன்னேற வேண்

டும்; அப்போதுதான், அவர் மக்களின் தலைவராக விளங்க முடியும்; அப்போதுதான் அவருடைய தலைமை வெற்றியடைய முடியும். வெறும் உத்வேகத்தை மட்டும் தூண்டி விடுவதோடு நின்றுவிடும் தலைமை, புயலுக்குப் பின் அமைதியை நிலை நாட்டக்கூடிய ஆக்க சக்தியற்ற தலைமை, தோற்றுத்தானே போகும்!

தேசீய, சர்வதேசீயப் பிரச்னைகளை அணுகுவதில் தெளிவும், உறுதியும் இல்லாமல் போனால், எந்தத் தலைவரும் தோல்வியைத் தவிர வேறு எதையும் காணமுடியாது என்பதற்கும், பிற்போக்குச் சக்திகளுக்கு முன்பு அவர் வீழ்ந்து விடுவார் என்பதற்கும், 1937ல் ஸ்ரீ சுபாஷ் பாபுவின் தோல்வியையும், 'தேசீய' சர்வாதிகாரிகளுக்கு முன்பு ஏற்பட்ட அவரது வீழ்ச்சியையும் ஒப்பிடலாம்.

இந்தக் காலத்தில் ஜெயப்பிரகாஷ் தலைமையில், இந்திய சோஷலிஸ்டுகள் ஸ்ரீ சுபாஷ் போஸின் கட்டுக் கடங்காத, தெளிவற்ற போக்கை ஆதரிக்கவில்லை. அதேபோல, அவருடைய தலைமையைக் கவிழ்க்க நடந்த சர்வாதிகார சூழ்ச்சிகளையும் ஆதரிக்கவில்லை.

திரிபுரி காங்கிரஸிற்குப் பிறகு, ஸ்ரீ சுபாஷ் பாபுவிற்கும் இதர தேசீயத் தலைவர்களுக்கும் இடையே பிளவு அதிகரித்தது. ஸ்ரீ சுபாஷ்

பாபுவின் ஆவேசம் கட்டுக் கடங்காத் நிலைக்குப் போய்விட்டது. முடிவில் அவர் ராஷ்டிரபதி பதவியை ராஜீனமாச் செய்து விட்டு காங்கிரஸுடன் பகிரங்கமாகப் போர்க் கோலத்தில் இறங்கிவிட்டார். '**பார்வார்டு கட்சி**' **(Forward Bloc)** என்ற கட்சியையும் ஆரம் பித்து விட்டார்.

ஸ்ரீ சுபாஷ் பாபுவுடன் சேர்ந்து கொண்டு ஒரு இடதுசாரி ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டுமென ஜெயப்பிரகாஷ் எவ்வளவோ முயன்று பார்த்தார். ஆனல், கம்யூனிஸ்டு களின் சூழ்ச்சிகளும், ஸ்ரீ சுபாஷ் பாபுவின் தேசீய ஆவேசமும் ஜெயப்பிரகாஷின் இந்த முயற்சியைத் தோற்கடித்து விட்டன.

இதன் விளைவாக, திரிபுரிக்குப்பிறகு இந்திய தேசீய வாழ்வில் பிற்போக்கு உணர்ச் சியே சக்தி பெற்றது.

1939ல் இரண்டாவது ஏகாதிபத்திய யுத்தம் ஏற்பட்டபோது, இந்திய தேசீய வாதிகளி டையே மூன்று விதமான அபிப்பிராயங்கள் நிலவின.

இந்த யுத்தத்திற்கும் நமக்கும் ஒருவித சம்பந்தம் இல்லையென்று சில தலைவர்கள் நினைத்தது ஒரு அபிப்பிராயம்.

இது ஏகாதிபத்திய யுத்தம், இந்த யுத்தத்தைக் காலனி மக்கள் பயன் படுத்திக்

கொண்டு, சுதந்திரம் பெற, புரட்சி செய்ய வேண்டுமென ஜெயப்பிரகாஷும், அவரைப் பின்பற்றுபவர்களும் பகிரங்கமாகச் சொன்னார்கள். இது இரண்டாவது அபிப்பிராய மாகும். ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும்போது பாஸிஸமும் எதிர்க்கப் படுகின்றது என்பது தான் ஜெயப்பிரகாஷின் கொள்கை. இந்தக் கொள்கையை ஸ்ரீ சுபாஷ்பாபு ஒப்புக் கொள்ளவில்லை.

ஐரோப்பாவில் அரசியல் ஆதிக்கம் வகிக்கும் 'இஸ'ங்களை (பாஸிஸம்-நாஜிஸம் போன்றவைகள்)ப்பற்றி நாம் பொருட் படுத்தக் கூடாது என்றும், இந்திய நாட்டின் சுதந்திரத்திற்குச் சாதகமாக இருக்கும் நாடுகளின் (அந்நாடுகளின் அரசியல் தத்துவங்களைப் பற்றிக் கவலைப்படாமல்) தீவிர ஒத்துழைப்பை நாடுவது லட்சியப் பிசகில்லை யென்றும் ஸ்ரீ சுபாஷ் பாபு அபிப்பிராயப் பட்டார். இதுவே மூன்றாவது அபிப்பிராய மாகும்.

காங்கிரஸின் தலைமை யுத்தத்தால் ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்கத் தயங்கியது. இந்தச் சஞ்சலப் போக்கைத் தீவிரமாக மாற்றி சுதந்திரத்திற்காக ஒரு பெரும் போராட்டத்தை நடத்த வேண்டுமென ஜெயப்பிரகாஷ் துடிதுடித்தார்.

போராட்டம் நடத்தவும், வெற்றி பெறவும் தன்நாட்டின் சொந்த பலத்திலேயே ஜெயப் பிரகாஷுக்கு நம்பிக்கையிருந்தது. சர்வ தேசிய பிரச்னைகளில் இதுகாறும் தான் கொண்டிருந்த கருத்துக்களை ஜெயப்பிரகாஷ் விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. இதனால்தான் இவர், ஸ்ரீ சுபாஷ் பாபுவின் கொள்கையை ஒத்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது.

1942-ம் ஆண்டில் நடைபெற்ற ஆகஸ்டு புரட்சியை விமர்சனம் செய்து '**சுதந்திரப் போர் வீரர்களுக்கு**' ஜெயப்பிரகாஷ் எழுதியுள்ள இரண்டாவது கடிதத்தில் ஸ்ரீ சுபாஷ் பாபுவின் கொள்கையைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:-

"**கௌடில்யர்** காலத்துக்கும் முன்பு கையாளப்பட்ட ஒரு ராஜதந்திரக் கொள்கையை ஸ்ரீ சுபாஷ் பாபு பின்பற்றுகிறார்! இந்தக் கொள்கை அடிப்படையில் அவர் நமது நாட்டின் விடுதலைக்காக மூன்றாவது கட்சியின் உதவியை ஏற்றுக் கொண்டிருக்கிறார். (அச்சு நாடுகளான ஜெர்மனி-ஜப்பான்) முடிவில் அவர் ஏமாந்து போகலாம். அவருடைய உண்மையான முயற்சியைப் பற்றியோ அல்லது திறமையைப் பற்றியோ கேள்வி கேட்கவே முடியாது. இந்தியாவில், பிரிட்டனை ஜெயித்த பின்பு, ஜப்பான், சாவதானமாக

இந்தியாவின் அதிகாரத்தை நம்மிடம் ஒப்படைத்து விடாது என்பது மட்டும் நிச்சயம். **டோஜோவுக்கும்,** ஸ்ரீ சுபாஷ் பாபுவுக்கும் இந்த விஷயத்தில் எவ்வித உடன்படிக்கை யேற்பட்டிருந்தாலும், இந்த நிலைமையை நாம் தவிர்க்க முடியாது." தேசீயத் தலைமை, தனது கோரிக்கைக்கு சர்க்கார் இணங்காவிட்டால் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக முழக்கம் செய்தது. ஆனல் செயலில் இறங்க மட்டும் அது தயங்கி நின்றது.

ஜெயப்பிரகாஷும், சோஷலிஸ்டுகளும் யுத்தத்திற்கு எதிராகவும், பொதுஜனப் போராட்டத்திற்குச் சாதகமாகவும் செய்த புயல்வேகப் பிரசாரம் காங்கிரஸ் தலைமையின் தேக்க உணர்ச்சியை நிர்ப்பந்தமாக மாற்றியது. அது கொஞ்சங் கொஞ்சமாக போராட்டப் பாதையில் நகர ஆரம்பித்தது.

காங்கிரஸ் மந்திரி சபைகள் 1939ல் ராஜீனமாச் செய்து வெளியேறியதும், 1940ல் தனி நபர் சத்தியாக்கிரகம் ஆரம்பமானதும் சிறிய நடவடிக்கைகளேயாயினும், ஜெயப்பிரகாஷின் தலைமையில் சோஷலிஸ்டுகளால் நடத்தப்பட்ட யுத்த எதிர்ப்புப் பிரசாரத்தின் விளைவுகளே இந்தச் சிறிய நடவடிக்கைகளும்.

A.3293

# ஆகஸ்டு புரட்சியின்போது

1939ல் இரண்டாவது ஏகாதிபத்திய யுத்தம் மூண்டவுடன் இந்திய அரசியலில் புதிய வேகம் ஏற்பட்டது.

இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளிடையேயும் ஒற்றுமை ஏற்பட்டு விட வில்லை.

**'இந்தியா முழுதுக்கும்'** என்ற தேசிய உணர்ச்சியுடன் போராடும் காங்கிரஸைத் தவிர, ஏனைய வகுப்புவாதக் கட்சியினரும், பிற்போக்கு வாதிகளும், யுத்தத்தால் தங்கள் நலன்களுக்கு லாபம் கிடைக்குமா என்பதில் கணக்குப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

காங்கிரஸ் அணிவகுப்பு மட்டும், தேசிய விடுதலைப் பாதையில் இந்தச் சந்தர்ப்பத்தில் வேகமாக ஒற்றுமையுடன் முன்னேற ஆரம் பித்தது. காங்கிரஸுக்குள் தலைமைக்காக நடந்த போட்டியும், மறைய ஆரம்பித்தது.

இந்தியாவுக்கு விடுதலை நிச்சயமாகக் கிடைக்கும் என்ற உத்தரவாதத்துடன், உலக

மக்களின் சுதந்திரத்தையும், சுயநிர்ணய உரிமையையும் காப்பாற்ற நேர்மையாகப் போரிடும் நியாயமான கட்சியுடன் சேர்ந்து தோளோடு தோளொட்டிப் போரிடப் பெரும் பான்மையான தேசீய வாதிகள் சித்தமாயிருந்தனர். இந்தமுடிவைச் சுதந்திரமாகச் செய்யும் நிலைமை தங்களுக்கு வேண்டுமென இந்த தேசீயவாதிகள் கோரினர்.

உலக மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடுவதாகச் சொன்ன பாஸிஸ்டுகளின் பேச்சில் காங்கிரஸுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விடவில்லை. பாஸிஸத்தின் குணம், செய்கை, அமைப்பு இவைகளை நன்ருக அறிந்திருந்த காங்கிரஸுக்கு அதனுடைய வார்த்தைகளில் எப்படி நம்பிக்கை ஏற்படமுடியும்?

காங்கிரஸ் பாஸிஸத்தின் அபாயத்தை ஆரம்பத்திலேயே அறிந்திருந்தது; அதை எதிர்த்தும் வந்திருக்கிறது. அதேபோல சுயநிர்ணய உரிமைக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் போரிடுவதாகத் தம்பட்டமடித்த பிரிட்டாஷாரின் வார்த்தைகளிலும் காங்கிரஸுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. பாஸிஸ்டுகளின் 'முறட்டு' வழிகளைப் பின்பற்ருது, ஆனல், 'வேறுநாகரீக' வழிகளில், உலகத்தின் பலநாட்டு மக்களின் சுதந்திரத்தைப் பறித்து அந்நாடுகளில் தேசீய இயக்கங்களை ஒடுக்கி

வரும் பிரிட்டிஷாரின் ஏகாதிபத்தியச் சரித்திரத்தைக் காங்கிரஸ் படித்து மிருக்கிறது; அந்த ஏகாதிபத்திய முறையின் கீழ், அடிமைப் பட்டுக் கிடக்கும் இந்திய மக்களை விடுதலைபெற அணிவகுத்து நிற்பதால் பல அடக்கு முறைகளுக்கு ஆளாகி அனுபவம் பெற்றுமிருக்கிறது. இந்நிலையில், **'விடுதலைக்காக யுத்தம்'** என்ற பிரிட்டிஷாரின் கோஷம் காங்கிரஸுக்கு எப்படி நம்பிக்கையை யூட்டமுடியும்? முதல் யுத்த காலத்தில், இதே கோஷத்துடன் இந்தியாவின் உதவியைப்பெற்று வெற்றியடைந்த பின்னர், இந்திய மக்களைச் சுட்டு வீழ்த்திய பிரிட்டனின் இறந்தகாலச் சரித்திரத்தைக் காங்கிரஸ் எப்படி மறந்துவிட முடியும்? இதனால் தான், இப்போது காங்கிரஸுக்கு பிரிட்டனின் யுத்த லட்சியங்களில் அவநம்பிக்கை ஏற்பட்டது.

**"எங்கள் நாட்டை விடுவிப்பதுமூலம் உலகத்தில் உள்ள சிறியநாடுகளின் சுதந்திரத்துக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் நீங்கள் நேர்மையாகப் போராடுகின்றீர்கள் என்பதை நிரூபிக்கவும். அப்போது நாங்கள் உங்கள் அணிவகுப்பில் சேர்ந்து அறப்போர் செய்கிறோம்"** என்று 1939-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் **வார்தாவில்** கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் தீர்மானம் செய்தது. இந்தக் கூட்டத்துக்கு விசேஷ அழைப்பின்படி, ஜெயப்பிரகாஷும், ஸ்ரீ

சுபாஷ் போஸுும் விஜயம் செய்திருந்தார்கள். ஜெயப்பிரகாஷ், காங்கிரஸ் காரியக்கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரித்தார். ஸ்ரீ சுபாஷ் போஸ் இந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளவில்லை. கூட்டம் முடியுமுன்பே, அவர் வெளியேறி விட்டார்.

யுத்தத்திலேயே சேரக்கூடாது என்ற 'தனித்து நிற்கவேண்டும்' என்று சொல்வோரின் அபிப்பிராயத்தையும், இந்தியாவை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் பிரிட்டிஷார் யுத்த அபாயத்தில் சிக்குண்டிருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, எந்தக் கட்சியுடன் சேர்ந்தால் நமது சுதந்திர லட்சியம் சித்தியாகுமோ, அதனுடன் சேர்ந்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை முறியடித்து விடுதலை பெறவேண்டும் என்ற கோஷ்டியின் அபிப்பிராயத்தையும் சமரசம் செய்த காங்கிரஸின் தீர்மானத்தை ஜெயப்பிரகாஷ் ஆதரித்ததில் பிசகில்லை; கொள்கை முரண்பாடுமில்லை. விவேகம் நிறைந்த ஒரு புரட்சி வீரனின் திருஷ்டியிலேதான் ஜெயப்பிரகாஷ் இத் தீர்மானத்தை ஆதரித்தார்.

ஜெயப்பிரகாஷின் இந்தப் போக்கை ஸ்ரீ சுபாஷ் போஸுும், அவரது '**முன்னேற்ற**'க் கட்சியினரும் (Forward Bloc) 'இப்போதே பொதுஜனப் புரட்சியைத் துவக்கவேண்டும்'

என்று அப்போது கோஷம் செய்த கம்யூ னிஸ்டுகளும் கண்டித்தார்கள்.

பொது ஜனப் போராட்டம் வேண்டும் என்ற உணர்ச்சியில் யாருக்கும் பின்வாங் காமல் கிளர்ச்சி செய்த ஜெயப்பிரகாஷை, இந்திய கம்யூனிஸ்டுகள் 'காந்தியின் கையாள்' என்று வாயாரத் திட்டினர்கள்.

**'தேசியத்திற்கு அபாயம் ஏற்படும்போதெல்லாம் தேசியத்துடன் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும்'** என்று ஜெயப்பிரகாஷ் சொல்லுவதாலும், அப்படியே செய்வதாலும், அவர், தன்னு டைய ஜீவாதாரமான லட்சியத்தைக் காற்றில் பறக்க விட்டு விட்டாரென்றே, ஒருவருடைய கையாளாய்விட்டார் என்றே கூறுவது பொருந்தாது. தேசியம் பிற்போக்கான பாதை யில் போகும்போது அல்லது பலவீனமடைந்து நிற்கும்போதும், அதைத் தீவிரமான பாதைக் குத் திருப்பவும், அதற்கு பலம் கொடுக்கவும், தேசீய ஐக்கியத்தைப் பொதுஜன சக்தி கொண்டு நிலை நாட்டுவதுதான் புத்திசாலித் தனமான கொள்கையாகும்; தேசபக்தி நிறைந்த காரியமுமாகும். இந்த முக்கியமான தேசீயக் கடமையைக் கலக்கமின்றி, ஜெயப் பிரகாஷ் உணர்ந்திருக்கிறார்.

காங்கிரஸ் தீர்மானம் நிறைவேறிய பிறகு அதன் குரலை கம்பீரமாக இந்தியாவெங்கும்

எடுத்துரைத்து, உலக ஆதிக்கத்திற்காகப் போட்டியிடும் இரண்டு ஏகாதிபத்தியங்களையும் எதிர்க்க இந்தியமக்களைத் தட்டி எழுப்பியவர் ஜெயப்பிரகாஷ்தான் என்பதை மறந்து விடுவதற்கில்லை.

காங்கிரஸின் கோரிக்கையை பிரிட்டிஷ் சர்க்கார் அலட்சியம் செய்து விட்டதையும் அதன் காரணமாக மாகாணங்களில் அப் போது பதவியிலிருந்த காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜீநாமா செய்ததையும் வாசகர்கள் அறிவார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் (1940 ல்) ஜெயப்பிரகாஷை சர்க்கார் கைது செய் தார்கள்.

சர்க்காரின் அலட்சியப் போக்கை எதிர்த்துத் துணிகரமான ஒரு நடவடிக்கையில், காங்கிரஸ் தலைமையினர் இறங்க யோசித்துக் கொண்டிருந்தார்கள். காந்திஜீயின், யுத் தத்தை வெறுக்கும் சாத்வீகக் கொள்கைக்கும், இந்தியாவிற்கு யுத்த முடிவில் சுதந்திரம் கொடுப்பதாகப் பிரகடனப் படுத்தி, மத்தியில் தேசீய சர்க்காரை ஏற்படுத்தினால், வெளிநாட்டு ஆக்கிரமிப்பை எதிர்க்க பிரிட்டிஷ் சர்க்கா ருடன் ஒத்துழைக்கலாம் என்ற பண்டித நேருவின் கொள்கைக்கும் இடையே இருந்த,

முற்றிலும் மாறுபட்ட வேற்றுமையே காங்கிரஸின் தயக்கத்திற்குக் காரணம்.

இந்த வேளையில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும், பாஸிஸத்தையும் எதிர்க்கப் பொது ஜனப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று தீவிரமாகப் பிரசாரம் செய்த தீவிர சக்திகள் மீது சர்க்கார் அடக்குமுறை பாணத்தை ஏவியது. வெவ்வேறு திருஷ்டியில், யுத்தத்தை எதிர்க்கப் போராட்டம் வேண்டும் என்று முழக்கம் செய்த சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் (கொஞ்ச காலத்திற் கெல்லாம் தங்களுடைய யுத்த எதிர்ப்புக் கொள்கையை மாற்றிக்கொண்டு ஒத்துழைப்பாளராக 'பல்டி' யடித்தவர்கள்), ஸ்ரீ சுபாஷ் பாபுவைப் பின்பற்றுகிறவர்கள் - இவர்களை யெல்லாம் சர்க்கார் சிறைக்குள் அடைக்க ஆரம்பித்தனர். இதே காரணத்திற் காகத்தான் ஜெயப்பிரகாஷும் கைது செய்யப்பட்டார்.

சர்க்காரின் அடக்குமுறை காங்கிரஸைத் தட்டியெழுப்பியது. காந்திஜீயின் யுத்த எதிர்ப்பு சாத்வீகக் கொள்கையைக் கூட சர்க்காரின் அடக்குமுறை மாற்றி விட்டது.

ஜெயப்பிரகாஷ் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து 'ஹரிஜன்' பத்திரிகையில் காந்திஜீ எழுதியிருக்கும் பின்வரும் வாக்கியங்

களில் அவருடைய மனமாற்றம் தொனிக்கிறது.

**"ஜெயப்பிரகாஷைக் கைது செய்தது ஒரு துரதிர்ஷ்டமான சம்பவமாகும். அவர் ஒரு அசாதாரணமான ஊழியர். சோஷலிஸத் தத்துவத்திற்கே அவர் ஒரு ஆதார புருஷர். தீமைகளை யெல்லாம் எதிர்க்கவே அவர் பிறந்துள்ளார். தாய் நாட்டின் விடுதலைக்காக தனது என்ற எல்லாவற்றையும் அவர் துறந்துவிட்டார். துன்பங்களைத் தாங்கும் அவருடைய சிந்தையின் வீரத்துக்கு நிகரில்லை. அவரைக் கைது செய்தது மூலம் சர்க்கார் ஒரு நெருக்கடியைக் கிளப்ப முயற்சி செய்கிறார்கள். அப்படியே செய்யட்டும். அவ்வாறு செய்ய சர்க்காருக்கு உரிமை இருக்கிறது. ஜெயப்பிரகாஷ் பலாத்காரப் பிரசாரம் செய்தார் என்ற குற்றச் சாட்டை சர்க்கார் நிரூபிக்கட்டும். ஒரு போராட்டத்தைத் தங்கள் மீது சர்க்கார் திணிக்கின்றார்கள் என்ற எண்ணத்தையே ஜெயப்பிரகாஷைக் கைது செய்ததன் மூலம், சர்க்கார், ஜனங்களின் மனத்தில் புகுத்தியுள்ளார்கள்."**

பிறகு காங்கிரஸின் பிரசித்தி வாய்ந்த புனா தீர்மானம் (தேசீய சர்க்கார் ஏற்படுத்தினால் யுத்தத்தில் சர்க்காருடன் ஒத்துழைப்பது என்ற கருத்துள்ள தீர்மானம்) நிறைவேற்றப் பட்டது. இந்தத் தீர்மானத்தையும் பிரிட்டிஷ் சர்க்கார் அலட்சியம் செய்து விட்டார்கள். 1940 ல் **ராம்காரில்** கூடிய காங்கிரஸ் 'இந்த யுத்தம் ஏகாதிபத்தியத்தை நீடிக்கவே நடத்தப் படுகின்றது' என்ற தீர்மானத்தைச் செய்தது.

ஆனால், அதை எதிர்த்துத் தீவிரமான ஒரு நடவடிக்கையில் இறங்க மட்டும் தீர்மானிக்காமல் காங்கிரஸ் தலைமை தயங்கிக் கொண்டிருந்தது.

யுத்தத்தைத் தீவிரமாக எதிர்க்க வேண்டும் என்ற பொதுஜன உணர்ச்சி நிர்ப்பந்தப் படுத்தியும் கூட, காங்கிரஸின் தலைமையிலிருந்த மிதவாதிகள் பொதுஜனப் போராட்டத்தை ஆரம்பிக்கத் தயாராக இல்லை. ஆனால், சர்க்காரின் அடக்கு முறையால் மனம் மாறிய காந்திஜீ, 'சர்க்காரை எதிர்த்து சிறிய அளவிலாவது ஒரு கண்டன சத்தியாக்கிரஹத்தை காங்கிரஸ் ஆரம்பிக்க வேண்டுமென' நினைத்தார். காங்கிரஸின் தேசீய சர்க்கார் கோரிக்கைக்கும் சர்க்கார் இணங்கவில்லை. நாட்டில் பொது ஜனப் போராட்டம் வேண்டும் என்ற உணர்ச்சி தீவிரமாயிருந்தது. இத்தகைய நிர்ப்பந்தமான நிலையில் தான், காந்திஜீயின் தனி நபர் சத்தியாக்கிரஹம் நடந்தது.

இந்தக் காலத்தில் ஜெயப்பிரகாஷ் சிறையிலிருந்தார். அப்போது ஜெயப்பிரகாஷைப் பற்றிய பரபரப்பான சம்பவம் ஒன்று நடந்தது. அவரை **டியோலி** முகாம் சிறையில் பேட்டி காண வந்த அவரது மனைவி மூலம் **(ஸ்ரீமதி பிரபாவதி தேவி)** ஜெயப் பிரகாஷ் அனுப்பிய, குறிப்புகள் அடங்கிய ஒரு கடிதத்தைச் சிறையதிகாரிகள் பறிமுதல் செய்தது

தான் அந்தச் சம்பவம். அதைச் சர்க்கார் பிரசுரித்தது. ஜெயப்பிரகாஷ் ஒரு '**ஐந்தாம் படை**' என்று பிரசாரம் செய்யவே சர்க்கார் இந்த சூழ்ச்சியைக் கையாண்டது. ஜெயப்பிரகாஷின் கறைபடாத தேசபக்தியை இந்தக் கீழ்த்தரமான சூழ்ச்சி மூலம் சர்க்கார் கேவலப்படுத்த விரும்பியது. ஆனால், பொதுமக்கள் இந்தப் பிரசாரத்தை நம்பவில்லை. தங்களுக்குச் சாதகமான பகுதிகளைப் பிரசுரித்து ஜெயப்பிரகாஷைப்பற்றிக் கேவலமான பிரசாரம் செய்த சர்க்காரின் போக்கைக் கண்டித்து காந்திஜீ விடுத்த அறிக்கை அழியாத ஒரு அரசியல் தஸ்தாவேஜாகும்!

டியோலி முகாம் சிறையில் ஜெயப்பிரகாஷ் உள்பட பலர் இருந்தனர். அங்கே கம்யூனிஸ்டுகளுக்கும் இவருக்கும் பலத்த அபிப்பிராயபேதம் ஏற்பட்டது. அதுவரை '**ஏகாதிபத்திய யுத்தம்**' என்று கோஷித்துக் கொண்டிருந்த கம்யூனிஸ்டுகள், திடீரென '**மக்கள் யுத்தம்**' என மாற்றிக் கோஷிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதுவே ஜெயப்பிரகாஷுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் ஏற்பட்ட அபிப்பிராயபேதத்திற்குக் காரணம்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு ஜெயப்பிரகாஷ் டியோலி முகாம் சிறையிலிருந்து அவரது

சொந்த மாகாணத்திலுள்ள **ஹஸாரிபாக்** சிறைக்கு மாற்றப்பட்டார்.

இதற்குப் பிறகு தான் இந்தியாவின் தேசியவாழ்வில் வேகமாக மாறுதல்கள் ஏற்பட ஆரம்பித்தன.

காந்திஜீயின் தனி நபர் சத்தியாக்கிரஹமும் நின்றது. பிரிட்டிஷ் சர்க்காருக்கு யுத்தத்தில் தோல்விகள் ஏற்பட ஆரம்பித்தன. மேற்கு அரங்கத்தில் ஹிட்லரின் முன்னேற்றம், தூரக் கிழக்கே ஜப்பானியரின் பாய்ச்சல் வேகம், இவைகளுக்கிடையே தத்தளித்துக் கொண்டிருந்த பிரிட்டிஷ் சர்க்கார், இந்தியாவில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ள ஒரு அவசிய மேற்பட்டது. **சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ்** ‘இந்திய தேசீயத்தை ஏமாற்றி ஏகாதிபத்தியத்தைப் பலப்படுத்த’ இந்தியாவுக்கு அனுப்பப் பட்டார். இந்தியாவுக்கு வந்த அவர், இந்தியாவில் பிரிவினை உணர்ச்சியை அதிகப் படுத்தி விட்டுத் திரும்பிச் சென்றார். இதன் பயனாய் பிரிவினை வாதிகளுக்கு பலமேற்பட்டது; தேசீயத் தலைமையில் சோர்வு ஏற்பட்டது. காந்திஜீக்கு இந்த நிலைமை பிடிக்கவில்லை. காங்கிரஸ் தலைமையிலிருந்த பண்டித நேரு போன்றவர்களுக்கு இதனால் ஆத்திரம் ஏற்பட்டது. ‘இந்த நிலையில் போராட்டமே கூடாது; விட்டுக் கொடுத்தாவது சமரசம் செய்து

கொள்ள வேண்டும்' என்ற அபிப்பிராயம் கொண்ட ஒரு சில காங்கிரஸ் மிதவாதத் தலைவர்களைத் தவிர, காந்திஜீக்கும் இதர தலைவர்களுக்கும் சுதந்திரத்துக்காகவும் ஒற்றுமைக்காகவும் ஒரு பொதுஜனப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற தீவிரமான உணர்ச்சி ஏற்பட்டு விட்டது.

**'ஒற்றுமை முதலில்'** என்ற, போராட்டத்தைத் தடை செய்யும் கோஷத்துக்கு எதிராக, **'ஒற்றுமைக்காக விடுதலை'** என்ற கோஷத்தை தேசீயத் தலைமையில் உள்ள பெரும்பாலோர் காந்திஜீயுடன் கோஷிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

**"வகுப்பு ஒற்றுமை ஏற்பட்டாலன்றி சுதந்திரம் கிடைக்காது"** என்ற தனது நீண்டநாளைய அபிப்பிராயத்தைக் காந்திஜீ மாற்றிக்கொண்டார்.

பிரிட்டனின், அதிகாரத்தை விட்டுக் கொடுக்காத ஏகாதிபத்திய மனோபாவமும், சர். கிரிப்ஸின் பிரிவினை நாடகமும், பிரிவினை வாதிகளின் தேசீய விரோதமான காரியங்களுமே காந்திஜீயின் இந்தப் பழைய அபிப்பிராயம் மாறுவதற்குக் காரணங்களாயிருந்தன.

**"மூன்றாவது மனிதனுடைய ஆட்சி நீக்கப்பட்டாலொழிய இந்தியாவுக்குச் சுதந்திரமுமில்லை; இங்கே ஒற்றுமையும் நிலவ முடியாது"** என்ற தீர்மானமான நிலைக்குக் காந்திஜீ வந்துவிட்டார்.

இந்த லட்சியத்தைப் பெறப் போராட்டம் நடத்தியே யாக வேண்டும் என்ற நிலையை காந்திஜீயும் தலைவர்களும் மேற்கொண்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

போராட்டப் பாதையில் காங்கிரஸ் தீவிர மாக இறங்க ஒரு அடி முன் வைத்தது என்று தான் சொல்ல வேண்டும்.

இந்த நிலையில் தான், காந்திஜீயின் "**இந்தியாவை விட்டு வெளியேறு**" (Quit India) என்ற சங்கநாதம் முழங்கிற்று. இந்தியாவின் சுதந்திர உணர்ச்சி, காந்திஜீயின் எழுத்து மூலம் ஒரு ஜீவனுள்ள கோஷமாகவே பகிரங்கமாகக் கிளம்பிற்று!

1942ம் ஆண்டு, ஜூலை மாதம், **வார்தா**வில், காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. காந்திஜீயின் இந்த யுத்த கோஷத்தை (இந்தியாவை விட்டு வெளியேறு) ஏற்றுக்கொண்டு ஒரு தீர்மானத்தை அது நிறைவேற்றியது.

அதே வருடம், ஆகஸ்டு மாதம், 8ம் தேதி **பம்பாயில்** கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் இந்தத் தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்தது. இந்தத் துணிவான நடவடிக்கையின் மூலம் இந்தியாவின் குரலை காங்கிரஸ் உலகிற்கே முழக்கியது!




*Photo:- Sri. Udit Gopal, Bombay*

1946 ல்

பம்பாய் சௌபாதி கடற்கரையில் ஜெயப்பிரகாஷை வரவேற்பதற்காக நடைபெற்ற மாபெருங்கூட்டத்தில்
ஜெயப்பிரகாஷ் நாராயண், டாக்டர் ராம மனோகர் லோஹியா, ஸ்ரீமதி பிரபாவதி ஜெயப்பிரகாஷ்
முதலியோர் மேடைமீது அமர்ந்திருக்கிறார்கள்.

பிரசித்தி வாய்ந்த இந்த '**ஆகஸ்டு தீர்மானம்**' அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேறிய போது, காங்கிரஸ் வாதிகளின் முகங்களில் சோர்வற்ற வீர உணர்ச்சி ததும்பியது!

"**செய் அல்லது செத்துமடி.**" (Do or die) என்று காந்திஜீ முரசு கொட்டியது தேசத்தையே தட்டி யெழுப்பியது!

போராட்டம் ஆரம்பிக்கும் அதிகாரத்தை காந்திஜீக்கு காங்கிரஸ் கொடுத்தது. காந்திஜீ போராட்டம் ஆரம்பிக்கும் தேதியைக் குறிப்பிடவில்லை. ஆனால், சர்க்கார் இந்திய தேசீயத்தின்மீது, போராட்டத்தை உடனேயே, வலுவில் திணித்துவிட்டார்கள்! 1942 ஆகஸ்டு 9ம் தேதி அதிகாலையிலேயே காந்திஜீ உள்பட எல்லா தலைவர்களையும் சர்க்கார் கைதுசெய்துவிட்டார்கள். காங்கிரஸ் சட்ட விரோதமான ஸ்தாபனம் என்று அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பயங்கரமான அடக்குமுறையைச் சர்க்கார் கையாண்டனர். நாடெங்கும் பல காங்கிரஸ் வாதிகள் கைதுசெய்யப்பட்டனர். மாணவர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனர். கிராமங்கள் அழிக்கப்பட்டன. நிரபராதிகள் சர்க்காரின் விமானக் குண்டு வீச்சுக்கு இரையானார்கள். மாதர்கள் கற்பழிக்கப்பட்டனர்.

இவைகளுக்கெல்லாம் பணிந்து கோழைகளாக உயிர் விடாமல், இந்தியாவின் சரித்திரத்திலேயே, முதன்முதலாக, இந்தியப் பொது மக்கள் அந்நிய சர்க்காரை எதிர்த்துத் தங்கள் தாய்த் திருநாட்டின் விடுதலைக்காகப் பகிரங்கப் புரட்சி செய்தார்கள். ஆங்காங்கே சில இடங்களில் சர்க்காரின் மூச்சுத் திணறியது. மறைவாயிருந்த பல காங்கிரஸ் வாதிகள், சிறப்பாக சோஷலிஸ்டுகள் சர்க்காரின் ஆக்கிரமிப்புக்கு விரோதமாக ஜனங்களைத் திரட்டினார்கள்.

பயங்கொள்ளிகளின் எதிர்ப்பையும், கம்யூனிஸ்டுகளின் துரோகத்தையும் லட்சியம் செய்யாமலும், அஹிம்சையா? பலாத்காரமா? என்று குழம்பிக்கொண்டிருக்காமலும், இந்திய சோஷலிஸ்டுகள், தானாகவே எழுந்த இந்த மக்களின் புரட்சியை மறைவாக இருந்துகொண்டு, கட்டுப்பாடான ரீதியில் பலப்படுத்த வேலை செய்தார்கள். **'போராட்டப் பாதையில் காங்கிரஸ் இறங்கவேண்டும்' என்றுதுடித்துக்கொண்டிருந்த சோஷலிஸ்டுகள் காங்கிரஸால் ஆரம்பிக்கப் படாவிட்டாலும், சர்க்காரின் அடக்குமுறையிலிருந்து ஜனித்தெழுந்த ஒரு புரட்சியைப் பலப்படுத்த வேலை செய்தது முற்றிலும் சரியான காரியமேயாகும்.**

தன் நாட்டின் விடுதலைக்காக வெளியே ஒரு புரட்சி நடந்துகொண்டிருக்கும்போது, அதைப் பலப்படுத்தும் வேலையில் தன்னுடைய சகாக்கள் ஈடுபட்டிருந்தபோது, தான்மட்டும்

உள்ளேயிருக்க ஜெயப்பிரகாஷுக்கு மனம் எப்படி வரும்? எப்படியாவது சிறையிலிருந்து தப்பியோடிவிட வேண்டுமென இவர் திட்டமிட்டார்.

1942-ம் ஆண்டு நவம்பர் 8-ம் தேதி ஜெயப்பிரகாஷ் ஹஸாரிபாக் சிறையிலிருந்து தன்னுடைய ஐந்து சகாக்களுடன் (**ஸ்ரீ ஜோகேந்திர சுக்லா, ஸ்ரீ ராமானந்த மிஸ்ரா, ஸ்ரீ சூர்ஜ்ய நரேன் சின்ஹா, ஸ்ரீ குலாப் சந்த்குப்தா, ஸ்ரீ ஷாலிக் ராம் சிங்க்**) தப்பிச் சென்றார்.

ஐரிஷ் புரட்சி வீரன் **ஈமன்டிவாலரா**, தனக்களிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனையை ஏமாற்றி சிறையிலிருந்து தப்பியோடி பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தைக் கலக்கவைத்தார்! 1792-ல் பாரிஸிலுள்ள **பாஸ்டைல்** (Bastille) சிறையிலிருந்து ஒரு பிரெஞ்சு புரட்சிக்காரன் தப்பியோடி பிரான்ஸ் நாட்டின் ஆளும் வர்க்கத்தைத் திகைக்க வைத்தான்! 1941-ம் ஆண்டு ஜனவரி 15ந் தேதி **ஸ்ரீ சுபாஷ் போஸ்** இந்திய சர்க்கார் அதிகார வர்க்கம் கிடுகிடுத்துப் போகும்படியாகக் கடுமையான கண்காணிப்பையும் கடந்து, இந்தியாவைவிட்டுத் தப்பிச் சென்றார்! புரட்சி வீரர்களின் உணர்ச்சியும், துணிவுமே இப்படித்தான்! அதே உணர்ச்சியுடனும், துணிச்சலுடனுமே ஜெயப்பிரகாஷ் சிறையிலிருந்து தப்பிச் சென்றார்!

1946 ஏப்ரல் மாதத்தில் ஜெயப்பிரகாஷ் விடுதலையானதுமே இவர் சிறையிலிருந்து தப்பிச் சென்ற பல விவரங்கள் தெரியவந்தன.

[ஜெயப் பிரகாஷின் ஆப்த நண்பரும், காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியின் பிரபல தலைவர்களில் ஒருவரும், காசி மஹாராணியின் சகோதரரும், ஹஸாரிபாக் சிறையிலிருந்து ஜெயப்பிரகாஷுடன் தப்பியவர்களில் ஒருவருமான **பண்டித ராமானந்த மிஸ்ரர**, ஜெயப் பிரகாஷும், மற்ற ஐவரும் சிறையிலிருந்து தப்பிய விவரத்தை ஒரு கட்டுரையாக, பம்பாயைச் சேர்ந்த **'நேஷனல் பிரஸ் சிண்டிகேட்'** என்ற பிரசுராலயத்தாருக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார். இந்தக் கட்டுரை **'பிளிட்ஸ்'** (பம்பாயிலிருந்து வெளிவரும் ஆங்கில தேசீய வாரப் பத்திரிகை) பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. இதே கட்டுரையை நான் 'நேஷனல் பிரஸ் சிண்டிகேட்டாரின் அனுமதி பெற்று பின் வருமாறு மொழிபெயர்த்திருக்கின்றேன்: ஆசிரியர்.]

"பொங்கிக்கொண்டிருந்த உணர்ச்சியுடன், நான் **கட்டாக்** ஜில்லா மாஜிஸ்டிரேட் ஸ்ரீ L. P. சிங், I. C. S. அவர்களின் வீட்டுக்குள் நுழைந்தேன். அந்தத் தினம் 1942 செப்டம்பர் 23-ந் தேதியாகும்: ஒரிஸ்ஸா மாகாண அதிகாரிகளுக்கெல்லாம், ஸ்ரீ சிங் மூலம், காங்கிரஸின்

புரட்சிச் செய்தியைத் தெரிவிக்கவே நான் அவருடைய வீட்டுக்குச் சென்றேன்.

"இரண்டு வாரங்களுக்கு முன்பாகத்தான் நான் பம்பாயின் தெருக்களில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களைப் பார்த்தேன். பிறகு சென்னை, ஆந்திரா முதலிய இடங்களைச் சுற்றி 'ஏற்பாடுகளை'க் கவனித்துவிட்டு ஒரிஸ்ஸா வந்தேன். ஒரிஸ்ஸாவில் என் வேலைகளை முடித்துவிட்டு, அதே இரவு **கல்கத்தா**வுக்குப் புறப்படுவது என்பது என் திட்டம்.

"C. I. D. போலீஸாருக்குத் தப்பிய நான், இந்த I. C. S. அதிகாரியின் வீட்டுக்கு வந்ததவுடன் என்னுடைய நம்பிக்கைகளெல்லாம் தரைமட்டமாய்விட்டதைக் கண்டேன். ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் வீட்டைப் போலீஸார் வளைத்துக்கொண்டுவிட்டார்கள் என்று எனக்கறிவிக்கப்பட்டது. நான் வலையில் மாட்டிக் கொண்டேன். தப்பியோடுவதற்கு வழியொன்றுமில்லை.

"என்னிடத்தில் ஒரு மோட்டார் கார் இருந்தது. போலீஸ் வளையத்தை ஊடுருவிப் பாய்ந்தோடும்படி நான் மோட்டார் டிரைவரிடம் சொன்னேன். அவனும் துணிச்சலுடன் அபாயத்தை எதிர்க்கச் சித்தமானான். நான் காரில் அமர்ந்து கொண்டேன். மின்னல் வேகப் பாய்ச்சலுடன் என்னுடைய கார்

போலீசாரின் வளையத்தைத் துளைத்து சில நூறு கெஜங்கள் போய்விட்டது. அவ்வளவு தான் அவனல் போக முடிந்தது! அவனுடைய கைகள் நடுங்கி விட்டன. மனவுறுதியை அவன் இழந்து விட்டான். முடிவு என்னவா யிருக்க முடியும்! போலீசாரின் பிடிப்பில் நாங்கள் சரணடைய நேர்ந்ததுதான்!

"நான் ஒரு கைதியானேன். போராட்ட ஆரம்ப காலத்திலேயே சிறைப்படுவதை என் உணர்ச்சி ஒப்புக்கொள்ள மறுத்தது. என்னு டைய காரியம் இன்னும் பூர்த்தியாகவில்லை. தேசமே புரட்சித் தீயில் குதித்திருக்கிறது. என்னுடைய மக்கள் சிறைக்கு வெளியே கொதிப்படைந் திருக்கிறார்கள். இந்த நிலையில் நான் நிம்மதியாகச் சிறைக்குள்ளே எனது காலத்தைக் கழிக்க முடியுமா? என் ஒவ் வொரு நரம்பின் ஒவ்வோர் அணுவும்: "முடியாது. நான் வெளி யேறியே யாக வேண்டும். நான் ஓய்வெடுத்துக் கொள்ள முடியாது" என்று சொல்லிற்று.

"நான் கட்டாக், **பர்ஹாம்பூர்** சிறைகளில் இருந்தபோது, ஒவ்வொரு விநாடியும் எனக்கு ஒரு யுகமாயிருந்தது. அமைதியிழந்து ஆத்திரம் கொண்டிருந்தேன்".

"நான் கட்டாக் சிறையில் இருக்கும் போது தப்பி யோடிவிட எல்லா ஏற்பாடு

களையும் செய்து வைத்திருந்தேன். ஆனால், திடீரென, நான், பர்ஹாம்பூர் சிறைக்கு மாற்றப் பட்டு விட்டேன்''.

"அச்சிறையிலும் எனது முயற்சியைத் தொடங்கினேன். ஆனால், அங்கிருந்தும் **ரஸல் குண்டா** சிறைக்கு மீண்டும் மாற்றப்பட் டேன். இங்கேயும் எனது முயற்சியை மூன்ரு வது முறையாக ஆரம்பித்தேன். ஆனால், இங்கே இருந்தும் எனது சொந்த மாகாணத்தி லுள்ள ஹஸாரிபாக் சிறைக்கு (பீஹார்) மாற்றப்பட்டேன்.

"இங்கு மாற்றப்பட்டது எனக்கு சந்தோ ஷத்தை யளித்தது. அனுபவம் நிறைந்த புரட்சிக்காரர்களான ஸ்ரீ ஜோகேந்திர சுக்லா, ஸ்ரீ சூர்ஜ்ய நரேன் சின்ஹா முதலி யோர்களும், இவர்களுக்கெல்லாம் நடுநாய கமாய் இருந்த எங்கள் அன்பிற்குரிய தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் முதலியோருடன் என்னையும் சேர்த்து வைத்ததுதான் என்னு டைய சந்தோஷத்திற்குக் காரணம். அவர் களும் என்னைப் போலவே சிறையை விட்டுத் தப்பிச் செல்லத் துடிதுடித்துக் கொண்டிருந் தனர். காலம் கடத்துவதற்கு அது நேரமில்லை. வெளியிலிருந்து வரும் தகவல்கள் எங்களுக்கு வேதனை கொடுப்பதாய் இருந்தன. ஆகஸ்டில் கிளம்பிய பொதுஜனப் புரட்சி அலையின்

வேகம் தணிந்து கொண்டிருந்தது. தலைவர்களெல்லாம் சிறைக்குள்ளிருந்தனர். வெளியே சிதறிக்கிடந்த ஆயிரக்கணக்கான ஊழியர்கள் புதிய தலைமைக்காக ஏங்கிக் கிடந்தனர். ஜெயப்பிரகாஷைப் போன்ற வீரமுள்ள தலைவர் இந்நேரத்தில் வெளியே இருக்க வேண்டும்.; புரட்சிக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும்; தலைமை தாங்கி நடத்த வேண்டும். இது எங்களுடைய துடிப்பான அவா.

" இந்நேரத்தில் ஜெயப்பிரகாஷின் உடல் நிலை சரியாயில்லை. அவசரமான வெளி உதவிக்காக எதிர் பார்க்க நேரமுமில்லை. சிறைக்கு வெளியே புரட்சிப் புயலில் ஜெயப்பிரகாஷ் குதிக்க முடியுமா? ஆம். குதித்துத்தான் ஆக வேண்டும். நான் அவ்வாறு தான் எண்ணினேன். ஜெயப்பிரகாஷும் அவ்வாறு தான் எண்ணினர். நாங்கள் அறுவர் தப்பிச் செல்வதென முடிவு செய்யப்பட்டது. எங்களுடன் இருந்த பலரில் ஒரு சிலர் தான் இந்த முடிவை அறிவார்கள். அவர்கள் ரகசியமாகவும் சந்தடியின்றியும் எங்களுக்கு ஆசி கூறினர்கள். ஆனல் அவர்களின் கண்களில் வழிந்தோடிய கண்ணீரை மட்டும் நாங்கள் மறக்கவே முடியாது!

"1942ம் ஆண்டு தீபாவளித் திருநாள். நவம்பர் 8ந் தேதி; இரவு 9-30 மணி; காரிருள்

வேளை; அந்த இருளைச் சிறையை விட்டுத் தப்பியோட நாங்கள் பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தோம். மிக உயரமான மதில் சுவரை அந்நேரத்தில் தாண்டி விட வேண்டுமென நாங்கள் முடிவு செய்ததை ஆறே நிமிடங்களில் நிறைவேற்றி வி...ோம்.

"தப்பிச் சென்ற அந்த தினத்திற்கு முன்பே நாங்கள் ஸ்ரீ ஜோகேந்திர சுக்லாவின் தலைமையில் தப்பிச் செல்வதற்கான வழிகளில் பயிற்சி பெற்றோம். வெளியார் உதவியின்றி தப்பிச் செல்ல வேண்டும் என்பது தான் எங்கள் தீர்மானமான முடிவு. சிறையதிகாரி களின் உதவியை நாடும் அபாயத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. எங்கள் சொந்த பலத்திலேயே நாங்கள் தப்பிச் செல் லத் தீர்மானித்தோம். ஜெயப்பிரகாஷ் தப்பிச் செல்ல தீர்மானம் செய்திருக்கிறார் என்ற முடிவை நாங்கள் பரம ரகசியமாக வைத்தி ருக்க வேண்டியிருந்தது. இந்தத் திட்டத்தை அறிந்து கொண்டு, அதிகமான பணத்திற்காக எங்களை எவராவது காட்டிக் கொடுத்துவிட் டால், எங்கள் நோக்கமெல்லாம் சிதறிவிடும் என்ற பயத்தால் நாங்கள் இவ்வளவு ஜாக்கிர தையாக, ரகசியமாக இருக்க வேண்டியிருந் தது. சிறையதிகாரிகள் உதவி அல்லது வெளி யிடத்து உதவியின்றி நாங்கள் தப்பிச் சென்றி

ருக்கவே முடியாது என்று இன்னும் பலர் சாதிக்கின்றனர். அது முற்றிலும் தவறு. நாங்கள் எவருடைய உதவியையும் கோர வில்லை. எங்களுக்கு எவரும் எந்த உதவியும் செய்யவில்லை. நாங்கள் எங்களுடைய திறமை களிலேயே நம்பிக்கை வைத்திருந்தோம்.

“மதில் சுவரின் இருண்ட மூலையை நாங்கள் தேர்ந்தெடுத்தோம். ஒரு முறை அங்கிருந்து புறப்படும் காவலாளி மீண்டும் அதே இடத்திற்கு சுற்றிக்கொண்டு வர எட்டு நிமிடங்கள் பிடிக்கும் என்று நாங்கள் கணக்கு போட்டுக்கொண்டோம். எனவே, காவலாளி யின் பயமின்றி தப்பிச்செல்ல ஐந்து அல்லது ஆறு நிமிடங்களே போதும் என்று முடிவு செய்து கொண்டோம்.

“மதில் சுவரின் உயரம் 17 அடிகள். எங்களில் எவராவது உச்சிக்குப்போக முடிந்து விட்டால் எங்கள் பிரச்னை தீர்ந்துவிடும். எங்க ளிடத்தில் உயரமான கோலோ அல்லது ஏணியோ இல்லை. எனவே ‘மனித’ ஏணியைக் கொண்டுதான் நாங்கள் மதில் சுவரைக் கடக்க வேண்டி யிருந்தது. சிறை யதிகாரிகளால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த புதிய துணிகளைக் கிழித்து அவைகளைக் கொண்டு ஒரு நீளமுள்ள கயிற்றைத் தயார் செய்து கொண்டோம்.

"குறிப்பிட்ட நேரத்தில் சந்தடியின்றி மதில் சுவருக்கு அருகே சென்றோம். ஒரு மேஜையை சுவரோரத்தில் வைத்தோம். அந்த மேஜையின்மீது ஸ்ரீ ஜோகேந்திர சுக்லா நின்றுகொண்டார். அவருடைய தோள்களின் மீது இன்னொருவர் நின்றுகொண்டார். கயிற்றின் ஒரு நுனியை தன்னுடைய தோள்பட்டைகளில் கெட்டியாகச் சுற்றிக்கொண்டு ஜெயப்பிரகாஷ் அந்த இரண்டாவது நபரின் தோள்களின்மீது ஏறிக்கொண்டு மதிலின் உச்சியை அடைந்துவிட்டார். பிறகு ஒவ்வொருவராக நாங்கள் அறுவரும் மதிலின் உச்சியை அடைந்தோம். எங்களின் உதவிக்காக, கடைசிவரையிருந்த நண்பர் ஒருவர் மேஜையைக் கீழே தள்ளிவிட்டுச் சிறையிலிருந்த இதர நண்பர்களுடன் சேர்ந்துகொண்டார். அவர் போனவுடன் நாங்களும் உச்சியிலிருந்து வெளிப்பக்கம் ஜாக்கிரதையாக இறங்கினோம். எங்கள் இதயம் படபடவெனத் துடிக்க ஆரம்பித்தது. நாங்கள் வேகமாக நடக்கலானோம்.

"கொஞ்சதூரம் நாங்கள் மௌனமாக நடந்தோம். விடுதலை பெற்ற ஆனந்தம் எங்களைச் சிறிது நேரம் பரவசப்படுத்தியது. சிறையதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் எங்களை வளைத்துக்கொண்டு விடுவார்களோ என்ற பயம் எங்களுக்கு ஏற்பட்டது. பொழுது

புலருவதற்கு ஒரு மணி நேரம் முன்புவரை நாங்கள் ஒரே ஓட்டமாக ஓடினோம்.

"அப்பொழுதுதான் எங்களுக்கு உண்மையான கஷ்டங்கள் ஆரம்பித்தன. 'சிறை கோபுரத்தின் தூர விளக்கின் பிரகாசமான - கூர்மையான ஒளி ஆறு மணி நேரங்கள் வீசியது. அவ்வொளி எங்களையே கூர்ந்து கவனிப்பது போல எங்களுக்குத் தோன்றிய போது நாங்கள் பயந்தோம். அவ்வொளியின் உதவியால் எங்களை அதிகாரிகள் பிடித்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சம் எங்களைப் பிடித்துக்கொண்டது. வயல்களில், வரப்புக்களில் நாங்கள் ஓடினோம். அடர்ந்த கானகத்தில் ஒற்றையடிப் பாதையிலும் ஓடினோம். பாதை தெரியாது தட்டுத்தடுமாறினோம். தாரைகளின் உதவியைக்கொண்டே நாங்கள் போக வேண்டிய திக்கைத் நிர்மானித்துக் கொள்ள முடிந்தது.

"விடியற்காலம். நான்கு மணியிருக்கும். நாங்கள் களைத்துப்போய் ஒரு பெரிய மரத்தடியில் விழுந்து விட்டோம். கடுமையான குளிர் எங்களை நடுக்கியது. அதிர்ஷ்ட வசமாக என்னிடத்தில் மட்டும் ஒரு பாக்கெட் சிகரெட்டும் ஒரு திப்பெட்டியும் இருந்தன. காய்ந்த சுள்ளிகளைத் திரட்டிக் குவித்துத் தீ மூட்டினோம். அந்த ஆனந்தத்தில் நாங்கள் எல்லோரும்

அயர்ந்துவிட்டோம். நீண்டநேரம் எங்களால் தூங்க முடியவில்லை. கதிரவனின் உதயம் எங்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருந்தது. போலீசும் ராணுவமும்,எங்களைத் துரத்தி வந்து கொண்டிருக்கும் என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டது. நாங்கள் இனிமேல் ஓய்வெடுத்துக் கொள்ள முடியாது; தூங்கவும் முடியாது. ஓடிவந்த வேகத்தில் எங்களுடைய பாதங்கள் வீங்கிவிட்டன. பாதங்களின் பல இடங்களில் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டிருந்தன. பாதரக்ஷைகளை நாங்கள் அணிந்துகொண்டு வரவில்லை. இனி எப்படி நடப்பது? ஆனாலும் நடந்துதானே தீரவேண்டும்.தழைகளைப் பாதங்களில் வைத்து அதன் மீது துணியைக் கட்டிக் கொண்டு நடந்தோம். ஒரு இடத்தில் ஒரு சிறுத்தையின் கர்ஜனை எங்களை மேலே செல்ல முடியாமல் நிறுத்திவிட்டது. வேறு திசையில் அச் சிறுத்தை போயிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தபிறகே நாங்கள் தொடர்ந்து நடக்கலானோம். இயற்கை யழகுகள் நிறைந்த அக் கானகத்தில், அக்காலை நேரத்தில், கதிரவனின் பொன்னொளிக் கிரணங்கள் எங்கள்மீது வீசியபோது நாங்கள் எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவித்தோம். ஆனால், அந்த ஆனந்தமும் நீடிக்கவில்லை. வானவீதியில் சூரியன் மேலே போகப்போக வெய்யிலின் உக்கிரம் எங்களை எரிக்க ஆரம்பித்தது. நாங்கள் பூர்ண

மாகக் களைத்துப்போய்விட்டோம். எங்களால் மேலும் ஓரடிகூட நடக்கமுடியவில்லை. பசியோ எங்களை வாட்ட ஆரம்பித்துவிட்டது. ஒரு நூறு ரூபாய் நோட்டு மட்டுமே எங்களிட மிருந்தது. ஆனால் அந்த நிர்மானுஷ்யமான கானகத்தில் அந்த நோட்டிற்கு மதிப்பேது! உணவும் ஓய்வுமில்லாமல் எவ்வளவுதூரம்தான் நடக்கமுடியும்? கலகலவென்ற ஒலியுடன் ஓடிக்கொண்டிருந்த ஒரு ஓடையைக் கண்ட தும் எங்களுக்கு ஏற்பட்ட ஆனந்தத்தை என் னால் இப்பொழுதும் கூட வர்ணிக்க முடிய வில்லை. அந்த ஓடையில் நாங்கள் ஆசைதீர நீராடினோம். அருகிலுள்ள கிராமத்திலிருந்து ஏதாவது ஆகாரம் வாங்கிவர வேண்டுமென நினைத்தோம். நோட்டுக்குச் சில்லரை கிடைக் காவிட்டால் என்ன செய்வது? அயல் மனிதன் ஒருவன் அந்த கிராமத்தில் நோட்டுக்குச் சில்லரை கேட்டால் கிராம வாசிகள் அவன் மீது சந்தேகம் கொள்வது சகஜந்தானே! என்ற பயம் ஏற்பட்டது. ஸ்ரீ சுக்லாவின் சட்டைப்பைகளைத் தேடிப்பார்த்தபோது ஒரு நாலணா நாணயம் கிடைத்தது. அந்த வேளை யில் அந்த நாணயம் எங்களுக்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுத்தது! அந்த நாலணாவை எடுத்துக்கொண்டு ஸ்ரீ சுக்லா அருகிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து கொஞ்சம் மாவும், உப்பும் வாங்கிவந்தார். அதை நாங்கள்

சாப்பிட்டோம். ஏன்? 'சுவர்க்க' விருந்துண்டோம்!

"சாப்பிட்டபிறகு, எங்கள் யாத்திரையைத் தொடர்ந்து நடத்துவதற்கு எங்களால் முடியவில்லை. உடலெல்லாம் வலிக்க ஆரம்பித்து விட்டது, பாதரக்ஷையில்லாமல் எங்களால் ஒரு அடிகூட நடக்கமுடியவில்லை. அக் கானகத்தில் பாதரக்ஷைகள் எப்படிக் கிடைக்கும்? ஏற்கனவே எங்கள் பாதங்களில் கட்டியிருந்த துணிகள் உபயோகமற்றவையாய்விட்டன. மீண்டும் துணிகளைக் கிழித்துப் பாதங்களிலிருந்து கணுக்கால்கள் வரை கெட்டியாகச் சுற்றிக் கட்டிக்கொண்டு மேலும் நடக்க ஆரம்பித்தோம். கைகளில் தழைகளையுடைய பச்சை மரக்கிளைகளைக் குடைகளாகப் பிடித்துக் கொண்டு நாங்கள் அறுவர், பருமனும் ஒல்லியாயும் உயரமாயும், குட்டையாயும் ஒரு 'பட்டாளமாய்' சென்ற காட்சியை, நாகரீக மனிதர்கள் பார்த்திருந்தால், எங்களுக்கு மூளை கலங்கிவிட்டது என்றேசொல்லியிருப்பார்கள்!

"மாலை ஐந்து மணி இருக்கும். ஜெயப்பிரகாஷுக்கு பழைய வலிப்பு வியாதி வந்து விட்டது. எங்கள் இதயங்களும் வெடித்து விடும் போலிருந்தன. நாங்கள் அக் கானகத்தில் அழிந்து விடுவதா?

“இப்பொழுது நாங்கள் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை எங்களால் தெரிந்து கொள்ள முடிந்தது. எங்களின் பழைய நண்பரும் சகாவுமான டுபேஜீயின் கிராமம் அருகாமையிலிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டோம். அந்த கிராமத்தையும் எட்டிப் பார்க்க ஆறு மைல்களைக் கடக்க வேண்டுமே. என்ன கஷ்டம்! ஜெயப்பிரகாஷ் தன்னுடைய பலஹீனமான நிலையில் அந்த ஆறு மைல் களையும் எப்படிக் கடப்பார்? இந்த வேளையில் அவ்வழியே ஒரு கட்டை வண்டி வரக் கண்டோம். அவ்வண்டிக்காரனை அணுகி எங்களை அந்த டுபேஜீயின் கிராமத்துக்கு ஏற்றிச் செல்லுமாறு கெஞ்சினோம். மூன்று ரூபாய்கள் கொடுக்க வேண்டுமென அவன் கேட்டான். அக் கிராமத்தை யடைந்ததும் இன்னும் அதிகமாகவும் கொடுப்பதாக நாங்கள் வாக்களித்தோம். ஆனால் அந்த கண் டிப்பான வண்டிக்காரன் உடனடியாகப் பணத்தைக் கொடுக்குமாறு வற்புறுத்தினான். எங்களிடமோ சில்லரை இல்லை. என்னிட மிருந்த கைக்கடியாரத்தைக் கழற்றி அவனிடம் நீட்டி அதை ஜாமீனாக வைத்துக் கொள்ளும் படி மன்றாடினோம். இரக்கத்திற்குப் பதிலாக அவனுக்கு எங்கள் மீது சந்தேகமே ஏற் பட்டது. எங்கள் வேண்டுகோளுக் கிணங் காமல் அவன் தன் வழியே வண்டியை ஓட்டிக் கொண்டு மறைந்து விட்டான்.

"மனமுடைந்தவர்களாய் அன்றிரவையும் அக் கானகத்திலேயே நடுக்கும் குளிரிலும் கழிப்பதென முடிவு செய்தோம். உலர்ந்த சுள்ளிகளைப் பொறுக்கிக் குவித்துத் தீ மூட்டிக் குளிர் காய்ந்தோம். ஆகாரமோ இல்லை. பசியும் வலியும் களைப்பும் எங்களை அயர்ந்த நித்திரைக்கு வற்புறுத்தின. ஆனாலும், எங்களால் தூங்க முடியாத நிலை ஏற்பட்டது. ஜெயப்பிரகாஷுக்கு மீண்டும் அந்த வலிப்பு வியாதி வந்து விட்டது. அவருக்கு எந்த உதவியையும் எங்களால் செய்ய முடியவில்லை. கவலையுடன் அவர் படும் கஷ்டங்களைப் பார்த்துக் கொண்டே அந்தப் பயங்கரமான இரவைக் கழித்தோம்.

"மூன்றாவது நாள் உதயமாயிற்று. ஆனால் ஜெயப்பிரகாஷ் மட்டும் எவ்வித வைத்திய உதவியுமின்றி எங்கள் மத்தியில் தரையில் கிடந்தார். அதே இடத்தில் நாங்கள் நீடித்து இருந்தால், ஒன்று செத்துப் போவோம்; அல்லது போலீசார் வசம் அகப்பட்டு விடுவோம் என்ற பீதி எங்களை வாட்ட ஆரம்பித்தது. எப்படியாவது டுபேஜீயின் கிராமத்திற்குப் போய்விட வேண்டுமென நாங்கள் துடித்தோம். ஜெயப்பிரகாஷை இரண்டு பேர்கள் தூக்கிச் சுமக்கலானோம். வழியில் பல கிராமங்களைக் கடக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு

கிராம எல்லையிலும் ஜெயப்பிரகாஷை சுமப்பதை நிறுத்தி விடுவோம். கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொண்டு மீண்டும் அவரைச் சுமந்து கொண்டு நடப்போம். ஆனால் டுபேஜீயின் கிராமம் மட்டும் இன்னும் தென்படவில்லை. நாங்களும் களைத்து விட்டோம். நானும் ஜெயப்பிரகாஷும் ஒரு ஓடைக் கரையில் களைத்துப் படுத்துக் கொண்டோம். மற்ற தோழர்கள் டுபேஜீயின் கிராமத்தைத் தேடிச் சென்றார்கள். ஒரு மணி நேரம் கழித்து அவர்கள் ஆகாரத்துடனும், கம்பளிகளுடனும் திரும்பி வந்தனர். இரவு ஒன்பது மணிக்கு ஒரு வண்டி வரும் என்று அவர்கள் சொன்னார்கள். எல்லோரும் இந்த யாத்திரையின் போது இப்பொழுது தான் பசியாறச் சாப்பிட்டோம்.

"இரவு ஒன்பது மணிக்கு அந்தச் சிறிய வண்டியும் வந்தது. நானும் ஜெயப்பிரகாஷுமே அதில் ஏறிக்கொள்ள இடமிருந்தது. வண்டி மெதுவாக நகர்ந்தது. மற்றவர்கள் வண்டியைத் தொடர்ந்து நடந்து வந்தார்கள். இரவு பனிரெண்டு மணிக்கு கயா ஜில்லாவின் எல்லையையடைந்தோம். இங்கே ஒரு சிறிய போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. இந்த எல்லையைக் கடக்கும் பொழுது எங்கள் இதயங்கள் படபட வென்று அடித்துக் கொண்

டன. இந்த இடத்தில் நாங்கள் வண்டியை விட்டு இறங்கினோம். அந்த வண்டியும் எங்களை இறக்கி விட்ட பிறகு போய் விட்டது.

"பழையபடி, நாங்கள் சுள்ளிகளைப் பொறுக்கித் தீ மூட்டினோம். அதைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு கொஞ்ச நேரம் ஓய் வெடுத்துக் கொண்டோம். மன நிம்மதியும் ஏற்பட்டது. கவலையில்லா நித்திரையில் ஆழ்ந்து விட்டோம். இம்மாதிரியான நித்திரையைத் தான் பலர் விரும்புகிறார்கள்; ஆனால் சிலரே அதை அனுபவிக்கிறார்கள்! சுதந்திர மனிதர் களாக இருக்கிறோம் என்ற உணர்ச்சியில், ஒரு லட்சியத்தை நிறைவேற்றுவதற்காகத் துணிந்து விட்டோம் என்ற ஆனந்தத்தில், நாங் கள் மெய்மறந்திருந்தோம்.''

கயா ஜில்லாவை அடைந்தவுடன் ஜெயப் பிரகாஷும் அவருடைய சகாக்களும் திசைக் கொருவராகப் பிரிந்து சென்றனர்.

ஜெயப்பிரகாஷும், இன்னொருவரும் காசியை அடைந்தனர்.

சிறையிலிருந்து இவர்கள் தப்பிச்சென்று விட்டனர் என்பது தெரிந்தவுடன் அதிகாரி கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல! இவர் களைப் பிடித்துவிட எவ்வளவோ முயன்று பார்த்தனர். ஆனால், இந்தப் புரட்சி வீரர்கள்

இவர்களுடைய (அதிகாரிகளுடைய) பிடிப்பில் அகப்படாது சென்று விட்டார்கள்!

காசிக்கு வந்த பின்னர், ஜெயப்பிரகாஷ் தன் வேலையை ரகசியமாகச் செய்யத் தொடங்கினர். இக்காலத்தில், பல மாறுவேடங்களில் இவர் தனது சகாக்களுடனும், பொதுஜனங்களுடனும் தொடர்புவைத்துக்கொண்டு, தணிந்து கொண்டிருந்த புரட்சிக்குப் புது வேகம் கொடுத்து, புரட்சியின் தலைமையை ஏற்றுக் கொண்டார். **ஸ்ரீமதி அருணா, டாக்டர். ராம் மனோஹர் லோஹியா,** அச்சுத பட்டவர்த்தன் முதலிய சோஷலிஸ்டு தலைவர்களுக்கும், சிதறிக் கிடந்த ஆயிரக் கணக்கான புரட்சி வீரர்களுக்கும் இவருடைய தலைமை உத்சாகத்தைக் கொடுத்தது. கட்டுப்பாடான முறையில் புரட்சி புதிய முறையில் ஆரம்பமாயிற்று. எவ்வளவு தூரம் வேலை செய்தும், ஆகஸ்டு புரட்சி மக்களுக்கு அதிகாரத்தை மாற்றும் வகையில் சரியான வெற்றி பெருமல் ஸ்தம்பித்து விட்டது.

1907ம் வருடத்தில் ருஷ்யாவில் சுத்த வீரர் லெனின் தலைமையில் நடந்த முதல் புரட்சி ஸ்தம்பித்துப் போனது போல, 1942-ம் ஆண்டில் இந்தியாவில் நடந்த புரட்சியும் ஸ்தம்பித்துப் போயிற்று.

இந்த ஆகஸ்டு புரட்சி ஸ்தம்பித்துப் போனதற்குக் காரணங்களை ஜெயப்பிரகாஷ் எப்படிச்

சுருக்கமாக விளக்குகிறார் என்பதைப் பின் வரும் அத்தியாய மொன்றில் வாசகர்கள் படிப்பார்கள்.

1943-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் தேதி, ஜெயப்பிரகாஷ் மீண்டும் பஞ்சாப் மாகாணத்தில் கைது செய்யப்பட்டார்.

மறைவாயிருந்த காலத்தில் ஜெயப்பிரகாஷ் இருமுறை **கல்கத்தா, நேபாளம்** முதலிய இடங்களில் துணிகரமாகத் தப்பி யிருக்கிறார்.

நேபாளத்திலிருந்து இவர் தப்பிய விதம் மிகவும் துணிகரமானது.

எவ்வளவு மறைவாக இருந்தாலும் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து கொண்டு காரியங்களைச் செய்வது கடினமானது என்று கருதி ஜெயப்பிரகாஷ் தன்னுடைய சில நண்பர்களுடன் நேபாளத்துக்குப் போனார். அங்கே கொரில்லாப் படை யொன்றைத் திரட்டினார். '**சுதந்திர சேனை**' என்ற ஒரு மத்திய ஸ்தாபனத்தை நிறுவினார். ஸ்தாபனம் வர வர வளர்ச்சி யடைந்து வந்தது. நூற்றுக் கணக்கானவர்கள் பீஹாரிலிருந்து நேபாளம் வந்து இப்படையில் சேர்ந்து கொண்டார்கள். நேபாள சர்க்கார் இதை யறிந்தும், இதில் தலையிட விரும்பவில்லை. பிரிட்டிஷ் சர்க்காரின் உளவாளிகள் இதை எப்படியோ அறிந்து

கொண்டனர். அந்தச் சேனையைக் கைது செய்யும்படி பிரிட்டிஷ் சர்க்கார் நேபாள சர்க்காரை வற்புறுத்தினார்கள். ஜெயப்பிரகாஷும் அவருடைய சகாக்களும் நேபாள போலீசாரால் கைது செய்யப்பட்டார்கள். பிரிட்டிஷ் சிறைக்கு ஜெயப்பிரகாஷும் அவரது சகாக்களும் அழைத்துச் செல்லப்பட விருந்தார்கள். இவர்களை யெல்லாம் ஹனுமான் புருக் என்ற இடத்திற்கு அழைத்துச் செல்லப்படும் போது வழியில், ஒரு பையன், ஜெயப்பிரகாஷைக் கண்டான். "பாபு, நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியாதா?" என்று அழுத கண்ணுடன் அப்பையன் ஜெயப்பிரகாஷைக் கேட்டான். ஜெயப்பிரகாஷ் அவனுக்குப் பின்வருமாறு பதிலளித்தார்:- "பையா, நீ உடனே நமது தலைமைக் காரியாலயத்திலுள்ள தளகர்த்தர் ஸ்ரீ சூர்ஜ்ய நாராயணரிடம் செல். எங்களை, பிரிட்டிஷ் போலீசாரிடம் ஒப்படைக்கப் போகிறார்கள்; அப்பொழுது ஒரு கொரில்லா படையைக் கொண்டு போலீஸைத் தாக்கும்படி நான் சொன்னதாக அவரிடம் சொல். நான் அப்போது தப்பலாம்."

அந்தப் பையன் எழுபது மைல்கள் தூரத்திலுள்ள தலைமைக் காரியாலயத்திற்கு இத் தகவலைக் கொடுத்தான். ஒரு கொரில்லாப் படையும் வந்து சேர்ந்தது. வரும்போதே

தந்திக் கம்பங்களை யெல்லாம், இப்படை பிடுங்கி எறிந்து கொண்டே வந்தது. போலீஸ் பாது காப்பில் ஜெயப்பிரகாஷும் அவருடைய சகாக்களும் வைக்கப்பட்டிருந்த முகாமை இந்தப்படை வளைத்துக் கொண்டது. காவல் புரிந்த போலீசார் மீது இந்தப் படை துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தது. பலத்த போர் நடந்தது. ஒரு போலீஸ் அதிகாரி கொல்லப்பட்டார். ஜெயப்பிரகாஷும் அவரு டைய சகாக்களும் விடுதலை செய்யப்பட் டார்கள். ஜெயப்பிரகாஷும் அங்கிருந்து கல்கத்தா சென்றார். கல்கத்தாவிலும் இவர் பிடிபடவிருந்தார். ஆனால் இங்கேயும் சாதுர்ய மாகத் தப்பிவிட்டார். இங்கிருந்து **காஷ்மீரம்** போவதற்காக **பஞ்சாப்** மாகாணத்திற்குச் சென்றார். இந்த மாகாணத்தில் தான் இவர் பிடிக்கப் பட்டார். இந்திய தேசீயத்தின் விரோ திகளின் உதவியால் தான் போலீசார் இவரைப் பிடித்தார்கள். இவரை 'ஐந்தாம் படை' என்று முழங்கிக் கொண்டிருந்த ஒரு கூட்டத்தினரின் உதவியைக் கொண்டுதான் **வில்லியம்ஸ்** என்ற ஒரு ஐரோப்பிய போலீஸ் அதிகாரி ஜெயப்பிரகாஷைப்பிடிக்க முடிந்தது என்று சொல்லப்படுகிறது.

**லாகூருக்கும்** **அமிர்த சரஸுக்கு** மிடையே எல்லைப்புற மெயிலில் பிரயாணம் செய்து

கொண்டிருந்த போது ஜெயப்பிரகாஷ் பிடிக்கப் பட்டார். 'ஏதோ' ஒரு இடத்தி லிருந்து பஞ்சாபிலுள்ள மலைப்பிரதேசத் துக்குச் செல்ல, அவர் டில்லி வழியாக பிரயாணம் செய்து கொண்டிருந்தார். தங்கள் பிரதேசத்தின் வழியாக ஜெயப்பிரகாஷ் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார் என் பதைப் பஞ்சாப் ரகசியப் போலீசார், சோஷ லிஸ்டுகளின் விரோதிகள் மூலமாகவே தெரிந்து கொண்டிருக்க வேண்டும்!

அமிர்தசரஸ் வரை ஜெயப்பிரகாஷ் தொல்லை யொன்றுமில்லாமல் பிரயாணம் செய்தார். அமிர்தசரஸ் ரயில்வே ஸ்டேஷனில் அவர் டீ அருந்தினர். வண்டி புறப்படும் சமயத்தில் அவசர அவசரமாக ஒரு ஐரோப்பி யனும், இரண்டு சீக்கியர்களும் ஜெயப்பிரகாஷ் ஏறியிருந்த அதே வண்டியில் ஏறிக்கொண் டனர். அவர்கள் சாதாரண உடைகளையே அணிந்திருந்தனர். அதனால் ஜெயப்பிரகாஷ் அவர்களைச் சந்தேகிக்கவில்லை. தான் கைது செய்யப்படப் போவதாக அவர் துளிகூட நினைக்கவில்லை. அமிர்தசரஸுக்கும் லாகூ ருக்கு மிடையே வண்டி வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

கண்களை மூடிய வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்த ஜெயப்பிரகாஷை, அந்த ஐரோப்

பியன், திடீரெனத் தாவிக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். தன் கைத்துப்பாக்கியை அவருக்கு முன் நேராக இன்னொரு கையால் பிடித்துக் கொண்டான். மற்ற இரண்டு சீக்கியர்களும் அவரை வளைத்துப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களும் கைத்துப்பாக்கிகளைத் தயாராக வைத்திருந்தனர். இவ்வாறு ஜெயப்பிரகாஷைப் போலீசார் பிடித்தார்கள்.

லாகூருக்கு முன்னதாக உள்ள **முகல்பூரா** ஸ்டேஷனில் அவர் இறக்கப்பட்டு லாகூர் கோட்டை சிறைக்கு அழைத்துச் செல்லப் பட்டார். முகலாய சாம்ராஜ்யத்தை எதிர்த்தவர்களை அடைத்துச் சித்ரவதை செய்வதற்காகக் கட்டப்பட்ட கோட்டைச் சிறையில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்த ஜெயப் பிரகாஷையும் அதிகார வர்க்கம் தள்ளி அடைத்தது!

அச்சிறையில் ஜெயப்பிரகாஷும் பல கொடுமைகளுக்கு ஆளானர் என்ற செய்தியை நாம் கேள்விப்பட்டோம்.

1943ல் மத்திய சட்டசபைக் கூட்டத்தில் இது சம்பந்தமாக **சர்தார் சாந்தசிங்** பல திடுக்கிடும்படியான தகவல்களைப் பகிரங்கமாக வெளியிட்டார். சர்க்கார் இதற்கெல்லாம் பதிலே கூறவில்லை!

எதற்கும் கலங்காத ஜெயப்பிரகாஷ் இதைப்பற்றி இப்போது என்ன சொல்லுவார்? ஒரு புன்சிரிப்புடன் மௌனம் சாதித்து விடுவார்!

ஒரே ஒருமுறை, ராஜீய காரணங்களுக்காக சிறையில் ஒரு சில மாதம், உயர்ந்த வகுப்புக் கைதியாக இருந்துவிட்டு, வெளியே வந்தவுடன் பதவி வேட்டையாடும் நபர்களுக்கும், உயிரையே பணயம் வைத்து உன்னத லட்சியங்களுக்குத் துணியும் கர்ம வீரனை ஜெயப்பிரகாஷுக்கும் வித்தியாசம் இது தான்.

## ஏகாதிபத்தியம் - பாஸிஸத்தின் பரமவிரோதி

முதலாளித்துவம் வளர்ச்சி அடைய அடையத்தான் ஏகாதிபத்திய நிலையும், பாஸிஸ நிலையும் ஏற்படுகின்றன.

முதலாளித்துவம் விரிந்து வியாபிக்கும் நிலையில், அதற்கு மூலப்பொருள்களும், அந்த மூலப்பொருள்களைக்கொண்டு, தான் உற்பத்தி செய்யும் சாமான்களை விற்க சந்தைகளும் தேவையாயிருக்கின்றன. அச்சந்தைகளைப் பிடிக்கவே, அது தன்னை விஸ்தரித்துக் கொள்ளுகிறது. அவ்வித விஸ்தரிப்பு முறையே ஏகாதிபத்திய முறையாகும். தன்னை விஸ்தரித்துக் கொள்ளும்போது முதலாளித்துவம் பலாத்காரத்தைக் கொண்டு, பலநாடுகளை அடிமைப்படுத்தும் ஆதிக்கமாக மாறி விடுகின்றது.

இந்த ஆதிக்கமுறை -- ஏகாதிபத்திய முறையைக் காப்பாற்றவே, படை பலம், ஆயுத பலம் எல்லாம் விஸ்தரிக்கப்படுகின்றன. தன்னுடைய சுரண்டலை நீடித்து நடத்த இந்த பலத்தை அத்யாவசியமான சாதனமாகவே

இந்தமுறை வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த ஏகாதிபத்தியமுறை வியாபிக்க வியாபிக்க பல ஏகாதிபத்தியங்கள் தோன்றி விடுகின்றன. இவைகளிடையே உலக ஆதிக்கப் போட்டி ஏற்படுகின்றது. அதன் பயனாய் யுத்தங்கள் மூளுகின்றன. அவ்வித யுத்தங்களில், தோற்றுவிடும் ஒரு ஏகாதிபத்தியம் மீண்டும் மூர்க்கத் தனமாக எழுகின்ற நிலைக்குத்தான் பாஸிஸம் என்றுபெயர். ஆவேசத்துடன் எழும் இந்த முரட்டு முதலாளித்துவம், எல்லா முதலாளித்துவ நாடுகளையும், சாம்ராஜ்யங்களையும் விழுங்கி விட்டுத் தானே உலகில் சர்வாதிகாரம் செலுத்த நினைக்கின்றது.

தன் வளர்ச்சியைத் தேக்கும் எல்லா சக்திகளையும் இது கொடூரமாக நசுக்குகிறது. ராணுவ வெறிகொண்ட ரத்தக் கரங்களுடன் உலக ஆதிக்கத்தைப்பெற இது முன்னேறுகிறது.

ஒரு புழு, பல புழுக்களைத் தின்று கொழுத்து இமயம் போன்று மிகப் பெரிதாய்க் காட்சியளிப்பது போல, பாஸிஸம் எல்லாநாடுகளையும் ஆக்கிரமித்து, சக்திகொண்ட ஒரு மாபெரும் அபாயமாக, மனித சமுதாயத்தையே பயமுறுத்துகிறது.

மனித சமுதாயத்தில் இந்தமுறைகளினால் அமைதியிருப்பதில்லை; சுகமிருப்பதில்லை. ராணுவ வெறியர்களின் எக்களிப்புகளும், உயிரை வாங்கும் கோர யுத்த விளையாட்டுக்களுமே இருக்கின்றன. பெரும்பாலோர் உணவின்றியும், உடையின்றியும், நோயினாலும், துன்பத்தாலும் வாடி வதங்குகின்றனர். ஒரு சிலர் உழைப்பின்றியே செல்வம் குவிக்கின்றனர். வாழ்க்கையின் வசதிகளை இச்சிலரே அனுபவிக்கின்றனர். இந்தமுறைகளின் இரும்புப் பிடிப்பில் அகப்பட்ட மனித சமுதாயம் இந்நிலையில் தானிருக்கும்!

இந்தமுறைகளை - தீய சக்திகளை ஒழித்தே தீரவேண்டுமென்ற ஆத்திரம் கொண்டவர் - விரதம் கொண்டவர் ஜெயப்பிரகாஷ்.

பனிரெண்டு வருடங்களாக, காங்கிரஸ் மகாசபையின் அந்நியநாட்டுக் கொள்கையை இத் தீய சக்திகளை எதிர்க்கும் ரீதியில் உருவகமாக்கியதில் ஜெயப்பிரகாஷுக்கு அதிகமான பங்குண்டு; பெருமையுமுண்டு.

உலக உணர்ச்சியின்றி, 'தனித்து நிற்க வேண்டும்' என்று நினைப்பது ஆரோக்கியமான தேசீய உணர்ச்சியாகாது. இதைத் தேசீயவெறி உணர்ச்சியென்றே அழைக்க வேண்டும். தேசீயக் கண்ணோட்டத்தில், சர்வ

தேசீய நிகழ்ச்சிகளைக் கவனித்து, ஜாக்கிரதை யாக, தனது கொள்கைகளை உருவகப்படுத்திக் கொள்ளாமல், சர்வதேசீயக் கண்ணோட்டத் துடன் என, பிறநாட்டுக் கொள்கைகளை அப்படியே பின்பற்றுவது அல்லது ஒரு நாட்டின் 'ஏஜண்டு'களாகக் கண்மூடித்தன மாக நடந்து கொள்வது என்பது ஆரோக்கிய மான சர்வ தேசீய உணர்ச்சியாகாது. இதை, சர்வ தேசீய வெறி உணர்ச்சி யென்றே அழைக்கவேண்டும். இவ்விரண்டு உணர்ச்சி களின் எல்லைக்கோடுதான் சர்வாதிகாரமாகும். இந்த அபாயத்தை ஜெயப்பிரகாஷ் நன்கு உணர்ந்திருக்கிறார். அமெரிக்காவில் மார்க்ஸீய தத்துவத்தை என்று இவர் ஏற்றுக் கொண் டாரோ அன்றிலிருந்து இன்று வரை முதலா ளித்துவம், ஏகாதிபத்தியம், பாஸிஸம், சர்வாதி காரம் போன்ற பல பெயர்களில் அழைக்கப் படும் பொதுவான சுரண்டும் ஆதிக்க அபாயத்தை எதிர்த்து வருகிறார்.

இதே அபாயத்தைத் தீவிரமாக எதிர்த்து வரும் பண்டித நேருவிடம் இவருக்கு அபரிமித மான அன்பும், மரியாதையும் ஏற்பட்டதற்கும் இந்த லட்சிய ஒற்றுமைதான் காரணம்.

உலக நிகழ்ச்சிகளிலிருந்து இந்தியா தனித்து நிற்க முடியாது; அது தன்னுடைய தேசீய நலன்களையும் மறந்து விடவும்

முடியாது; உலகப் போக்கு அலைகள் இந்தியா வின் கரைகளைத் தொடுகின்றன; அதுபோல நமது தேசீய ஆதர்சமும் உலகத்தைத் தொட வேண்டும். இந்த இரண்டு உணர்ச்சிகளையும் இணைத்து, இந்தியாவின் பெருமையைப் பெரு மிதத்துடன் உயர்த்தி வருவதில் பண்டித நேரு வுக்கு எவ்வளவு பொறுப்பும் பங்குமுண்டோ அவ்வளவும் ஜெயப்பிரகாஷுக்கும் உண்டு.

சிறையிலிருந்த காலத்திலும் சரி; வெளியே வந்தவுடனும் சரி; காங்கிரஸின் முற் போக்கு உணர்ச்சி தளர்ந்துவிடாது பார்த்துக் கொள்வதில் ஜெயப்பிரகாஷுக்கு அதிக உழைப்புண்டு.

**பெய்ஸ்பூர் ஹரிபுரா, திரிபுரி** முதலிய இடங் களில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டங் களில், யுத்தம், பாஸிஸம், ஏகாதிபத்தியம், ஆக்கிரமிப்பு முதலியவைகளை எதிர்த்துப் பல முற்போக்கான தீர்மானங்கள் நிறைவேறி யதற்கு, பண்டித நேருவும், ஜெயப்பிரகா ஷுமே பெரிதும் காரணம்.

1946ம் ஆண்டு ஏப்ரல்மாதம் இவர், சிறை யிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

தப்பியோடி மறைவாகவிருந்த காலத்தில் புரட்சியைப் பலப்படுத்த இவர் வேலை செய்தார். மீண்டும் அகப்பட்டுக் கொண்டு

சிறைக்குள்ளே அடைபட்டுக் கிடந்தபோதும், புரட்சி நின்று விட்டதால் இளைஞர்களிடையே ஏற்பட்ட சோர்வைப் போக்கி, சந்தர்ப்பம் வரும் போது, புதிய நடவடிக்கையில் இறங்கத் திட்டம் வகுத்தார். அவ்விதத் திட்டத்துடனும், கலங்காத நெஞ்சத்துடனும், இன்று இவர், நம் மிடையே இருக்கிறார்.

1943 ல் இவர் சிறையில் மீண்டும் அடைக் கப் படுவதற்கு முன்னரே, நாட்டில் சோர்வு தலைகாட்ட ஆரம்பித்து விட்டது.

ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறையால் ஏற்பட்ட விளைவுதான் இந்தச் சோர்வு என்று நாம் நினைத்து விடக்கூடாது.

யுத்த நிலைமையால் ஏற்பட்ட பொருளா தார நெருக்கடி - பிரிட்டிஷாரின் வெற்றியை நிச்சயப்படுத்திய நிலைமை, சர்க்காருடன் சமா தானம் செய்து கொள்ள வேண்டும் என்ற பிரசாரம் - இவைதான் இந்தச் சோர்வுக்கு முக்கியமான காரணங்கள். இந்த உணர்ச்சி யைப்போக்க மறைவாயிருந்த சோஷலிஸ்டுகள் எவ்வளவோ காரியங்களைச் செய்தனர். ஆனால், பலனில்லை

யுத்தமும் நின்றது. தலைவர்களும் விடுதலை செய்யப் பட்டார்கள். எல்லா காங்கிரஸ் வாதி




Photo:- Sri. Udit Gopal, Bombay.

A. 3293.

1946 ல்
பம்பாய் ஸர். கவாஸ்ஜீ ஜஹாங்கீர் ஹாலில் நடைபெற்ற
அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண்
சோஷலிஸ்டுகளின் கட்சியை வாதிக்கிருர்.

களையும் சர்க்கார் கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை செய்ய ஆரம்பித்தனர்.

வெளியே வந்த காந்திஜீ, மீண்டும் வகுப்பு ஒற்றுமைக்காக பிரயாசை எடுத்துக் கொண்டார்.

"தேசிய சர்க்கார் வேண்டும்" என்று கோஷமிட்டவர்களின் வார்த்தை ஜாலங்களை நம்பி, பாகிஸ்தான் அடிப்படையில் ஜின்னாவுடன் பேரம் பேசக்கூட காந்திஜீ துணிந்து விட்டார்! 'ஒத்துழைப்பு'ப் பாதையில் காங்கிரஸைத் திருப்ப முஸ்தீப்புகள் ஆரம்பமாய் விட்டன. சர்க்காரும் தங்களுடைய கொள்கையை மாற்றிக்கொள்ள ஆரம்பித்தது. தாராள மனப்பான்மையால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தப் பாதையில் இறங்கவில்லை!

சர்வதேசீய விவகாரங்களில் மாட்டிக்கொண்டிருக்கும் தங்களைப் பலப்படுத்திக்கொண்டு முன்னேறவும், இந்தியாவில் தங்களால் சிருஷ்டிக்கப்பட்டப் பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்ளவுமே பிரிட்டன் இந்தப் புதிய கொள்கையைப் பின்பற்றியது. ருஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளில் தங்களுடைய செல்வாக்கை விஸ்தரிப்பது: இந்திய தேசீயத்துக்கு எதிராக வேறு புதிய சக்திகளைத் திரட்டுவது: இவைகளுக்

காக பிரிட்டனுக்கு அவகாசம் வேண்டியிருந்தது. அதைப்பெறவே பிரிட்டன் புதிய கொள்கையை இங்கே அனுஷ்டிக்க ஆரம்பித்தது.

தலைவர்கள் வெளியே வந்த பிறகு நடந்த **சிம்லா** நாடகமும், பிறகு '**மும்மூர்த்தி**' மந்திரிகள் வந்ததும், அவர்கள் நடத்திய நாடகமும், பிரிட்டிஷாரின் இடைக்கால, நீண்டகால திட்ட அறிக்கைகளும், இதில், ஒன்றை ஏற்றுக்கொண்டு மற்றதை ஏற்றுக்கொள்ள முதலில் மறுத்து, பிறகு இரண்டையுமே ஏற்றுக்கொண்ட காங்கிரஸின் முடிவும், இதை உடைக்க பிரிட்டன் - லீக் - சமஸ்தானங்கள் - இம்மூன்றும் செய்த சதிகளும், பிறகு இடைக்கால சர்க்கார் பண்டித நேருவின் தலைமையில் ஏற்பட்டதும், இதன் செல்வாக்கை உடைக்க வைஸ்ராய், முஸ்லீம் லீகுடன் சதிசெய்து கொண்டு, முதலில் இந்த சர்க்காரில் சேர மறுத்த லீகை இந்த இடைக்கால சர்க்காருக்குள் இப்போது நுழைத்திருப்பதையும், நாம் அறிவோம்.

காங்கிரஸ் தலைமையில் உள்ள பிற்போக்காளர்களின் செல்வாக்கு இன்று ஓங்கி யிருக்கிறது என்று சொல்ல காரணமுண்டு.

அடிப்படையான காரணத்தைத் தேடாது மேலெழுந்த வாரியாக பிரிவினைவாதிகளுடன்

பேரம் பேசுவதையும், அதிகாரமில்லாத நிலையை ஆட்சி புரிய மேற்கொள்ளுவதையும் நாம் காங்கிரஸ் தலைமையில் இன்று காண்கிறோம். பொதுமக்களின் புரட்சி வேகத்தைக் கண்டு இவர்களுக்கு பயம் ஏற்பட்டிருக்கிறது போலும்!

இன்றைய காங்கிரஸின் போக்கை, இந்தப் போக்கின் விளைவால் காங்கிரஸ் பின்பற்றும் இன்றையக் கொள்கையை ஜெயப்பிரகாஷும் அவரது சகாக்களும் ஒப்புக் கொள்ளவில்லை.

அமெரிக்கா உலக ஆதிக்கத்தைப் பெற மறைவாக ராணுவ வெறியர்களை (ஜப்பானில் மக் ஆர்தர் தலைமையில்) வளர்ப்பதையும், அணுகுண்டு உற்பத்தியைப் பெருக்குவதையும் நாம் பார்க்கிறோம்.

அமுக்கப்பட்ட நாஜி தத்துவத்துக்கு மீண்டும் உயிர் கொடுத்து, வளர்த்து அதைத் தன்னுடைய உலக ஆதிக்கப் போராட்டத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள பிரிட்டன் முனைந்திருக்கிறது என்பதில் இன்னுமா உங்களுக்குச் சந்தேகம்! வேண்டாம்.

ருஷ்யாவோ ஆள் பலத்தையும் சேகரிக்கிறது; ஆயுத விஸ்தரிப்பிலும் துரிதமாக

முன்னேறுகிறது. '**காஸ்மிக்**'கிரணம் எப்படி எதிரிகளை நிர்மூலமாக்கப் பயன்படும் என்பதில் சோவியத் விஞ்ஞானிகள் முழு மூச்சுடன் ஈடு பட்டிருக்கிறார்கள். மேலும், ருஷ்யா தன்னுடைய 'ஏவலாட்க'ளான கம்யூனிஸ்டுகளைக் கொண்டு பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும், இன்னும் பல நாடுகளிலும் குழப்பம் விளைவிப்பதையும் நாம் பார்க்கிறோம்.

இந்த யுத்த முடிவில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனமோ வெறும் 'வாதம் புரியும்' மன்றமாகவும், ஆதிக்க வல்லரசுகளின் 'பொம்மை'யாகவும் இருப்பதையே நாம் பார்க்கிறோம். உலக சமுதாயமே அடிப்படையான மாறுதலுக்குட் பட்டாலொழிய இம்மாதிரியான ஸ்தாபனம் சக்தியற்ற நிலையில் தானிருக்க முடியும். உலக மக்கள் பலமில்லாத இந்த ஸ்தாபனத்தை **ஸ்மட்ஸ்** போன்ற ஏகாதிபத்ய நிறத்திமிருள்ள வெறியர்கள் நையாண்டி செய்வதற்குக் கேட்கவும் வேண்டுமா!

இவ்விதக் குமுறலும், போட்டியும் சீக்கிரமே வெடித்தேயாகவேண்டும்: நீடிக்காது. அந்த நிலைமை ஏற்படும்போது, நாம் எந்த முறையில் நமது சுதந்திரத்தைப் பெற வேண்டும்? ஏகாதிபத்தியம், பாஸிஸம் போன்ற எல்லா ஆதிக்க சக்திகளையும்

முறியடிக்க உலக முற்போக்கு சக்திகளுடன் நாம் எப்படிச் சேரவேண்டும்? என்பதைப் பற்றி இப்போது முதற்கொண்டே நாம் சிந்திக்கத் தொடங்க வேண்டும். அதற்கான ஆயத்தங்களையும் தொடங்க வேண்டும். இதையே ஜெயப்பிரகாஷ் வற்புறுத்த ஆரம்பித்து விட்டார். காங்கிரஸை, இந்தப்பாதைக்குத் திருப்ப வேண்டும்: நமது அணிவகுப்பில் பிளவுக்கும், தோல்வி யுணர்ச்சிக்கும் இடம் கொடுக்காமலிருக்க வேண்டும். இதுவே ஜெயப்பிரகாஷின் இன்றைய சிந்தனையும் இடைவிடாத வேலையுமாக இருக்கின்றன.

3293

## சில குறிப்புகள்

ஜெயப்பிரகாஷின் அரசியல் வாழ்க்கையைப்பற்றித் தெரிந்துகொள்ள முடிவதுபோல, இவருடைய சொந்தக் குடும்ப வாழ்க்கையைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இவரைப் பற்றி விரிவான சரித்திரம் இதுவரை வெளிவரக் காணும். தோழர் யூஸுஃப் மேஹரலி தன்னுடைய 'இந்தியத் தலைவர்கள்' என்ற ஆங்கிலப் புத்தகத்தில் ஜெயப்பிரகாஷைப் பற்றியும் சுருக்கமாகவே எழுதியிருக்கிறார். இந்தச் சுருக்கத்திலும் ஜெயப்பிரகாஷினுடைய குடும்பத்தைப் பற்றியே சொல்லப்படவில்லை. ஜெயப்பிரகாஷுடைய ஆப்த நண்பரான ஸ்ரீ பெனி பூரி என்பவர், ஹிந்தியில் ஜெயப்பிரகாஷினுடைய விரிவான சரித்திரத்தை எழுதியிருக்கிறார். அது அச்சிலிருக்கிறது. ஜெயப்பிரகாஷின் தாய், தந்தை, சகோதர சகோதரி - முதலியோரைப்பற்றி தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும் இவருடைய மனைவி, மனைவியின் தந்தை முதலியவர்களைப் பற்றி நன்றாக நாம் தெரிந்துகொள்ள முடிகின்றது.

பீஹாரின் '**அரசியல் பிதா**' என்று அழைக்கப்பட்டவரும், சம்பரான் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தியவரும், சாந்தமூர்த்தி **ஸ்ரீ ராஜேந்திர பிரஸாதை** தேசத்துக்காக உருவாக்கியவருமான **ஸ்ரீ பிரிஜ் கிஷோர் பாபுவின்** மருமகனே ஜெயப்பிரகாஷ். ஸ்ரீ பிரிஜ் கிஷோர் பாபு ஜெயப்பிரகாஷைத் தனது மருமகனைகத் தேடிக்கொண்டதற்கு, ஜெயப்பிரகாஷினிடத்தில் அவர் கண்ட மேதையும், தேசபக்தியுமே சிறந்த காரணங்கள்.

"பீஹாரின் வானத்தில் என்றென்றும் பிரகாசிக்கும் நக்ஷத்திரமாக விளங்குகிறார்" என்று சமீபத்தில் மரணமடைந்த ஸ்ரீ பிரிஜ் கிஷோர் பாபுவைப் பற்றி காந்திஜீ குறிப்பிட்டார். இத்தகைய உத்தமத் தலைவரின் மருமகனை ஜெயப்பிரகாஷ் இந்தியாவுக்கே தலைவராகத் திகழ்வது மூலம் ஸ்ரீ பிரிஜ் கிஷோர் பாபுவின் கீர்த்திவாய்ந்த சரித்திரத்துக்கே இன்னும் அதிகமான கீர்த்தியைத் தேடிக்கொடுத்திருக்கிறார்.

ஜெயப்பிரகாஷுடைய மனைவியான ஸ்ரீமதி பிரபாவதி தேவியார் காந்திஜீயின் அன்புமிக்க குமாரத்தி போன்று இன்றும் திகழ்கிறார். மணமாவதற்கு முன்பிலிருந்தே ஸ்ரீமதி பிரபாவதி தேவியார் காந்திஜீயுடன் நெருங்கிப் பழகி வருகின்றார். சபர்மதி ஆஸ்ர

மத்திலிருந்து சேவாக்கிராமம் வரை காந்திஜீ யின் அரசியல் யாத்திரையில் தொடர்ந்துவரும் ஒரு உத்தம சிஷ்யை ஸ்ரீமதி பிரபாவதி தேவி யார். காந்தியத்தின் அடிப்படையைக்கூட ஒத் துக்கொள்ளாத புரட்சிவீரர் ஜெயப்பிரகாஷு டைய மனைவியான ஸ்ரீமதி பிரபாவதி தேவி யார் பரிசுத்தமான காந்தீய வாதியாக அரசிய லில் பணியாற்றி வருகிறார்.

பதவிக்காகப் பறக்கிற 'தேசீய' வாதிகளுக் கும் ஜெயப்பிரகாஷுக்கும் எவ்வளவோ வித் தியாசங்களுண்டு. பதவி இவரை நாடுகின்ற தைப் பார்க்கிறோம். தனது லட்சியப்படி போக அப்பதவி, உதவி செய்யாவிட்டால், அதை உதறிவிட்டுத் தனது கொள்கைக்காகப் போராடும் தனி வீரத்தையும், தனி உதாரணத் தையும் நாம் ஜெயப்பிரகாஷிடம் காண் கிறோம். இவர், தன் அபிப்பிராயத்தை வலி யுறுத்தவும், தன் கொள்கைக்குத் தேசத்தைத் திருப்பவும் காங்கிரஸ் காரியக்கமிட்டியிலிருந்து ராஜீனமாச் செய்துவிட்டார். கேவலம் தலை மைக்காக இருக்கும் 'தலைவர்'களுக்கும் லட்சி யத்துக்காக தனிமையாக இருந்துகொண்டு போராடும் ஜெயப்பிரகாஷ் போன்றவர்களுக் கும் உள்ள வித்தியாசம் இதுதான்!

தன்னுடன் மாறுபட்ட அபிப்பிராயங் களைக் கொண்டவர்களை மதிக்கும் - நேசிக்கும்

சீரிய பெருந்தன்மையை நாம் ஜெயப்பிரகாஷி டம் நன்ருகப் பார்க்கிருேம். நேர்மையாக வும், தெளிவாகவும் தன்னுடைய கருத்துக்களை வெளியிடுவது போலவே பிற கருத்துகளையும் கண்டிக்கிருர். எவரையும் தனிப்பட்ட முறை யில் தூஷிக்கும் தீய வழக்கம் இவரிடத்தில் இல்லை. இவரிடத்தில் காந்திஜீ கொண்டிருக் கும் கனிந்த அன்பும், உயர்ந்த மரியாதையுமே ஜெயப்பிரகாஷிடமுள்ள பெருந் தன்மைக்கு சிறந்த சான்ருகும். வெறும் ஆவேசமுள்ள ஒரு பிரசங்கியல்ல ஜெயப்பிரகாஷ். அடக்க மாகவும், தர்க்க ரீதியிலும் கேட்போர் எல் லோரும் கவர்ச்சியுறும்படி பேசும் வன்மை இவரிடத்திலிருக்கிறது.

காந்திஜீயின் எழுத்துக்களில் காணப் படும் எளிமை, ஆழ்ந்த உண்மை, வலிமை - இவைகளை ஜெயப்பிரகாஷுடைய எழுத்துக் களில் நாம் காண முடிகின்றது.

இவரிடத்தில் இரண்டே யிரண்டு பலஹீ னங்களுண்டு என்று தோழர் மேஹரலி எழுது கிருர். அவைகளும் மன்னிக்கப்படக் கூடிய வையே! தாஞகவே க்ஷவரம் செய்துகொள் ளும் ஒரு '**சேவிங் செட்**' இவரிடத்திலுமிருக் கிறது. முகமெல்லாம் மலரும் ஒரு புன்னகை யுடன் ஜெயப்பிரகாஷ் அதை வர்ணிக்கும் போது 'உலகத்திலேயே அதுதான் மிக அழ

கானது' என்று சாதிப்பாராம்! ஆம்! மிக அழகான முகமுடைய ஜெயப்பிரகாஷுக்காக இந்த அவருடைய சாதனையை நாம் மன்னிக்க வேண்டும்!

காலந்தவறி விடுவது என்பது இவருடைய இன்னொரு பலஹீனம். இதைக்கூட, இவரே வருத்தப்படுவதால், மன்னித்துவிட வேண்டியதுதான். ஆழ்ந்த அறிவுள்ள எதிரியுடன் வாதாடுவதில் ஜெயப்பிரகாஷுக்கு அதிக விருப்பம். இந்த விருப்பம் இவரைச் சில சமயங்களில் அப்படியே அந்த சம்பாஷணையில் ஆழ்த்தி விடுகின்றது. அதனால், பல அலுவல் வளை ஏற்பாடு செய்பவர்கள் இவருக்காக குறித்த காலம் தவறி, பல மணி நேரங்கள் காத்திருக்க வேண்டி நேரிடுகின்றது.

ஜெயப்பிரகாஷ் தன்னுடைய பத்தொன்பதாவது வயதில்தான் முதன் முதலாக ஒரு மோட்டாரைப் பார்த்தாராம்! இந்தக் கிராம வாசி தான் பிறகு அமெரிக்கக் கலாசாலைகளில் பல பட்டங்களைப் பெற்றார். இவரேதான் இன்று இந்திய அரசியல் வாழ்வில் நடுநாயகமாகவும், வழிகாட்டியாகவு மிருக்கிறார்!

# நம்முடைய இந்தியா

ஒரு கட்டுப்பாடான பொதுஜனப் புரட்சி மூலமே நம்முடைய இந்தியாவை அந்நிய ஆதிக்கத்திலிருந்து பூரணமாக விடுவிக்கமுடியும் என்று ஜெயப்பிரகாஷ் தீர்மானமாகக் கருது கிறார். இதில் இவருக்கு சிறிதளவும் சஞ்சல மும், சோர்வும் இல்லை.

விடுதலை பெற்ற பின்பு நம்முடைய இந்தியா எம்மாதிரியான அமைப்பின் கீழ் இருக்கவேண்டு மென்பதிலும் இவருக்கு தெளிவான அபிப்பிராயமிருக்கிறது.

ஒரு வர்க்கப் புரட்சியின் மூலம்தான் சோஷலிஸச் சமுதாயத்தை இங்கே நிர்மா ணிக்க முடியும் என்று இவர் உறுதியாக நம்பு கிறார்.

இந்தியா விடுதலை பெற்ற பின்பு இந்திய சமுதாயம் எப்படி யிருக்கும் என்பதை காங் கிரஸ் மஹாசபை இந்திய மக்களுக்குத் தெளிவு படுத்த வேண்டுமென்று காங்கிரஸைப் பல முறை இவர் வற்புறுத்தி வந்திருக்கிறார். சுதந் திரத்தின் பொருளைத் தெளிவாக்கும் ஒருநீண்ட தீர்மானத்தை பகிரங்கக் கூட்டத்தில் பிரேரே

பிக்க ராம்கார் காங்கிரஸின் விஷயாலோசனைக் கமிட்டிக்கு இவர் அனுப்பியிருந்தார். ஆனால், இவர் ராம்கார் காங்கிரஸ் கூடுவதற்கு முன்னதாகவே கைது செய்யப்பட்டு விட்டார். அதனால், அந்தத் தீர்மானத்தை அந்தக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ஜெயப்பிரகாஷ் பிரேரேபிக்க முடியாது போய்விட்டது. ஜெயப்பிரகாஷின் அந்தத் தீர்மானத்தை காந்திஜீ தன்னுடைய ஹரிஜன் பத்திரிகையில் விமர்சனம் செய்திருக்கிறார். அந்த விமர்சனத்தில் ஜெயப்பிரகாஷின் பல கருத்துக்களை காந்திஜீ ஏற்றுக்கொண்டு மிருக்கிறார்.

அந்தத் தீர்மானம் பின்வருமாறு:

"உலக மக்களின் கூட்டுறவுடன் சுதந்திரமாக வாழும் ஒரு வலிமையுள்ள நாடாக நம்முடைய இந்தியா இருக்கவேண்டும்.

"சுதந்திர இந்தியா உலகின் அமைதியைக் காக்க வேலை செய்ய வேண்டும். சுதந்திரத்துக்கும், அமைதிக்கும் எங்கெல்லாம் அபாயம் ஏற்படுகிறதோ, அங்கெல்லாம் சுதந்தரத்தைப் பாதுகாக்கவும், அமைதியை நிலைநாட்டவும் நம்முடைய இந்தியா இதர நாடுகளுடன் ஒத்துழைக்க வேண்டும்.

"தனது தீர்க்கமுடியாத தேசீயப் பிரச்னைகளை சுதந்திரமாக நிர்மாணிக்கப்படும் ஒரு

சர்வதேச மத்தியஸ்த சபையின் முடிவுக்கு விட்டு, அதனுடைய முடிவை கவுரவிக்க வேண்டும்.

"பூரண ஆயுதப் பரிஹாரணத்தை நாமும் வலியுறுத்தவேண்டும். யுத்தமே ஏற்படக் கூடாத நிலைமையை சிருஷ்டிப்பதில் நாமும் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

"நமக்கு அண்டையில் உள்ள சிறிய அல்லது பெரிய நாடுகளுடன் அந்நியோன்யமாக வாழ வேண்டும். எந்த நாட்டையும் ஆக்கிரமிக்கும் எண்ணம் நமக்கு இருக்கக் கூடாது.

"இந்தியாவிலுள்ள வயது வந்த ஆண் - பெண் - இவர்களின் சர்வஜன வாக்குரிமையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளடங்கிய அரசியல் நிர்ணய சபையே நமது நாட்டின் அரசியல் அமைப்பை வகுக்க வேண்டும்.

"சட்டம் மக்களின் விருப்பப்படியே இயற்றப்படவேண்டும். அமைதியை நிலை நாட்ட எடுத்துக் கொள்ளப்படும் முடிவான நடவடிக்கை மக்களின் விருப்பத்தையும், அனுமதியையும் பெற்றதாக இருக்க வேண்டும்,

"தனி நபருடைய பிரஜா உரிமைக்கும், கலாசார மத சுதந்திரங்களுக்கும் அரசாங்கம் பூரணமான உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

"பொது மக்களிடையே அரசாங்கம் பாரபட்சம் காட்டக் கூடாது. ஒவ்வொரு பிரஜைக்கும் சம உரிமைகளும், சம சந்தர்ப்பங்களும் இருக்க வேண்டும். பிறப்பினாலோ அல்லது பரம்பரையின் பெயராலோ நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும், வித்தியாசங்களையும் ஒழிக்க வேண்டும்.

"பொது மக்களின் ஜனநாயக விருப்பப்படி ஜனநாயக ரீதியில் நிர்மாணிக்கப்பட்ட ஒரு அரசியல் நிர்ணய சபை தயாரித்த அரசியல் அமைப்பின்படி ஆட்சி புரியும் சர்க்காரை பலாத்காரத்தின் மூலம் கவிழ்க்க எத்தனிக்கும் எந்த முயற்சியையும் அந்த அரசாங்கம் ஒடுக்க வேண்டும்.

"சமூக நியாயத்தையும், பொருளாதார சுதந்திரத்தையும் அடிப்படையாகக் கொண்ட அரசியல் அமைப்பு தானிருக்க வேண்டும். இந்த அரசியல் அமைப்பின் கீழ் ஒவ்வொரு பிரஜையின் தேசியத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

"மக்களின் சுபிட்ச வாழ்வை ஏற்படுத்தி விடுவதோடு அரசாங்கத்தின் கடமை முடிந்து விடவில்லை. ஒவ்வொரு மனிதனும் சுதந்தரமாக வாழவேண்டும். அவனுடைய ஆத்மீக உணர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் நிறைவு

பெற்றுப் பிரகாசிக்க சர்க்கார் சந்தர்ப்ப மளிக்க வேண்டும். தனி மனிதனின் அறிவுச் சிறப்பு நமது சமூகத்தின் பொதுச் சொத்தாகும்.

"கூட்டு முயற்சியின் மூலம் சிறிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தும், பெரிய கைத்தொழில்களை தேசீய மயமாக்கியும் சமூகமே லாபமடையும் வகையில் சர்க்கார் தொழில் அபிவிருத்தித் திட்டத்தை விஞ்ஞான ரீதியில் வகுக்க வேண்டும். ஆலைக் கைத்தொழிலை மட்டும் திறமையான பரவல் முறையின் கீழ் ( **Decentralisation** ) கொண்டு வர வேண்டும்.

"தொழில் - விவசாயம் - இந்தத் துறைகளில் தனி நபரின் ஏகபோக உரிமைக்கும், சுரண்டலுக்கும் இடமேயிருக்கக் கூடாது.

"கிராமங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும். பரிபூரணமான சுயாட்சியுடன் கூடிய, சுய தேவைகளைச் சாத்யமான அளவுக்கு பெற்றுக் கொள்ளும் வகையில் கிராமங்கள் புது வாழ்வு பெற வேண்டும். உண்மையாகவே உழைக்கும் விவசாயிக்குத்தான் நிலம் சொந்தமாயிருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட, நியாயமான அளவுக்கு அதிகமாக எவருக்கும் நிலமிருக்கக் கூடாது. சமூக விரோதிகளான நிலப்பிரபுக்களையும், மிகக் கொடுமையான

நில அடிமைத் தனத்தையும் ஒழிக்க வேண்டும். உணவு தான்யங்களுக்கும், மூலப்பொருள்களுக்கும் நாம் பிறநாடுகளை எதிர்பார்க்காது, நம்முடைய நாட்டிலேயே அவை தயாரிக்கப்பட வேண்டும். பெரிய கூட்டுப் பண்ணைகளை சர்க்கார் நடத்த வேண்டும். விஞ்ஞான சாதனங்களைக் கொண்ட விரிவான விவசாய முறைகளை சர்க்கார் கையாள வேண்டும்.

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சிருஷ்டியான சமஸ்தான முறையை ஒழித்துவிட வேண்டும்."

இந்தத் தீர்மானமே அவரது முடிவான சோஷலிஸ்டு சமுதாய அமைப்பின் படமில்லையென்றாலும், காங்கிரஸை இந்தக் கருத்துக்களையாவது ஏற்றுக் கொள்ளச் செய்யவே இந்தத் தீர்மானத்தை அவர் அனுப்பினார்.

காந்திஜீ இந்த தீர்மானத்தை விமர்சனம் செய்து தனது 'ஹரிஜன்' இதழில் (ஏப்ரல் 20, 1940) பின் வருமாறு கூறுகிறார் :-

"ஸ்ரீ ஜெயப்பிரகாஷின் தீர்மானத்தைப் படித்தேன். அவருடைய ஒரே கருத்தைத் தான் நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், மற்ற எல்லாக் கருத்துக்களையுமே நான் ஆதரிக்கிறேன். நிலத்தைப் பற்றியுள்ள அவருடைய கருத்துக்கள் நமக்கு பயனளிப்பதாக இருக்க

லாம். உண்மையில், அவை அவ்வாறு இல்லை. கௌரவமான வாழ்க்கைக்கு போதுமான அளவுக்கு அதிகமாக எவருக்குமே நிலமே இருக்கக்கூடாது. தங்களுடையது என்று உரிமை பாராட்டிக்கொள்ள நிலமே இல்லாத காரணத்தினால் தான் பொது மக்கள் கடுமை யான வறுமையில் கஷ்டப்படுகின்றார்கள் என்ற உண்மையை எவரே மறுக்க முடியும்?

"சமஸ்தானாதிபதிகளைப் பற்றிய ஸ்ரீ ஜெயப்பிரகாஷின் அபிப்பிராயத்தை நான் ஒப்புக் கொள்ளவில்லை. மக்களின் ஜன நாயக விருப்பப்படி மக்களின் மன்னர்களாக சமஸ்தானாதிபதிகள் இருப்பதில் எனக்கு ஆட் சேபணையில்லை."

காந்திஜீயும், காங்கிரஸும் கூட இன்று அநேகமாக ஜெயப்பிரகாஷின் அபிப்பிரா யத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

மக்களின் உணர்ச்சிப் போக்கில் போகும் காந்திஜீ, "உழவன் தான் நிலத்துக்குச் சொந்தம்," என்று இன்று கூற ஆரம்பித்து விட்டார். சமஸ்தானங்களில் தொடர்ந்து நடைபெறும் எதேச்சாதிகார தர்பாரைக் கண்டு காந்திஜீ 'இந்தத் தீய' முறை அகல வேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டார்.

**"சுரண்டலை ஒழித்து, சம வசதிகளை எல்லோருக் கும் அளித்து, சாமான்ய மனிதனின் க்ஷேமலாபத்தை**

**முதன்மையாகக் கருதும் ஒரு சமுதாயத்தைத் தோற்று விப்பதே காங்கிரஸின் நோக்கமாக இருக்க வேண்டும்"** என்ற பொருள் கொண்ட மீரட் காங்கிரஸ் தீர்மானம் நமது சுதந்திர இந்தியாவின் அடிப் படையை வியக்தப் படுத்தியிருப்பது சோஷ லிஸ்டுகளின் அபிப்பிராயத்தைக் கூடிய மட்டி லும் பிரதிபலித்திருக்கிறது. இந்த நிலைக்கு காங்கிரஸை இழுத்து வந்ததற்கு ஜெயப்பிர காஷுக்கு அதிகமான பங்குண்டு என்றால் அதை எவரும் மறுக்க முடியாது.

காங்கிரஸ் தலைமையிலுள்ள பிற்போக் காளர்கள் மீரட் காங்கிரஸின் வியக்தமான லட்சியத் தீர்மானத்தை விரும்ப மாட்டார்கள். அவர்களுடைய எதிர்ப்பால் இந்தத் தீர்மானம் ஏட்டளவில் இருந்து விடுமோ என்ற கவலை சோஷலிஸ்டுகளுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்பட நியாய மிருக்கிறது. எனினும், பொது மக்களைத் திரட்டுவதில் நம்பிக்கையுள்ள சோஷலிஸ்டுகள் இந்தத் தீர்மானத்தின் லட்சி யத்தை சாதிக்க ஜெயப்பிரகாஷ் தலைமையில் போராடியே தீருவார்கள் என்பதை 'தேசியம்' பேசும் பிற்போக்காளர்கள் உணரவேண்டும். ஏட்டளவில் உள்ள தீர்மானம் பொதுமக்களை எந்த அளவுக்கு உயர்த்தும் என்பதையும், மக்களாட்சியை ஏற்படுத்த உதவி செய்யாது என்பதையும் ஜெயப்பிரகாஷும், இவரைப் பின்பற்றும் லட்சக் கணக்காண புரட்சி வீரர்

களும், பொதுமக்களும் நன்ருக உணர்ந்திருக்கிருர்கள்.

எந்தக் காரணத்துக்காகவும், '**ஒரே தலைவன் இருக்க வேண்டும்**' என்ற உணர்ச்சிக்கு-சர்வாதிகார உணர்ச்சிக்கு இடம் தரவே கூடாதென்று ஜெயப்பிரகாஷ் கூறுகிருர். "மக்களின் சுதந்திரமான விருப்பத்தையொட்டியே எந்தத் தலைவனும் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும்" என்ற ஜெயப்பிரகாஷின் ஜனநாயக உணர்ச்சியே நம்மையும் ஆகர்ஷிக்கிறது.

இனவெறி - மதவெறியை அடிப்படையாகக் கொண்ட எந்தப்பிரிவு படுத்தும் திட்டத்தையும் அரசியல் ரீதியாக நம்முடைய இந்தியா ஏற்றுக் கொள்ளக் கூடாது என வலியுறுத்தும் ஜெயப்பிரகாஷ், இந்த சிக்கலுக்கு பின் கண்ட பரிகாரத்தையும் தெளிவு படுத்தியிருக்கிருர்:--

"பூரணமாக எல்லா வழிகளிலும் இந்தியா பலமுள்ள ஒரு நாடாக இருக்க வேண்டுமாளுல், பாதுகாப்பு அந்நிய நாட்டு விவகாரங்கள், போக்குவரத்து, சுங்கவரி போன்ற பொதுவான சில முக்கியமான அதிகாரங்களையுடைய பலமுள்ள ஒரு மத்ய சர்க்காரும், அதிகமான அதிகாரங்களையுடைய பாஷாவாரியான சுதந்

நிரமான மாகாணங்களும் கொண்ட ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பு தான் இருக்க வேண்டும். **மத அல்லது இன அடிப்படையில் நாட்டைப் பிரிப்பது என்பது கூடவே கூடாது. தேசிய நலன்களுக்காகவும், தேசியத் தற்காப்புக்காகவும் மத்திய சர்க்கார் சக்தி வாய்ந்ததாக இருந்தேயாக வேண்டும். இது அவசியமானதொரு தேசியத் தேவை யாகும். [ஆனால், காங்கிரஸின் தலைமையினர் இந்தத் தேவையை அவசரத்தில் மறந்து விட்டார்கள் என்பதை, சமீபத்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானத்திலிருந்து, நாம் பார்க்கிறோம். இங்குமங்கும் கலகமூட்டி விட்டு, தேசியத் தலைமையைத் தனது இனவெறித் திட்டத்துக்குப் பணிய வைக்க வேண்டும் என்ற பாகிஸ்தானிகளின் பயமுறுத்தலுக்குக் காங்கிரஸ் பயந்துவிட்டது போலிருக்கிறது! இந்த அபாயத்தைச் சமாளிக்க, பஞ்சாபையும், வங்கத்தையும் பிரித்து விடவேண்டிய அளவுக்குக் காங்கிரஸ் போய்விட்டது. இது மகத்தான ராஜதந்திரப் பிசகாகும். 60 வருஷ தேசியச் சரித்திரத்தைக் காங்கிரஸ் பிளந்து விட்டதை, காந்திஜியே, பீஹாரில் சமீபத்தில் நிகழ்த்திய பிரார்த்தனைப் பிரசங்கத்தில், வன்மையாகக் கண்டித்திருக்கிறார்]**

"வகுப்பு வாதிகளும், மதவெறியர்களும் பிரிட்டிஷ் சர்க்காரின் 'கட்டளை'ப்படி பாமர மக்களை யணுகி அவர்களிடையே விஷமமான துவேஷத்தைப் பரப்புகிறார்கள். இதன் விளைவாகக் கோரமானபடுகொலைகள் நடக்கின்றன. இதனால், சோர்வு அடையாமல், சுதந்திரத்தின் உண்மையான அர்த்தத்தை அவர்களிடையே

விளக்கினால், நாளடைவில் இந்திய மக்களிடையே ஐக்கியத்தை நிலைநாட்டி விடமுடியும். இதற்குத் துணிவும், முயற்சியும் வேண்டும். காங்கிரஸின் சுதந்திரத்தின் தெளிவான பொருளும், எதிர்கால அரசியல் அமைப்பைப் பற்றிய நிச்சயமான வடிவமும் சோஷலிஸ அடிப்படையில் விளக்கப்பட்டால், பாகிஸ்தான் கூச்சலுக்கோ அல்லது ஹிந்து வகுப்புவாதிகளின் கூச்சலுக்கோ ஹிந்து-முஸ்லீம் பாமர மக்கள் செவி சாய்க்க மாட்டார்கள். தங்களுடைய மத, கலாசார சுதந்திரங்களுக்கு ஆபத்து வந்து விடும் என்று பயப்பட மாட்டார்கள். தங்கள் மதத்தையும், கலாசாரத்தையும் நேசிப்பது போலவே தங்கள் இந்தியாவையும் நேசிப்பார்கள். அதை ஒன்று பட்டுக் காப்பார்கள்.''

நம்முடைய இந்தியா தனது சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொருட்டுத் தனது ராணுவத்தை முதல் தரமானதாக மாற்றியமைக்க வேண்டும் என்பதிலும், விஞ்ஞான ரீதியில் நவீன ஆயுத தளவாடங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதிலும், ஜனங்கள் வேறு; ராணுவம் வேறு என்ற மனோபாவத்தை ஒழிக்க வேண்டும் என்பதிலும் ஜெயப்பிரகாஷ் பண்டித நேருவையே தீவிரமாக ஆதரிக்கிறார்.

ஜெயப்பிரகாஷ் கனவு காணும் நம்முடைய இந்தியாவே, வலிமை கொண்டு, தீமையற்று' உலகில் ஜனநாயகத்துக்கும், சுதந்திரத்துக்கும் ஒருபலமான அரணாக நிற்க முடியும்.

இந்தக் கனவை நனவாக்க ஜெயப்பிரகாஷ் அரும்பாடு படுகிறார். அவருக்கு நாம் பலம் கொடுத்து பலனடைய வேண்டும்.

# இனி என்ன ?

ஜெயப்பிரகாஷ் இன்று காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கத்தினராயிருக்கிறார். இது வரை தான் நிர்வகித்து வந்த சோஷலிஸ்டு கட்சியின் காரியதரிசிப் பதவியை இன்று இவர் ராஜிநாமச் செய்து விட்டார். ஆயினும், ஜெப்பிரகாஷே சோஷலிஸ்டு கட்சியின் நடமாடும் ஜீவனைத் திகழ்கிறார். மேலும், கட்சியின் நிர்வாகக் கமிட்டியிலுமிருக்கிறார்.

வெளியே வந்தது முதல், ஜெயப்பிரகாஷ் தேசீய ஐக்கியத்தையும், இந்திய மக்களின் புரட்சிப் பாதையையும் நமக்குத் தெளிவாக பல பிரசங்கங்கள் மூலமும், 'ஜனதா' என்ற பத்திரிகையில் எழுதுவது மூலமும் தெளிவாக வற்புறுத்தி வருகிறார். கொஞ்சம் கூட ஓய்வு எடுத்துக் கொள்ளாமல், இவர் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டேயிருக்கிறார்.

வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் இவருடைய சிந்தனையும், செயலும் வேறு விதமாக எப்படி இருக்க முடியும்?

இனி என்ன என்ற கேள்விக்கு சந்தேக மற்ற பதிலை ஜெயப்பிரகாஷ் பின்வருமாறு கூறுகிறார்.

[சமீபத்தில் இவர் செய்த பிரசங்கங்களையும், 'ஜனதா'வில் இவர் எழுதிய கடிதங்களையும் சுருக்கிச் சாரமாகப் பின்வருமாறு நான் தொகுத்திருக்கிறேன். இந்த சாரம் நம்முடைய பல சந்தேகங்களைப் போக்கும்; நமது பாதையைத் தெளிவாக்கும்] :-

"1942ம் ஆண்டு ஆகஸ்டில் குமுறியெழுந்த புரட்சி அடங்கி விட்டது போல இந்த நிமிஷம் தோன்றுவது உண்மையே. ஆனல் அப்புரட்சி ஒடுக்கப்பட்டு விட்டது என்று எண்ணுவது தவறாகும். புரட்சி என்பது ஒரு சம்பவமல்ல. அது ஒரு நிலையாகும்; சமூக சக்திகளின் முன்னேற்றமாகும். மேலும் ஒரு புரட்சியில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவது இயற்கையே. ஆகஸ்டில் பகிரங்கமாக வெடித்த மக்களின் புரட்சி இன்று உள்ளூர்ந்து மெதுவாக நகர்கிறது. இந்த மெதுவான நிலைமைக்குக் காரணம் தயக்கமே யென்று நான் தயக்கமின்றிக் கூறுகிறேன்.

"புரட்சி என்பது வெறும் அழிப்புத்திட்டமல்ல; அதுவே ஒரு நிர்மாண சக்தியுமாகும். இதை உணரத் தவறியதாலும், பிரிட்டிஷ்

அதிகாரம் எங்கெல்லாம் வீழ்த்தப் பட்டதோ அங்கெல்லாம் ஆட்சி புரியும் நிர்மாண சக்திக் கட்டுப் பாடாக செயல் புரியத் தவறியதாலும், ராணுவம் மக்களுடன் சேராததாலுமே ஆகஸ்டு புரட்சி நாம் எதிர் பார்த்த அளவுக்குப் பலனைத் தரவில்லை. அப்போதும் தயக்கமும் குழப்பமுமே நமது முன்னேற்றத்தைத் தேக்கி நிறுத்தின. அதே தயக்கமும் குழப்பமும் இன்றுகூட நிலவுகின்றன. அதனால் தான் நாம் மெதுவாக நகர்கிறோம். நமது புரட்சி உத்வேகமும் தேக்கமுற்றிருப்பது போலத் தோன்றுகின்றது.

"இந்நிலையில் நமது கடமைகள் என்ன? என்பதைத் தெளிவாக நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

"யுத்தமே இனி ஏற்படாது என்று நினைப்பது விவேகமுள்ள எண்ணமாகாது. சமாதான மகாநாட்டின் மூலம் "எல்லாம் மங்களமாக முடியும்" என்று எண்ணுவதும் தவறாகும். ஏகாதிபத்திய ஆசை நிர்மூலம் செய்யப்படும் வரை யுத்தம் அடிக்கடி மூண்டு கொண்டு தானிருக்கும்,

"இந்தப் பலம் பொருந்திய நாசகர சக்தி களின் ஆதிக்கப் போட்டிக்கு எதிராக உலகத்தில் மக்களின் மாபெரும் சக்தி உருவக

மாய் விட்டது. அது இந்தத் தீய சக்திகளின் அழிவு நாளை நெருங்கிவரச் செய்து கொண்டிருக்கிறது. இந்தியாவிலும் இந்த அபாயத்தை எதிர்த்து உத்வேகம் பெருகிக் கொண்டு வருகிறது.

"தன்னை எப்படியாவது பலப்படுத்திப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இங்கே 'இந்தியாவில்' பிரிவினை உணர்ச்சியைத் தட்டி விட்டிருக்கிறது; ஏன்? இந்த உணர்ச்சிக் கனலில் நெய்யை ஊற்றி விட்டிருக்கிறது. இந்தியாவைப் பிரிவினை செய்வது மூலம் பிரிட்டனின் பாதுகாப்பில் 'பத்திரமாக' வாழ நினைக்கும் சக்திகள் பாமர மக்களிடை மதவெறியைக் கிளப்பி விட்டிருக்கின்றன. இந்த 'விளையாட்டின்' விளைவால் ரத்த வெள்ளத்தில் நிரபராதிகளான பொதுமக்கள் பிணங்களாக மிதக்கின்றனர்!

"நமது தேசியத் தலைமையின் 'திருப்திப் படுத்தும்' கொள்கையே இந்த நிலைமைக்குக் காரணம் என்று நான் துணிவுடன் கூறுவேன்.

"புரட்சி சக்திகளிடையே குழப்பம், தேசீயத் தலைமையிலே குழப்பம், தவறான முடிவுகள், பொது மக்களிடையே பஞ்சம்,

கொள்ளை, கொலை - இவைகளைத் தாண்டித் தீவிரமாக நாம் முன்னேற வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

"இடைக்கால சர்க்காரோ, அல்லது அரசியல் நிர்ணய சபையோ நம்மை நமது லட்சியத்திற்கு அழைத்துச் செல்லா. மேலிருந்து வகுப்பு ஐக்கியத்தை மக்கள் மீது எவரும் திணிக்க முடியாது. வகுப்பு ஒற்றுமை மூலம் தேசீய ஐக்கியத்தை நிர்மாணிக்க குறுக்கு வழி ஒன்றும் இருக்க முடியாது. பொருளாதார அடிப்படையில் திரட்டப்பட்ட வர்க்க உணர்ச்சியுடன் கூடிய ஹிந்து - முஸ்லிம் பாமர மக்களின் ஐக்கியமே உண்மையான தேசீய ஐக்கியமாகும்.

"பிரிட்டிஷாரின் சதியின் விளைவான ஒரு வலையே இந்த இடைக்கால சர்க்கார். நம்மை இதில் சிக்க வைத்து, நமது அடிமைத் தளைகளை இறுக்கவே பிரிட்டிஷார் இந்தச் சூழ்ச்சியைச் செய்திருக்கிறார்கள்.

"பண்டித நேரு இந்த சர்க்காரை சுதந்திரமான பாதையில் திருப்ப முயல ஆரம்பித்த உடனே, பிரிட்டிஷாருக்கு திகில் ஏற்பட்டு விட்டது. தங்களுடைய 'சவுகரிய'த்துக்காகத் தாங்களே சிருஷ்டித்த இந்த இடைக்கால சர்க்கார் வேறு பாதையில் செல்ல பிரிட்டிஷ்

சர்க்கார் எப்படி அனுமதிக்க முடியும்!' தங்க ளுடைய சவுகரியத்துக் காகவே இதை உடைக்க பிரிட்டிஷ் சர்க்கார் ஆரம்பித்து விட்டனர். காங்கிரஸுடன் தேசபக்தியுடன் ஒரு உடன்பாட்டுக்கு வர மறுத்த முஸ்லீம் லீகை லார்டு வேவல் ( வைஸ்ராய் ) இடைக்கால சர்க்காரில் நுழைத்துவிட்டார்.!

[ பிறகு நேர்ந்த விவரங்களை வாசகர்கள் அறி வார்கள் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் கோர்வைக்காகவும், வாசகர்களுக்கு ஞாபகப்படுத்தும் முறையிலும் சில பழைய சம்பவங்களை இங்கு குறிப் பிடுவது அவசியம் எனக் கருதுகிறேன்.

இடைக்கால சர்க்காரில் லீக் நுழைவதற்கு முன்பு லார்டு வேவல், காங்கிரஸ் தலைவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி தான் முக்கியமானது. லீக் தனது பம்பாய்த் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு அரசியல் நிர்ணய சபையில் சேர்ந்து விடும் என்பது தான் அந்த வாக்குறுதி. அந்த வாக்குறுதியைத் தாம் கொடுக்க வில்லையென்றும், காங்கிரஸ் மனப்பூர்வமாக பிரிட்டிஷ் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை யென்றும், எனவே லீக் அரசியல் நிர்ணய சபையில் சேர முடியாதென்றும், ஜின்னுவும் இதர லீக் தலைவர் களும் கொம்மாளம் அடித்தார்கள். தேசீயத் தலைமை 'பெரிய நலன்'களையொட்டி யென்று சொல்லிக் கொண்டு அபாயமான பாதையில் இறங்க ஆரம் பித்தது. பின்னர் லார்டு வேவல், ஜின்னு, நேரு, பலதேவ்சிங் முதலியவர்கள் லண்டன் சென்று பிரிட்டிஷ் மந்திரிகளைச் சந்தித்ததும், அதன் விளைவாக லீகை திருப்தி செய்யும் பிரிட்டிஷ்

சர்க்காரின் திருத்தப்பட்ட மே 16ந் தேதி அறிக்கை வெளி வந்ததும் வாசகர்கள் அறிந்ததே. இந்த அறிக்கையைக்கூட காங்கிரஸ் தலைமை ஒப்புக் கொண்டது. இதன் மூலம் பிரிவினை வாதிகளுக்கு இன்னும் அதிக ஊக்கம் ஏற்பட்டு 'இடைக்கால சர்க்காரிலிருந்து வெளியேற மாட்டோம்; அரசியல் நிர்ணய சபையிலும் சேர மாட்டோம், என்று தேசீய முன்னேற்றத்தைத் தடை செய்யும் நிலையை மேற்கொண்டது. இதற்குப் பின்னல் லார்டு வேவல் தூபம் போடுகிறுர் என்பது உலகமறிந்த ஒரு ரகசியமாகும்! பின்னர் தான் பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு பண்டித நேரு கண்டிப்பான கடிதமொன்றை எழுதினுர். அதற்குப் பதில் தான் பிரிட்டிஷ் சர்க்காரின் புதிய அறிக்கை. இரு குரல்களில் பேசும் இந்த அறிக்கையில் பழைய விஷத்திற்குப் புதிய சக்தி கொடுக்கப் பட்டுள்ளது என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஹிந்துஸ்தான் பாகிஸ்தான், ராஜஸ்தான் - இம் மூன்றையும் பிரிவினை வெறிக்குள்ளாக்கி, இந்தியப் பொது மக்களை நிரந்தரமாக மோதிக் கொள்ள வைத்து இந்தியாவை சாசுவதமான அடிமைத் தளைத்திக்கும், அமைதியின்மைக்கும் உள்ளாக்கவே இந்தப் புதிய அறிக்கை உதவி செய்யுமே யொழிய, பிரிட்டிஷ் ஆட்சி (அறிக்கை கூறுவதுபோல) வெளியேறி விடப்போவதில்லை. தேசீயத் தலைமை இந்த அபாயத்தை எப்படிச் சமாளிக்கப் போகின்றதோ? சமரஸமான, சட்ட ரீதியான பாதையைவிட்டு, பிரிவினை வாதிகள், சமஸ்தானுதிபதிகள், பிரிட்டிஷ் சர்க்கார் - இம்மூன்று தேசீய விரோதிகளையும் ஒரு முடிவான போரரங்கத்தில் சந்தித்து முறியடிக்க வேண்டுமென்பதே புரட்சி வீரர்களின் பொது மக்களின் இதயத் துடிப்பாகும்.]

“சர்க்காருக்குள் லீகை நுழைத்து உள் கலகம் விளைவிக்கச் செய்து, அதன் மூலம் காங்கிரஸை வெளியே விரட்டி விடலாம் என்றே பிரிட்டிஷ் சர்க்கார் முனைந்திருக்கிறார்கள்.

“சர்க்காருக் குள்ளிருந்து கொண்டு ‘கலகம்’ செய்யும் லீகர்களுடன் ஒரு நியாயமான உடன்பாட்டை காங்கிரஸ் தலைவர்கள் எப்படிச் செய்து கொள்ள முடியும்? இவர்களுடன் ஒருசர்க்காரில் பண்டிதநேரு எப்படி நிர்வாகம் நடத்த முடியும்? எவ்வளவு நாட்கள் தான் காலம் தள்ள முடியும்? கூட்டுப் பொறுப்பிலோ அல்லது நியாயமான உடன்பாட்டிலோ நம்பிக்கை யில்லாது, வைஸ்ராயின் ‘ரத்து’ அதிகாரத்தையே தங்களுடைய பலமாக நினைக்கும் முன்னேற்றத்தின் பரம விரோதிகளுடன் ஒரு இடைக்கால சர்க்காரில் இருந்து கொண்டு பண்டிதநேரு எப்படி நிம்மதியை நிலைநாட்ட முடியும்?

“இடைக்கால சர்க்காரை உடைக்க ஆரம்பித்திருக்கும் ஏகாதிபத்யச் சதி, அரசியல் நிர்ணய சபையை மட்டும் உடைக்காமலிருந்து விடுமா? (பிரிட்டிஷ் சர்க்காரின் புதிய பிரகடனம் அரசியல் நிர்ணய சபையின் முக்கியத்வத்தைச் சிதைத்து விட்டது என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்

டும். ஜெயப்பிரகாஷின் அன்றைய எச்சரிக்கை இன்று நிருபணமாய் விட்டது) காலம் கடத்திக்கொண்டே தங்களுடைய பலத்தை, பிரிட்டிஷ் சர்க்கார் உறுதிப் படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பது வெளிப்படை.

எனவே, இடைக்கால சர்க்கார் நடைமுறையில் சுதந்திரமான ஒரு இந்திய தேசீய சர்க்கார் என்று சொல்வதையோ அல்லது இன்றைய சூழ் நிலையில் அரசியல் நிர்ணய சபை சுதந்திர இந்தியாவின் அரசியல் திட்டத்தை வகுத்துவிட முடியும் என்று சொல்வதையோ கேட்டு நாம் ஏமாந்து விடக்கூடாது.

"பிரிட்டிஷ் மந்திரிசபையின் எந்தத் திட்டத்தையும் சோஷலிஸ்டுகளாகிய நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. தன்னுடைய ஒவ்வொரு திட்டத்தின் மூலமும் பிரிட்டிஷ் ஆட்சி புதிய பலம் பெற்றுக்கொள்கின்றது என்பது எங்களுடைய அசைக்க முடியாத அபிப்பிராயமாகும்.

ஆனாலும், இடைக்கால சர்க்காரிலிருக்கும் பண்டித நேருவின் கைகளை நாம் பலப்படுத்த வேண்டும். இது நம்முடைய தேசீயக் கடமையாகும். இடைக்கால சர்க்காரிலிருந்து பண்டித நேரு வெளியேறி விட்டால், நாடெங்கும் புரட்சித் தீ கொழுந்து விட்டெறியச்

செய்ய வேண்டியது நமது முக்கியமான பொறுப்பாகும். அந்தத் தீயிலேதான் நாம் பிரிட்டிஷ் ஆட்சியையும், அதன் தீய சிருஷ்டியான பிரிவினை வாதத்தையும் சுட்டெரிக்க முடியும். அதற்கு இப்போது முதற்கொண்டே நாம் ஆயத்தங்களைச் செய்து தயராக இருக்க வேண்டும்.

"நேர்மையாகவும், நிச்சயமாகவும் இந்தக் காரியத்தைச் சாதிக்க வல்லது மக்களின் புரட்சியேயாகும். **பொது மக்களின் அரசியல் நிர்ணய சபையும்,** ஜனநாயக ஐக்கிய சோஷலிஸ்டு குடியரசும் இப்புரட்சியின் வெற்றியில்தான் ஜனிக்க வேண்டும்; ஏன்? ஜனிக்க முடியும்.

"பிரிட்டிஷ் திட்டங்களைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டு விட்டதால் போராட்டமேயில்லை என்று நினைப்பது தவறாகும். நமது தலையின் மீது பெரும் பாரமாக இருக்கும் பிரிட்டிஷ் ஆட்சி பூரணமாக மாற்றப்படும் வரை சுதந்திரம் என்பது வெறும் பகற் கனவாகும். ஆகவே, விவாதத்தினலோ அல்லது விட்டுக் கொடுப்பதினலோ நாம் பரிபூரண சுதந்திரத்தைப் பெற்றுவிட முடியாது. இதை நாம் மறந்துவிடக்கூடாது.

"சோதனைகள் நிறைந்த எதிர்காலம் நமக்கு முன்னே தென்படுகிறது; ஆனலும்,

அதைப் பிரகாசமானதாக்க நம்மிடையே தான் சக்தியு முள்ளது. நமது முடிவான விடுதலைப் போராட்டத்தை நாம் நடத்தியே யாக வேண்டும். இதைச் சொல்வதில் தவறு ஒன்று மில்லை.

"தேசம் - மக்கள் - இவர்களின் ஐக்கியம் குலைந்து வருவதையும், நமது பொருளாதார நிலைமை மோசமாகி வருவதையும் உலக நிலைமை பயங்கரமான இன்னுமொரு யுத்தத்தை நோக்கி விரைந்து கொண்டிருப்பதையும் இன்று நாம் பார்க்கிறோம். நமது சுதந்திரத்துக்கு நாம் முடிவான முயற்சியில் இறங்கியாக வேண்டிய காலமும், அவசியமும் நம்மை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த வேளைக்கு நம்மை ஆயத்தப் படுத்திக் கொள்வதுதான் நமது கடமையாகும். அதுவே எல்லா விடுதலைப் போர் வீரர்களின் கடமையுமாகும்.

"பிரிட்டிஷாரின் சூழ்ச்சி முறைகள் அம்பலமாகி விட்டன. இவை நமக்குக் கண்கூடாகத் தெரிகின்றன. இந்நிலையில் அதிகாரமில்லாத ஒரு இடத்தில் 'ஆட்சி' புரிவதாகக் காங்கிரஸ் தன்னையே ஏமாற்றிக் கொள்ள முடியுமா? அது முடியவே முடியாது. அது வெளியேறி, நமக்குத் தீரமான புரட்சிப் பாதையில் தலைமை தாங்கியே ஆகவேண்டும்.

"காங்கிரஸ் தலைமை நல்ல தருணத்தில் தயங்கினாலும் மக்கள் தயங்கமாட்டார்கள். மக்களின் உணர்ச்சியைத் தேக்கத் தலைவர்கள் நினைத்தால், அத் தலைவர்களையும் தள்ளிவிட்டு மக்கள் முன்னேறுவார்கள். இது மட்டும் நிச்சயம்!

"காங்கிரஸின் பாதை - தெளிவான பாதை இதுவே; தேசியப் புரட்சிப் பாதையும் இதுதான்.

"காங்கிரஸ் 'பூர்ஷுவா'க்களுடைய (முதலாளிகளுடைய) ஸ்தாபனம் என்றும், அதனுள் இருந்து கொண்டு இந்தப் புரட்சியைச் சாதிக்க முடியாது என்றும், ஒரு அபிப்பிராயம் சொல்லப் படுகிறது. மார்க்ஸிஸத்தை வியாக்யானம் செய்யும் ஏகபோக உரிமை தங்களுக்குத்தானிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு பேசும் கம்யூனிஸ்டுகள் இவ்வாறு கூறினால், நாம் கவலைப்படவேண்டாம். வெளியார் உத்தரவுப்படி நடக்கும் இவர்கள் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி எல்லாம் பேசுவார்கள். எனவே, இவர்களுடைய பேச்சுக்கோ அல்லது தூற்றலுக்கோ நாம் மதிப்புக் கொடுக்க வேண்டியதில்லை. தூய்மையான தேசிய தீவிரவாதிகளில் சிலர் கூட இந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கின்றனர். இந்த எண்ணம் அவர்களுடைய பீதியையே காட்டுகிறது; இந்

நாட்டிலுள்ள தேசீய சமூக சக்திகளின் ஸ்தாபனமாக காங்கிரஸ் விளங்குகிறது. மக்களிடையே அது மகத்தான செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. ஆகவே, பொதுஜன இயக்கத்தை நடத்த காங்கிரஸைவிடச் சிறந்த ஆயுதம் வேறு ஒன்றும் கிடையாது. அதை நமது வழிக்கு-புரட்சி வழிக்குத் திருப்புவதில் தான் நாம் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். இதை உணராது, காங்கிரஸை, அதில் ஒரு சில பணக்காரர்களின் ஆதிக்கம் இருப்பதால் மட்டும், முதலாளிகளின் ஸ்தாபனம் என்றும், அதிலிருந்து கொண்டு எந்தப் புரட்சியையும் சாதிக்க முடியாது என்றும் கூறுவது பொருந்தாது; நேர்மையுமாகாது. சுதந்திரத்தைப் பெற்ற பின்பு இந்தியாவில் முதலாளிகள் ஆளத்தொடங்கி விட்டால் என்ன செய்வது என்று இன்றே பயந்துகொண்டு, சுதந்திரமே வேண்டாமென்று நாம் சொல்லிவிட முடியாது! அதுபோலத்தான், காங்கிரஸையும் முதலாளிகளின் ஸ்தாபனம் என்று நாம் அழைக்கவும் முடியாது. ஜனங்களின் பலத்தில் நம்பிக்கையில்லாதவர்கள் - ஜனங்களின் பலத்தைத் திரட்ட முடியாதவர்கள் - 'புரட்சி' யென்றும், 'சோஷலிஸம்' என்றும், 'சிந்தையில் எண்ணமின்றிப் பேசுகிறவர்கள் - இவர்களைத் தவிர மற்ற எந்தப் புரட்சி வீரனும் காங்கிரஸை விட்டு விலக மாட்டான்; தவிர்க்கமுடியாத ஒரு

நிலைமை வந்தாலொழிய அதற்குப் போட்டியாக நிற்கவும் மாட்டான். ஆனால், காங்கிரஸ், இனி மேல் முதலாளிகள் - பாட்டாளி மக்கள் - இந்த இருபிரிவுகளுக்குமே பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ள முடியாது என்பதை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

**[இன்று, ஒரு புதிய நிலைமை ஏற்பட்டு விட்டது. மக்களின் பலத்தால் வளர்ச்சியடைந்துள்ள காங்கிரஸ் ஸ்தாபனத்தில் முதலாளிகளின் ஆதிக்கம் மட்டுமே, இதுவரை இருந்து வந்தது. அதனால் தான் சோஷலிஸ்டுகள், காங்கிரஸை, ஒரேயடியாக, முதலாளிகளின் ஸ்தாபனம் என்று கூருமலிருந்தார்கள். ஆனால் காங்கிரஸைத் தங்களுடைய ஸ்தாபனமாக்கிக் கொண்டுவிட 'தேசீய' முதலாளிகளுடன் இதர முதலாளிகளும் கூட்டுச் சேர்ந்து விட்டார்கள். இவர்களுடைய செல்வாக்குக்குப் பணிந்திருக்கும் சில பிற்போக்காளர்கள் காங்கிரஸுக் குள்ளிருக்கும் சோஷலிஸ்டுகளை விரட்டிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிருர்கள். அதிகார மாற்றம் இனி தவிர்க்க முடியாதது. இந்த நிலையில் காங்கிரஸைப் பிடித்துக் கொண்டால் தான் தங்களுடைய சவுகரியங்களைக் காத்துக் கொள்ள முடியும் என்று முதலாளிகள் நினைக்கத்தானே செய்வார்கள்!]**

"இன்னொரு பிரச்னையிலும் நமக்குக் குழப்பம் ஏற்படுகிறது. அதுதான் அஹிம்சையைப் பற்றிய குழப்பமாகும். எந்த சமயத்திலும் அஹிம்சையைக் கைவிட காந்திஜீ தயாராயில்லை. அவருக்கு அஹிம்சை ஜீவா

தாரமான லட்சியமும், (IDEAL) நம்பிக்கையுமா கும். காங்கிரஸுக்கு அப்படியல்ல. அஹிம்சை காங்கிரஸுக்கு ஒரு கொள்கையே. (POLICY) காங்கிரஸுக்கு எப்படியோ, காங்கிரஸ் சோஷ லிஸ்டுகளாகிய நமக்கும் அப்படித்தான். ஆனால் பேடித்தனத்தைத் தத்துவ நுணுக்கங்களால் மறைத்து மக்களின் புரட்சியின் வளர்ச்சியைத் தடுத்து, அதனைத் தோல்வியுறச் செய்ய வேலை செய்யும் சக்திகளே அதிகமாக அஹிம்சையின் பெயரைச் சொல்லிக் கொள்ளுகின்றன. இதை நாம் அனுமதிக்க முடியாது.

"சந்தேகம், சுயநலம், பதவி மோகம் - இவை எந்தப் புரட்சி வீரனையும் மயக்கிவிட நாம் இடம் கொடுக்கக்கூடாது. ஆகஸ்டு புரட்சி வீரர்களின் 'காம்பில்' கூட பதவி ஆசை புகுந்திருக்கிறது. இதைப் பார்க்கும் போது என் உள்ளம் வேதனை அடைகிறது. தியாகத்தால் பெற்ற சக்தியை பதவிகளுக் காக அடித்துக் கொள்ளுவதில் சிதறடித்து விடவேண்டாம் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு சில பதவி வெறியர்கள் நமது சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறார்கள். அவர்களுக்கு நாம் கருவிகளாக இருக்கக்கூடாது; அவர்களின் சூதாட்டச் சுழலில் அகப்பட்டுக்கொள்ளவும் கூடாது."

அதிகரித்திருக்கும் காங்கிரஸின் செல்வாக்கை அழிக்கக் கிளம்பியிருக்கும் அபாயங்களிலிருந்து காங்கிரஸைக் காப்பாற்றவேண்டியது ஒவ்வொரு தேசீய புரட்சி வீரனின் கடமையாகும் என்பதையே ஜெயப்பிரகாஷ் மிகத் தெளிவாக விளக்கிவிட்டார்.

சுய நலனுக்காகவும், கட்சி வெறியைப் பலப் படுத்திக்கொள்ளவும் 'தேசியம்', 'சர்வ தேசியம்' பேசும் ஆபத்தான மனிதர்கள்தான் ஜெயப்பிரகாஷைப் பற்றித் தாறுமாருகப் பேசுவர்; எழுதுவர். மார்க்ஸீய திருஷ்டியில் தன்னுடைய தேசிய, சர்வ தேசியக் கொள்கைகளை ஜாக்கிரதையாக நிர்ணயித்துக்கொள்ளும் எவரும் ஜெயப்பிரகாஷின் வழியையே ஒப்புக்கொள்வார்கள்.

ஜெயப்பிரகாஷ் ஒரு களங்கமற்ற, துணிவு நிறைந்த புரட்சி வீரர்; ஏகாதிபத்திய - பாஸிஸ எதிர்ப்பாளர்; ஒரு சோஷலிஸ சமுதாயத்தில் தான் சுபிட்சத்தையும், அமைதியையும் காண முடியும் என்று உறுதியாக நம்பும் லட்சியவாதி; இந்த லட்சியத்தை அடைய தயவு தாட்சண்யமின்றிப் போராடும் ஒரு பரிசுத்தமான கர்மவீரர்.

1946, டிஸம்பர் 12ந் தேதி காசியில் இவர் கொட்டிய போர் முரசுப் பிரசங்கத்தையும்

பின் வருமாறு சேர்த்திருக்கிறேன். வாசகர்கள் இதனால் பொறுமையை இழந்துவிட மாட்டார்கள் என்பது என் துணிவு.

## மூன்று மாதங்களில் பிரிட்டனைப் பணியவைக்கும் புரட்சித் திட்டம்

காசிப் பொதுக் கூட்டத்தில் ஜெயப்பிரகாஷ் அறிவிப்பு: "சர்க்காரைக் கைப்பற்றிக் குடியரசை ஸ்தாபிப்போம்." "சுதந்திரப் போரை மதச்சண்டையாக்க பிரிட்டிஷ் சூழ்ச்சி."

காசி, டிச. 12-

அரசியல் நிர்ணய சபை தயாரிக்கும் அரசியல் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர பிரிட்டிஷ் சர்க்கார் அனுமதி மறுக்குமானல், நாட்டில் சில மாதங்களில் புரட்சியை நடத்துவதற்கான திட்டம் தயாராக இருக்கிறதென்று காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சித் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் இன்று நடந்த பொதுக் கூட்டத்தில் அறிவித்தார்.

இத்திட்டம் காங்கிரஸின் "அஹிம்சை" கொள்கையை மீறுவதாக இராதென்று கூறிவிட்டு "யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் வைஸ்ராயின் கீழ் டில்லியில் தேசிய சர்க்கார் ஏற்படுத்தினல் ஜெர்மனியரையும் ஜப்பானியரையும் கொல்ல காங்கிரஸ் அதே அஹிம்சைக் கொள்கையின் கீழ் ஒப்புக் கொண்டது" என்றார்.

"வரப்போகும் போராட்டத்தில் சிறைகளை நாங்கள் நிரப்பப் போவதில்லை. ஏனெனில் நமது எதிரிகளைக் கைது செய்யக்கூடிய பலம் நம்மிடம் இப்போதிருக்கிறது. நமது போர் முரசைக் கொட்டினவுடன், எல்லா இடங்களிலும் ஏக காலத்தில் பொது மக்கள் காரியத்திலிறங்க வேண்டும். உடனே பிரிட்டிஷ் ராஜ்யம் இருந்த சுவடு கூடத் தெரியாமல் செய்ய வேண்டும்" என்றார்.

கூட்டத்தில் தனக்களிக்கப்பட்ட ரூ 6400 பண முடிப்புக்காக நன்றி கூறிவிட்டு, "இதிலுள்ள ஒவ்வொரு பைசாவும் வரப்போகும் பேராட்டத்திற்காகவே உபயோகிக்கப்படும்" என்று அறிவித்தார்.

இப்போதுள்ள ராஜீய நிலவரத்தை விளக்கிக் கூறிவிட்டு, அரசியல் நிர்ணய சபையின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டு வருவது சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்கார் சமீபத்தில் வெளியிட்ட வியாக்கியானத்தைக் குறிப்பிட்டார். "அ. நீ சபையின் தீர்மானங்களை பிரிட்டிஷ் சர்க்கார் அங்கீகரிக்காவிடில், சுதந்திரப் போராட்டத்தை நடத்துவதைத் தவிர இந்தியாவுக்கு வேறு மார்க்க மில்லை. இன்றைய தினம் பிரிட்டிஷார் செய்யும் சூழ்ச்சி இதுதான். நமது சுதந்திரப் போராட்டத்தை ஜாதிச் சண்டையாகத் திருப்பி விடப்

பார்க்கிறார்கள். பிரித்தாளும் மித்ரபேதத்தில் முஸ்லீம் லீகைத் தங்கள் கருவியாக பிரிட்டிஷார் உபயோகிக்கிறார்கள். வங்காளத்திலுள்ள ஹிந்துக்களுக்கும், பீஹாரிலுள்ள முஸ்லிம்களுக்கும் உண்மையான எதிரிகள் பிரிட்டிஷார்தான். வங்காள, பீஹார் சம்பவங்களுக்காக ஒருவருக்கொருவர் பழிவாங்குவதென்றால், பிரிட்டிஷார் வலையில் விழுந்தவர்களாவோம்.

## இரு முனைகளில் பிரிட்டிஷ் முயற்சிகள்

"சுதேச சமஸ்தானங்களில் பிரஜைகளின் ஸ்தாபனங்களை ஒடுக்குவதில், அரசியல் இலாகாவின் தலைவர் என்கிற ஹோதாவில் வைசிராய் ஈடுபட்டிருப்பதாக நான் கருதுகிறேன். மாகாணங்களில் பிரித்தாளுவதும் சுதேச சமஸ்தானங்களில் மக்களை ஒடுக்குவதுமான பிரிட்டிஷ் முயற்சியை முறியடிக்க வேண்டுமானால், அதைப் புரட்சி முறையில் தான்செய்ய முடியும். நாடு பூராவும் வியாபிக்கும் புரட்சிக்குத் தயாராக இருங்கள் என்பதே நான் சொல்லக் கூடிய யோசனை.

யோசித்துள்ள புரட்சியை ஸ்தூலமாகத் தெரிவித்து ஸ்ரீ. ஜெயப்பிரகாஷ் பேசியதாவது:--

வரப்போகும் போராட்டத்தில் சிறைகளை நிரப்ப வேண்டியதில்லை. நமது எதிரிகளைக்

கைது செய்யக் கூடிய பலம் நமக்கு இப்போது இருக்கிறது. அ. நி. சபை முடிவுகளை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக் கொள்ளா விட்டால், உலகப் பொது மக்கள் கருத்தில் நமது போராட்டம் மிகவும் மேன்மையானதாக விளங்கும். இப்போதிருந்தே ஏற்பாடுகள் செய்து வந்தால், இன்னும் சில மாதங்களில் தயாராக இருப்போம். போர் முரசு கொட்டினவுடன் மக்கள் ஏக காலத்தில் காரியத்தி லிறங்கி, உடனே பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் அடிச்சுவடு கூட தெரியாமல் செய்யும்படி ஏற்பாடுகள் இருக்க வேண்டும்.

## போர்த் திட்டம்

"சகல சர்க்கார் காரியாலயங்களையும், ஸ்தாபனங்களையும் கைப்பற்றிக் கொண்டு, ஜன ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும். புது சர்க்காரிடம் வேலை செய்வதற்கு ஒப்புக்கொள்ளும் உத்யோகஸ்தர்களைக் கொண்டு இதை நடத்த வேண்டும். பிரிட்டிஷ் -- அன்பு பூண்ட அதிகாரிகளை யெல்லாம் அகற்றி விட்டு அவர்களுக்குப் பதில் புது அதிகாரிகளை நியமிக்க வேண்டும். புது சர்க்காரை நடத்துவதற்கான வரிகளை புது சர்க்காரே தண்ட வேண்டும். அது போலீஸ் படை, ராணுவப்படை எல்லாவற்றையும் அமைக்க வேண்டும். உள்ளூர் கொல்லர்கள் செய்யும் துப்பாக்கிகள் உள்பட

சகல விதமான ஆயுதங்களையும் அவர்களுக்குத் தரவேண்டும்.

புரட்சி ஆரம்பித்தவுடன் நாடு பூராவும் வேலை நிறுத்தம் நடத்த வேண்டும். இத்தகைய போராட்டம் (3) மூன்று மாதம் நடந்தால் போதும். நாடு பூராவிலும் சாசுவதமாக பிரிட்டிஷ் சர்க்கார் இல்லாமல் போய் விடும். இந்தியாவில் நடக்கும் இதை யெல்லாம் பார்த்துக் கொண்டு உலகம் சும்மா இராது.

"நான் விளக்கிய இத் திட்டம் காங்கிரஸின் அஹிம்ஸா தர்மத்துக்கு விரோதமானதல்ல. ஏனெனில், ஏற்கனவே யுத்தகாலத்தில், பிரிட்டிஷ் வைஸ்ராயின் தலைமையில் டில்லியில் வெறும் தேசிய சர்க்கார் அமைத்தால் கூடப் போதும். அதற்குப் பதிலாக ஜெர்மனியரையும், ஜப்பானியரையும் கொல்ல காங்கிரஸ் தயாராக இருந்தது.

"உங்கள் புத்திரர்கள், சகோதரர்கள், பர்த்தாக்கள் சுதந்திரப் போராட்டத்தில் இறங்குவார்களானால், சகோதரிகள் கண்ணீர் விட்டுப் புலம்பக் கூடாது. அவர்கள் நெற்றிகளில் வீரத் திலகமிட்டுப் போர்க்களத்துக்கு அனுப்ப வேண்டும்" என்று பெண்மணிகளைக் கேட்டுக் கொண்டார்.

## பிரிந்து போகத்தான் வேண்டுமா ?

இன்று, இந்தக் கேள்வியை ஒவ்வொரு இந்தியப் புரட்சிக்காரனும் கேட்க ஆரம்பித்து விட்டான்.

காங்கிரஸ் மஹாசபையிலிருந்து பல்லாயிரக் கணக்கான இந்திய வாலிபர்களுக்கு சுதந்திர ஞானப் பாலூட்டி வளர்த்த தாய் ஸ்தாபனத்திலிருந்து - இந்தியப் பொதுமக்களை சுதந்திரத்திற்காக நிமிர்ந்து போராடச் செய்த ஸ்தாபனத்திலிருந்து - தேசியப் புரட்சிக்காரர்களை வெளியேற்றி விட வேண்டுமா? என்பது தான் இன்றைய காரசாரமான வாதமாயிருக்கிறது.

இந்திய சோஷலிஸ்டுகளின் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் இவ்வாண்டு பிப்ரவரி மாதம் 17ந் தேதியன்று நடைபெற்ற பீஹார் மாகாண 6வது சோஷலிஸ்டுகளின். மகாநாட்டில் இந்தக் கேள்விக்கு பின்வருமாறு பதிலளித்திருக்கிறார் :-

" காங்கிரஸ் தன்னுடைய புரட்சிகரமான கொள்கையைக் கைவிட்டுச் சட்ட ரீதியான

பாதையில் நடக்க ஆரம்பித்தால் சோஷலிஸ்டு கட்சி காங்கிரஸிலிருந்து வெளியேற வேண்டி யிருக்கும்''

மார்ச்சு மாதம் 1ந் தேதியன்று கான்பூரில் பல ஆண்டுகளுக்குப் பிறகு கூடிய அகில இந்திய சோஷலிஸ்டுகளின் 5 வது மகா நாட்டி லும், மேலே சொல்லப்பட்ட அபிப்பிராயத் தையே ஜெயப்பிரகாஷ் அழுத்தமாக தெளி வாக்கி விட்டார்.

சோஷலிஸத்தின் விரோதிகள் தேசியப் போர்வையில் கொம்மாள மடிக்கும் காலம் இது. அவர்களுடைய ஆதிக்கம் காங்கிரஸுக் குள் வியாபிக்க ஆரம்பித்து விட்டது. அவர்கள் மட்டுமே- அவர்களுடைய 'தேசீய'ப் பத்தி ரிகைகள் மட்டுமே சோஷலிஸ்டுகளின் இந்தப் போக்கைக் கேலி செய்யலாம்.

**'காங்கிரஸ்'** என்ற பதத்தை சோஷலிஸ்டு கட்சி சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று காங்கிரஸ் தலைமையிலுள்ள ஏக போக உரிமை பெற்றவர்கள் கூறினார்கள். இந்த ஒரு பதத் தின் செல்வாக்கைக் கொண்டுதான் மக்கள் பலத்தைத் திரட்ட முடியும் என்ற அளவுக்கு அவ்வளவு பலமற்றவர்களாகத் தங்களைக் கருதிக் கொள்ள ஜெயப்பிரகாஷுக்கும் அவரைப் பின்பற்றும் சோஷலிஸ்டுகளுக்கும்

இஷ்டமில்லை. இந்தக் கேவலமான நிலைமையில் உண்மையில், இவர்களில்லை. சோஷலிஸ்டு களின் தெளிவான அறிவும், சுருசுருப்பும் தியாக உணர்ச்சியும் மாசற்ற காங்கிரஸ் பக்தியும் - இந்திய மக்களைக் கவர்ந்திருக் கின்றன என்பதை இவர்கள் நன்ருக அறிந்தி ருக்கிருர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, இவர்களுடைய நேர்மையான உணர்ச்சியை அறை கூவி அழைக்க எவருக்கும் துணிவு இருக்க முடியாது. அதனல் சிந்தனையில் காங்கிரஸ் காரர்களாகவே இருந்து கொண்டு; 'காங்கிரஸ்' என்ற பதத்தைத் தங்களுடைய கட்சியின் பெயருடன் இணைப்பதில்லை என்று கான்பூர் சோஷலிஸ்டுகளின் மகாநாடு முடிவு செய்து விட்டது.

இந்த முடிவு காங்கிரஸில் உள்ள ஏக போக உரிமைக்காரர்களுக்கு நிம்மதியையும், மகிழ்ச்சியையும் நிச்சயமாகக் கொடுத்தி ருக்கும்! கொள்ளை லாபம் அடிக்கும் முதலாளி களையும், சந்தர்ப்ப வாதிகளையும், பதவி மோகம் பிடித்தவர்களையும் காங்கிரஸுக்குள் வைத்திருப்பதில் இவர்களுக்கு எள்ளளவும் ஆட்சேபணையில்லை! இந்தக் கும்பல் தங்களின் அதிக்கிரமங்களைத் தங்கு தடங்கலன்றி நடத்து வதற்கு காங்கிரஸ் பெயரையும் உபயோகப் படுத்திக் கொள்ளலாம்! தேசியக் கொடி யையும் பறக்க விட்டுக் கொண்டிருக்கலாம்!

'சட்ட ரீதியான முறையில் சுதந்திரம் கிட்டாது. பரிபூரண விடுதலையைப் பெறப் போராடியே யாக வேண்டும். இதற்கு நாம் தயாராயிருக்க வேண்டும்' என்ற சோஷலிஸ்டுகளின் இடைவிடாத முரசொலி, இந்தக் காங்கிரஸ் ஏக போக உரிமைக்காரர்களைக் கலக்க வைத்து விட்டது. 'மாய' அதிகாரம் - பதவி - இவைகளில் ஆழ்ந்து போன காங்கிரஸ் மிதவாதிகளும், ஏக போக உரிமைக் காரர்களும், சோஷலிஸ்டுகளின் செல்வாக்கை ஒழித்துவிடத் தீர்மானித்து விட்டார்கள். இதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. இவர்கள், 'கட்டுப்பாடு' என்ற சாதனத்தைத் தங்களின் ஆயுதமாக (சோஷலிஸ்டுகளுக்கு எதிராக) உபயோகப்படுத்திக் கொள்ளத் தீர்மானித்து விட்டார்கள்.

இரு முனைகளில், இந்தக் கூட்டம் சோஷலிஸ்டுகளை காங்கிரஸிலிருந்தும் மக்களிடமிருந்தும் பிரித்து விட வேலை செய்கின்றது.

மக்கள் சர்க்காராக ஆட்சி நடத்தாமல் பழைய பாணியிலேயே அதிகாரம் செலுத்தும் காங்கிரஸ் மந்திரி சபைகள், "உழுகிறவனுக்கே நிலம் சொந்தம்; பொருள் உற்பத்தி செய்கிறவனுடையதே பணம்" என்ற கோஷங்களுடன் சுதந்திரத்துக்கும் ஜனநாயக சோஷலிஸத்துக்கும் மக்களைத் திரட்டும் சோஷலிஸ்டு

களை அவசரச் சட்டங்களின் மூலம் ஒடுக்க முனைந்து விட்டன. இது ஒரு முனைத் தாக்குதல்.

"காங்கிரஸுக்குள் மாறுபட்ட அபிப்பி ராயம் கொண்ட கட்சிகள் இருக்கக் கூடாது" என்கிறது **திவாகர் கமிட்டி** அறிக்கை. இதையே சமீபத்தில் **அலகாபத்தில்** கூடிய மாகாண காங்கிரஸ் தலைவர்கள் - காரியதரிசிகள் மகா நாடும் ஊர்ஜிதம் செய்து விட்டது. இது மற்றொரு முனைத் தாக்குதல்.

காங்கிரஸுக்குள் - அதன் முன்னணிப் போராட்டப் படையாக இருக்கும் சோஷலிஸ்டு களை வெளியேற்ற நடை பெறும் சூழ்ச்சி எப்படி முடியும்? என்று பொறுத்துப் பார்ப் போம். இந்த உணர்ச்சி காங்கிரஸுக்குள்ளி ருக்கும் மிதவாதிகள் - ஏகபோக உரிமைக் காரர்களுக்கு நாளுக்கு நாள் வலுவடைந்து கொண்டு வருகிறது என்பதை ஜெயப்பிரகாஷ் உணர்ந்து தான், காங்கிரஸ் காரியக் கமிட்டியி லிருந்து விலகி விட்டார். அவர் ராஜிநாமாவை மார்ச் 6ந் தேதி கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி ஏற்றுக் கொள்ளப் பட்டுவிட்டது. ஆனால், காங்கிரஸிலிருந்து சோஷலிஸ்டுகள் அடியோடு பிரிந்து போக வேண்டியது தானா? என்பதை காங்கிரஸ் மஹா சபையே முடிவு கட்ட வேண்டும். அது அவர்களுடைய பொறுப்பாகும்.

ஒன்று மட்டும் நிச்சயம். சோஷலிஸ்டுகள் இந்திய கம்யூனிஸ்டுகளைப் போல தேசியத்துக்கே அபாயமாக நிற்பவர்களல்ல; சந்தர்ப்பவாதிகளுமல்ல; பொதுமக்களைச் சுரண்டி வாழ்கிறவர்களுமல்ல. இவர்களையும் இவர்களுடைய சாதனைகளையும் இந்திய மக்கள் நன்றாக அறிந்துகொண்டு விட்டார்கள். காங்கிரஸைப் புரட்சிப் பாதைக்குத் திருப்புவதை விட்டு, அதற்காகவே அல்லும் பகலும் உற்சாகத்துடன் உழைத்துவரும் சோஷலிஸ்டுகளை வெளியேற்றும் வேலையில் காங்கிரஸ் தலைமை இறங்குமானால், சோஷலிஸ்டுக் கட்சியே பலம் பெறும்; காங்கிரஸ் ஒருசில ஏகபோகிகளின் 'சட்டப்படி' நடக்கும் குறுகிய ஸ்தாபனமாகிவிட நேரிடும் என்பது மட்டும் நிச்சயம்.

இந்நிலையில் "1948ல் வெளியேறி விடுவோம்" என்ற பிரிட்டிஷ் சர்க்காரின் புதிய அறிக்கை புதியதொரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. அதிகார மாற்றம் எப்படியும் ஏற்பட்டே தீரும்படியான ஒரு நிர்ப்பந்த நிலைமையை ஏற்படுத்தவும், அவ்வதிகாரத்தைப் பாட்டாளிப் பொதுமக்கள் கையில் மாற்றுவதற்கும் நாம் சித்தமாயிருக்க வேண்டும். வளர்ந்து வரும் செல்வாக்கை ஸ்திரப்படுத்தி, முடிவான போராட்டத்துக்கு மக்களை ஆயத்தப் படுத்தும் வேலையில் முழு மூச்சுடன் இறங்கி

இம்மாதிரியான விளைவு நேரிடாதபடி, விவசாயிகள்-தொழிலாளிகள்-மாணவர்கள் இவர்களிடையே ஜெயப்பிரகாஷின் நான்கு அம்சத் திட்டங்களை (1. தேசமுழுதும் ஒற்றுமை இயக்கம். 2. பிரிவினையின் அபாயத்தை முஸ்லிம்களிடையே பிரசாரம் செய்வது. பாகிஸ்தானை திணிக்க முற்பட்டால் மேற்கு வங்காளத்தினரையும், கிழக்கு பஞ்சாபினரையும் எதிர்க்கச் செய்தல். விவசாயிகள் - தொழிலாளிகளிடம் அரசியல் அதிகாரம் சேருவதற்காக அவர்களைத் திரட்டல்) நிறைவேற்ற நேர்மையுள்ள, தியாக உணர்ச்சி மிகுந்த, நிச்சயமான கருத்துக்களைக் கொண்ட சோஷலிஸ்டுகளே இன்றையத் தேவையாகும். இந்தத் தேவையை ஜெயப்பிரகாஷ் நிச்சயமாய் நிறை வேற்றுவார்.

பூரண விடுதலை வேண்டும் என்ற உணர்ச்சியுடன் துடிதுடித்துக் கொண்டிருக்கும் இந்தியப் பாட்டாளி வர்க்கம், ஜெயப்பிரகாஷின் தலைமையில்தான் தங்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்று நம்பிக்கையுடனிருக்கிறார்கள். இந்த நம்பிக்கை வீணாகாது.

நவபாரதம் பூரண ஒளியுடன் கிளம்பப் புரட்சித் தலைவர் ஜெயப்பிரகாஷ் வழிகாட்டுகிறார். அவ்வழியைப் பின்பற்றும் எந்த இந்தியனும் பலனே அடைவான்.

---

329

S. Ma